AA5
97

C

D
Y21,31'N96.
N96.2.3.
21892

வெளியீடு 19-12-96 Issued 19-12-96

445/97.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 28, 1996 – தொகுதி 2 – எண் 3

Tuesday the 28th May, 1996 – Volume 2 – No. 3

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 28-5-1996

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) நெல்லை - கட்டபொம்மன் மாவட்டம், வெள்ளானைக்கோட்டை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நகைகள் கொள்ளை போனது குறித்து. | 229-232 |
| (ஆ) திண்டுக்கல் அருகே மேட்டுப்பட்டியில் இரு பிரிவினரிடையே நடந்த கலவரம் குறித்தும், காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தது குறித்தும். | 232-241 |
| (இ) திருப்பூரில் வடக்குப் பகுதியில் குடிநீர் போர்வெல் வற்றிவிட்டதால், பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திலிருந்து தண்ணீர் விடவேண்டிய அவசியம் குறித்து. | 242-245 |
| 2. விதி 110-இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை— | |
| மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வெடிகுண்டு வெடித்தது குறித்தும், மதுரையிலே 10-10-1994 அன்று இந்து முன்னணித் தலைவர் திரு. ராஜகோபாலன் படுகொலை செய்யப் பட்டது குறித்தும் உள்ள வழக்குகளை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்க அரசு முடிவு எடுத்துள்ளது குறித்தும். | 245-247 |
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. | 247-256<br>258-347 |
| திரு. டி. மணி | 247-252 |
| டாக்டர் ஆ. ஞானசேகரன் | 252-256 |

| | பக்கங்கள் |
|---|---|
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. | |
| திரு. பி.என். வல்லரசு | 258-264 |
| திரு. சி. ஞானசேகரன் | 265-279 |
| * திரு. மா. இராமச்சந்திரன் | 281-287 |
| * திரு. அ.வ. அப்துல் நாசர் | 288-292 |
| திரு. சொ. கருப்பசாமி | 292-295 |
| * திரு. கோ.க. வீரப்பன் | 296-302 |
| திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 302-306 |
| திருமதி வாசுகி முருகேசன் | 306-310 |
| * திரு. எஸ் என். பாலசுப்பிரமணியன் | 310-318 |
| திரு. அ. வெங்கடாசலம் | 320-327 |
| திரு. எல். மூக்கையா | 327-333 |
| திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் | 333-336 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 336-342 |
| டாக்டர் பத்மா | 342-345 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) 25-5-1996 அன்று உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன் பேசிய சில சொற்களை நீக்க வேண்டுமென்ற ஆணை இரத்து செய்யப்படுதல். | 257 |
| (ஆ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக்கண்ணுறும் ஒரிசா மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு அவையின் சார்பில் வரவேற்பு. | 308 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 348 |


28921

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 15, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027**

**1996 மே 28, செவ்வாய்க்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவைக் கூடியது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:*

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்"*

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமை உடையோர் சுட்டிக்காட்டும் பணியை உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

### 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் வெள்ளானைக்கோட்டை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நகைகள் கொள்ளை போனது குறித்து.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சிறப்புக் கவன ஈர்ப்பு. நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், புளியங்குடி அருகே வெள்ளானைக் கோட்டையில் 19-5--1996 அன்று இரவு வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ரூபாய் 30 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளை போயிற்று என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

*திரு. இரா. தாமரைக்கனி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், புளியங்குடி அருகே உள்ள வெள்ளானைக்கோட்டையில் 19-5-1996 அன்று நள்ளிரவு ஒரு கும்பல் சுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில், வங்கியின் பின்பக்கம் உள்ள கதவையும், பூட்டையும் உடைத்து எச்சரிக்கை மணியை அறுத்து செயல் இழக்கச் செய்து, அந்த வங்கியில், பெட்டகத்தில் இருந்த தங்க நகைபெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே சென்று, பக்கத்திலுள்ள குளத்திற்குச் சென்று, பூட்டை உடைத்து அதிலிருந்த

ரூபாய் 30 லட்சம் பெறுமானமுள்ள நகைகளைத் திருடிச் சென்றதால், அந்தப் பகுதியிலுள்ள வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஆயிரக்கணக்கான உறுப்பினர்களிடமும், பொதுமக்களிடமும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து நான் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத் திருக்கிறேன். காவல் துறை அதிகாரிகள் 5 நாட்களில் சுமார் 7½ கிலோ தங்கத்தை மீட்டிருக்கிறார்கள். அது பாராட்டத்தக்கது தான். ஆனால் இன்னும் 600 கிராம் தங்கம் மீட்கப்படவில்லை என்று அவர்களுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். எங்கே திருட்டு நடந்தாலும், திருடு போனாலும் முழுத் தொகையையும் காவல் துறை அதிகாரிகள், நகை ஆனாலும் சரி, ரூபாய் ஆனாலும் சரி கொடுப்பதே கிடையாது. ஸ்டேஷன் செலவுக்கு என்று, டீசல் செலவுக்கு என்று எடுத்துக் கொள்வார்கள். அந்த மாதிரி 600 கிராம் நகை மட்டும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது காவல் துறை..(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கவன ஈர்ப்புத் அறிவிப்பு என்று இந்த அவைக்கு கொண்டு வந்தால் தங்களிடத்தில் எதை எழுதிக் கொடுத்தார்களோ அதைப் படித்துவிட வேண்டியது அவருடைய கடமை. உரிய அமைச்சர் அதற்குப் பதில் அளிப்பார். அதை விட்டுவிட்டு இதிலே ஒரு விவாதம் நடத்தவேண்டும் என்று சொன்னால், இந்த அவையினுடைய மற்ற அலுவல்கள் நிச்சயமாக தடுக்கப்படும் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 600 கிராம் நகையை காவல் துறை கைப்பற்றியதைக் கொடுக்கவில்லை. அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் அப்படிப்பட்ட தகவல் ஆதாரத்தோடு இருந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க வேண்டும். ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்த ஆட்சியில் மட்டும் அல்ல, எந்த ஆட்சி வந்தாலும் காவல் துறை அதிகாரிகள் இயற்கையாகச் செய்வதைத்தான் நான் சொல்கிறேனே தவிர உங்கள் ஆட்சியின்மேல் களங்கத்தை ஏற்படுத்துவதற்காக நான் சொல்லவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன், ஆதாரம் இருந்தால் என்னிடம் கொடுக்கலாம், அல்லது நம்பிக்கையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கலாம். நீங்கள் ஏற்கெனவே எழுதிக் கொடுத்ததைப் படித்து விட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது விளக்கம் தருவார்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சிவகிரி வட்டம், புளியங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வெள்ளானைக்கோட்டை கிராமத்திலுள்ள சுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில், 19-5-1996 அன்று இரவு அடையாளம் தெரியாத நபர்கள், பின்புறம் ஜன்னல் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து, இரும்பு பணப்பெட்டியுடன் இணைக்கப்பட்டிருந்த அவசர மணி இணைப்பைத் துண்டித்துவிட்டு, பணப்பெட்டியுடன் வெளியேறி, அருகிலுள்ள குளக்கரைக்குச் சென்று, பணப் பெட்டியை உடைத்து, அதிலிருந்த பொதுமக்களிடமிருந்து கடனுக்காகப் பெறப்பட்ட ரூபாய் 28 லட்சத்து 50 ஆயிரத்து 510 ரூபாய் மதிப்புள்ள 8152.9 கிராம் எடையுள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளார்கள். 20-5-1996 அன்று காலையில் வங்கியின் செயலாளர் கொடுத்த புகாரின் பேரில் புளியங்குடி காவல்நிலையக் குற்ற எண் 185/96, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 457, 380-இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 25-5-1996 அன்று விசாரணையில் கிடைத்த தகவலின்பேரில் முன் தண்டனைக் குற்றவாளி ரூபன் என்ற ரவி, வயது 22, தகப்பனார் பெயர் கோட்டைமலையான், புளியங்குடியைச் சேர்ந்தவர், கைது செய்யப்பட்டு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவரது இல்லத்திலிருந்து வங்கியில் களவு செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த களவு நகைகள் 7481 கிராம் கைப்பற்றப்பட்டன. இந்த வழக்கில் மீதமுள்ள களவு நகைகள் கைது செய்யப்பட்ட ரூபன் என்ற ரவியின் கூட்டாளிகளான பெரிய முருகன், வயது 25, சின்ன இசக்கி என்பவரின் மகன், தங்கராஜ், வயது 24, புளியங்குடி சின்னக்குட்டி என்பவரின் மகன் ஆகியவர்களிடமிருக்கிறது என்று விசாரணையில் தெரிகிறது. தலைமறைவாகியிருக்கும் குற்றவாளிகளையும், மீதமுள்ள களவு போன நகைகளையும் கண்டுபிடிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*முற்பகல் 9-35*

*இந்த வழக்கில், பொதுமக்களிடமிருந்து அடைமானமாகப் பெறப்பட்ட பொதுச் சொத்துக்கள், களவு போன ஐந்தே நாட்களில், உள்ளூர்*

காவல்துறை அதிகாரிகளின் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நேற்று, 27-5-1996 ஆம் தேதி, மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் கூட்டுறவு தனி அதிகாரி, கூட்டுறவு வங்கிகளின் இணைப் பதிவாளர் ஆகியோர் கலந்துரையாடி, இம்மாதிரி களவுகள் இனி நடக்காமல் தடுக்க வங்கிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்துப் பேசியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த முதல் கவன ஈர்ப்பு தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருந்தார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

## (ஆ) திண்டுக்கல் அருகே மேட்டுப்பட்டியில் இரு பிரிவினரிடையே நடந்த கலவரம் குறித்தும் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தது குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திண்டுக்கல் அருகே மேட்டுப்பட்டியிலுள்ள ஆரோக்கியபுரத்தில் நடந்த இனக்கலவரம் மற்றும் துப்பாக்கிச் சூடு குறித்தும், அதில் ஒருவர் உயிரிழந்தது குறித்தும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருப்பவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. மணி, சி. ஞானசேகரன், ம. அப்துல் லத்தீப், கே. சுப்பராயன், டாக்டர் கே. கிருஷ்ணசாமி, இரா. தாமரைக்கனி ஆகியோர் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களை பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-5-1996 ஆம் தேதி இரவு திண்டுக்கல் அருகே உள்ள சவுரிபாளையம், மேட்டுப்பட்டி கிராம மக்களுக்கு இடையே உள்ள முன் விரோதம் காரணமாக, சினிமாக் கொட்டகையில் இடம் பிடிக்கின்ற தகராறில் கட்டையாலும், தடியாலும் தாக்குண்டதில் ஆரோக்கியசாமி என்பவர் கொலையுண்டார். அதனையடுத்து, சவுரிபாளையத்திலுள்ள வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து சாலை மறியலிலே ஈடுபட்ட இரு தரப்பினரையும் கலைக்க, காவல் துறையினர் ஐந்து ரவுண்டு துப்பாக்கிச் சூட்டை நடத்தி 4 பேர் அதிலே படுகாயம் அடைந்து, ஜெகன் என்பவர் அந்த இடத்திலே துப்பாக்கிச் சூட்டின் காரணமாக உயிரிழந்திருக்கிறார்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலும்கூட, காவல் துறையினருடைய துப்பாக்கிகள் அடிக்கடி வெடித்து, 9 அப்பாவி மக்களை பலி கொண்டிருப்பது என்பது ஒரு நல்ல மரபாக இருக்க முடியாது. ஆகவே,



நான் மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், கடந்த கால நிகழ்வுகளைப் போலத் தொடர் நிகழ்வுகள் நடந்துகொண்டே இருப்பது, தமிழ்நாட்டு மக்களுக்கு வேதனையளிக்கக்கூடிய, அதிர்ச்சி தரக்கூடிய செய்தியாக இருந்து கொண்டிருக்கிறது. இன்று பத்திரிகையிலே பார்த்தாலும்கூட அறந்தாங்கியிலே ஒரு துப்பாக்கிச் சூடு. இந்தத் துப்பாக்கி என்பது சுடுவதற்குத்தான் என்று எண்ணிக் கொண்டு, போலீசார் தேவையில்லாமல் சுடுவதை நிறுத்தி, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் அதற்கு ஒரு வரைமுறையை ஏற்படுத்தி, துப்பாக்கிச் சூடு தேவை ஏற்படுகிற இடத்தில் மட்டும் என்ற நிலையில் வைத்து, சட்டம் ஒழுங்கை உடனடியாகக் காப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இரண்டு நிமிடத்திலே கருத்தைச் சொல்லி முடிக்க வேண்டும். திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன், நடந்த சம்பவம் குறித்த விவரங்களைக் கூறியிருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, துப்பாக்கிச் சூடு நடந்தது என்பது, தேவையான துப்பாக்கிச் சூடா, துப்பாக்கிச் சூடு நடத்தக்கூடிய அளவிற்கு அந்த இடத்தில் பதட்டம் இருந்ததா, என்பது.

*முற்பகல் 9-40*

அதோடு டாக்டர்களுடைய சவப் பரிசோதனை அறிக்கை நமக்கு பெரிய கவலையை ஏற்படுத்துகிறது. ஏனென்றால், குண்டு மார்பைத் துளைத்து, முதுகின் வழியாக வெளியேறிவிட்ட காரணத்தினால் உடலில் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று டாக்டர் அறிக்கை கூறுகிறது. அப்படியென்றால், மிகக் குளோஸ் ரேன்ஜிலே சுப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. போலீஸ்காரர்கள் அவ்வளவு குளோஸ் ரேன்ஜிலே, கலவரக்காரர்கள் இருந்தாலும் அவர்களைக் கைப்பற்றி அடக்கியிருக்கலாம், அவர்கள் கைப்பற்றும் அளவுக்கு சமீபத்திலே இருக்கும்போது, துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்பது டாக்டருடைய அறிக்கையிலிருந்தே நமக்குத் தெரிய வருகிறது. மேலும் மார்பை நோக்கிச் சுடக்கூடாது என்பது இத்தகைய சந்தர்ப்பங்களிலே நாம் கடைப்பிடிக்கின்ற ஒரு மரபாகும். காலிலே சுட வேண்டும். அவர்களை முடமாக்க வேண்டும். அந்த முயற்சிதான் போலீஸ்காரர்கள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் தாறுமாறாக சுடப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், சுட வேண்டும்

என்பதற்காகவே சுட்டிருக்கிறார்களோ என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, இதுகுறித்து உண்மையிலேயே துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அளவுக்கு அங்கே நிலைமை இருந்ததா என்பதை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவ்வாறு இல்லையென்றால் அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று பத்திரிகையிலே வருவது பொது அமைதிக்கு ஏற்புடையதல்ல. அதே நேரத்தில், இந்த ஆட்சியில் துப்பாக்கிச் சூடு தொடங்கிவிட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்குகிறார்களா என்பதுகூட ஒரு கேள்வியாக இருக்கிறது. இதுகுறித்து முறையான விசாரணையின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கம் தருவதோடு, மேற்கொண்டு விசாரணை நடத்தி உரிய முறையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், அப்படி நடவடிக்கை மேற்கொள்வாரா எனவும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு விஷயங்கள் குறித்து அரசிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன். ஒன்று, நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில், சட்டம் வரையறுத்து இருக்கின்ற வழிமுறைகளின்படி காவல் துறை செயல்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பிரம்படி நடத்தப்பட்டிருக்க வேண்டும், கண்ணீர்ப் புகை வீசப்பட்டிருக்க வேண்டும், முழங்காலுக்குக் கீழே சுட்டிருக்க வேண்டும். இவையெல்லாம் மீறி கட்டுப்படுத்த முடியாத இறுதிக் கட்டத்திலே மட்டுமே சுட்டிருக்க வேண்டும். இன்றைக்குக்கூட வந்திருக்கின்ற செய்தியில் வானத்தை நோக்கி, புதுக்கோட்டையிலே சுட்டிருக்கிறார்கள். ஆனால், அதே காவல் துறை, இங்கே கூட்டத்தில் நெஞ்சின் மையப் பகுதியிலே சுட்டிருக்கிறார்களென்றால் இதற்குக் காரணம் என்ன என்பதை விசாரணைக் கமிஷன் அமைக்கும் பட்சத்தில், கலவரத்திற்குக் காரணம் என்ன என்பது பற்றி மட்டும் ஆராயாமல், காவல் துறை சட்ட ரீதியாகச் செயல்பட்டதா என்கிற விஷயத்தையும் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தக் கலவரத்திற்குப் பின்னணியாக சாராய வியாபாரிகள் இருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது, அதுபற்றிய விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 ஆம் தேதி இரவு திண்டுக்கல்லில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு என்பது சரியான ஒரு நடவடிக்கை என்று தோன்றவில்லை. ஏனென்றால், முன்னெச்சரிக்கையாகச் செய்ய வேண்டிய சில நடவடிக்கைகள் உண்டு. ஆனால் அவையெல்லாம் மீறப்பட்டு துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. எனவே, இது சம்பந்தமாக ஒரு சரியான நீதி விசாரணை நடத்த வேண்டுமென்றும், அந்த துப்பாக்கிச் சூட்டிலே பலியான குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் அரசு கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் வீடு, தொழிற்சாலைகள் சேதாரம் அடைந்தவர்களுக்கும் ரூபாய் கொடுக்க வேண்டும். கலவரக் கும்பலால் உயிர் இழந்த ஆரோக்கியசாமி குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

*முற்பகல் 9-45*

அதுமட்டுமல்லாமல், பொது விசாரணை நடத்தவேண்டும். யார் மேலே தப்பு இருக்கிறது என்று நியாயமான முறையில் விசாரணை நடத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொது விசாரணை என்றால், சட்டசபை இப்போது நடந்துகொண்டு இருக்கிறது, பொது விசாரணை நடத்த வேண்டும் என்று சொன்னால் மாண்புமிகு முதல்வர் சட்டசபையில் அறிவிக்க வேண்டும். ஆனால், அந்த இடத்திற்குப் பார்வையிடச் சென்ற மாண்புமிகு அமைச்சர் பெரியசாமி அவர்கள் அந்த இடத்திலேயே பொது விசாரணை நடத்தப்படும் என்று சொல்லிவிட்டார்கள். இது சபையை அவமதிப்பதாகும். அது மட்டுமல்லாமல் போலீஸ் அத்துமீறிய செயல் நடந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சரிடமே சொல்லியிருக்கிறார்கள். புகார் கொடுக்கப் போன அந்த ஆரோக்கியசாமியுடைய தாயாரையே பூட்ஸ் காலால் எத்தியிருக்கிறார்கள். ஜாதி பற்றித் தரக்குறைவாகப் பேசி இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள்

மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டு சாதாரண கான்ஸ்டபிள்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட எஸ்.பி., டி.எஸ்.பி., சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சும்மாவாவது அவர்களை அடிக்க வந்தார்கள், வெட்ட வந்தார்கள் என்று சொல்லி ஆஸ்பத்திரியில் போய்ப் படுத்துக்கொண்டு, பிறகு இப்படித் துப்பாக்கிச் சூடு நடத்துவதா? கண்ணீர்ப்புகையும் காணோம், தடியடிப் பிரயோகமும் காணோம். எடுத்த எடுப்பிலேயே துப்பாக்கிச் சூட்டை நடத்துகிறார்கள். 24 -ஆம் தேதியும் நடத்தினார்கள். நேற்றும் நடத்தியிருக்கிறார்கள். இப்படி, தடியடியும் கிடையாது, கண்ணீர்ப்புகையும் கிடையாது. ஆகவே, காவல் துறையில் நீங்கள் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் காவல் துறையில் உள்ள சாதாரண சப்-இன்ஸ்பெக்டர், ஏட்டையா என்ன சொல்கிறார்களோ அதைத்தான் டி.ஜி.பி.-யும் கேட்க வேண்டும், முதலமைச்சரும் கேட்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். துப்பாக்கிச் சூட்டில் இறந்த அரிசன குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஒரே வீட்டிலே அண்ணன், தம்பியைக் கொன்று விட்டார்கள். கலவரக் கும்பல் ஒருவரைக் கொன்றுவிட்டார்கள். போலீஸ் துப்பாக்கிச் சூட்டிலே ஒருவர் இறந்துவிட்டார். முயலைச் சுடுகிற மாதிரி சுட்டிருக்கிறார்கள். ஒரு வாரத்தில் மூன்று வேளையா சுடுவது, இந்த ஆட்சி வந்த பிறகு? இதையெல்லாம் கட்டுப்படுத்தி காவல் துறைக்கு அறிவுரை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடந்த சம்பவம் குறித்து......

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உங்களுடைய விளக்கத்தை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விசாரணை நடத்தவேண்டும் என்று அமைச்சர் சொன்னதாக மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய இரண்டு தரப்பு மக்களுக்கும் இடையே மீண்டும் ஒரு பெரிய மோதல் உருவாகின்ற சூழ்நிலை இருக்கிற நேரத்தில் அந்த



மக்கள் கேட்டார்கள், ஒரு நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று. அப்போது நானும் அந்த நேரத்திலே, எங்களுடைய முதல்வரிடத்திலே சொல்லி நீதிவிசாரணைக்கு உத்தரவிடச் சொல்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர பொது விசாரணைக்கு உத்தரவிட நான் சொல்லவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி.

*டாக்டர் க. கிருஷ்ணசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

*திரு. இரா. தாமரைக்கனி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை ஆதரிக்கின்ற பத்திரிகையான கதிரவன் பத்திரிகையில் பொது விசாரணை என்றுதான் போட்டிருக்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பத்திரிகையை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லுங்கள். அவர் பதில் கொடுப்பார்.

*திரு. கே. சுப்பராயன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலளித்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அப்பிரச்சினையை மீண்டும் எழுப்புவது சபை மரபல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் க. கிருஷ்ணசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அருகே நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஜாதிக் கலவரத்தால் இறந்தவர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற செய்தி உண்மையிலேயே மிகவும் வருந்தக்கூடியதாக இருக்கிறது. தடியடிப் பிரயோகத்திலேயே அந்தக் கலவரத்தைக் கலைத்திருக்கலாம். ஆட்சி நம்மிடத்திலே வந்தாலும் கூட, அதிகாரிகள் இன்னும் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. காவலர் இருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது போதாது. அவர்கள் கைது செய்யப்பட்டும் ஆகவேண்டும். 1989-ஆம் ஆண்டு கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் ஜாதிக் கலவரத்திலே இறந்து இருப்பதால் 1989-ஆம் ஆண்டு கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும். 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மத்திய அரசு கொடுத்திருக்கிற தாக்கீதின் அடிப்படையிலே ரூபாய் இரண்டு

இலட்சம் வழங்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்கும் தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்பின்மீது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் துப்பாக்கிச்சூடு, இந்த ஆட்சி அமைந்தபிறகும் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை வேதனையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒரு சிலர் குற்றச்சாட்டாகவே அதைக் கூறி இருக்கிறார்கள். இந்தத் துப்பாக்கிச்சூடு எதுவும், அரசை எதிர்த்து ஒரு கோரிக்கை காரணமாக, நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு அல்ல. அவரவர்கள் ஆங்காங்கு தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அல்லது வகுப்பு விரோத சர்ச்சைகளின் காரணமாக மோதிக்கொண்டு, அதைத் தீர்த்து வைக்க காவலர்கள் தலையிடுகிற நேரத்தில் கலவரங்கள் மேலும் முற்றி போலீசார் தாக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் ஆகத்தான் இவை காணப்படுகின்றன.

முற்பகல் *9-50*

இன்னும் போலீசார் பழைய போக்கிலேயே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மனித உடலில் ஈரல் முக்கியமான உறுப்பு. அதிகமாகக் குடிப்பவர்களுக்கு அந்த ஈரல் கெட்டுப்போய் உயிருக்கே ஆபத்து வருவதுண்டு. ஆனாலும் கெட்டுப்போன ஈரல், பெரும்பகுதி கெட்டுப்போனாலும், மீதம் மிகச் சிறிய அளவு என்று சொன்னாலும் உயிருக்கு ஆபத்து இல்லை, அவரைப் பிழைக்க வைத்துவிடலாம் என்பது மருத்துவ நிபுணர்களுடைய கணிப்பு. தமிழகத்திலே காவல்துறை என்ற ஈரல், முக்கால் பகுதி கெட்டுப்போய் (மேசையைத் தட்டும் ஒலி) கால் பகுதிதான் மிச்சம் இருக்கிறது. அந்தக் கால் பகுதியை வைத்துக்கொண்டு இந்த அரசு என்கின்ற மருத்துவர், இந்த மாநிலத்தை உயிர்ப்பிக்கலாம் என்ற கருத்தோடு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதிகாரிகள் மாற்றங்களையெல்லாம் ஏடுகளிலே பார்த்திருக்கிறீர்கள் ; செய்திகளிலே காணுகிறீர்கள். நான் விடுத்துள்ள என்னுடைய பிறந்தநாள் குறித்த அறிக்கையிலேகூட, என் மனம் புண்ணாகியிருக்கிறது என்று சொன்ன காரணமே, எந்தத் திசையை நோக்கினாலும் இந்தச் சிக்கலை எப்படி எடுப்பது என்கின்ற சிக்கல்தான் என்னை வாட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே சில பேர் இதைப் பயன்படுத்திக்கொண்டு அரசுக்கு



ஒரு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டும் என்ற சூழ்நிலையில், சில நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றார்கள். அதுபோன்ற நிகழ்வுதான் இந்த நிகழ்வு என்று நான் சொல்ல மாட்டேன். இதிலே வேதனை என்னவென்றால், மோதிக் கொண்டவர்கள் இருவருமே கிருத்துவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதிலே ஒரு வேறுபாடு, ஒரு பகுதியினர் தலித் கிருத்துவர்கள், இன்னொரு பகுதியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கிருத்துவர்கள். கிருத்துவச் சமுதாயத்தவர் தலித்துக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தவர்களும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு, அதிலே கொலையுண்டவரும் ஒரு தலித் ஆதி திராவிடர். சுடப்பட்டு மாண்டவரும் ஒரு ஆதி திராவிடர் என்பதை எண்ணும்போது வேதனைப்படாமல் இருக்க முடியாது. அந்த உணர்வோடு இந்த அறிக்கையை உங்கள் முன்னால் நான் வைக்கின்றேன்.

திண்டுக்கல் நகர், தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டியில் உள்ள வி.கே.எம். திரையரங்கில், சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த செல்வம் என்பவரின் மகன் ஆரோக்கியம் என்கிற ஜான் பிரிட்டோ, வயது 18-தலித் கிருத்துவர்-என்பவர் *24-5-1996* அன்று இரவு *10.00* மணியளவில் திரைப்படம் பார்த்துவிட்டு, மேட்டுப்பட்டியைச் சேர்ந்த கட்டாரி என்கிற அந்தோணி, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் மற்றும் அவரது நண்பர்களோடு பேசிக் கொண்டு வந்தபோது ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக, கட்டாரி என்கிற அந்தோணி மற்றும் அவரது சகோதரர்கள் சேவியர், லாரன்ஸ், அலெக்ஸ் மற்றும் பத்து பேர்கள் ஆரோக்கியத்தை தடி, கத்தி, அரிவாள் ஆகிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்தார்கள். இதை அறிந்த சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த தலித் கிருத்துவர்கள், கட்டாரி என்கிற அந்தோணியை உடனே கைது செய்யுமாறு கோரி, சவுரியார்பாளையத்திலே உள்ள மதுரை-திண்டுக்கல் புறவழிச் சாலையில் போக்குவரத்தைத் தடை செய்ததோடு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த இரண்டு பேருந்துகளின் கண்ணாடிகளுக்குச் சேதம் விளைவித்தார்கள். தகவல் அறிந்த காவல் துறையினர் அங்கே சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததின் பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

*25-5-1996* அன்று காலை சுமார் *6.00* மணியளவில் சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் மதுரை-திண்டுக்கல் புறவழிச் சாலையில் போக்குவரத்துக்குத் தடை செய்ததனால் போக்குவரத்து வேறு பாதையில் மாற்றிவிடப்பட்டு, பின்னர் அவர்கள் சமாதானம் செய்யப்பட்டு, சுமார் *7.00* மணியளவில் வாகனட்

போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. மீண்டும் 8.30 மணியளவில் சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் மேட்டுப்பட்டிக்குச் சென்று ஆரோக்கியம் என்பவரது கூரைவீட்டுக்குத் தீ வைத்தும், அவரது வீட்டுச் சாமான்களுக்குச் சேதம் விளைவித்தும் உள்ளனர். மேலும், பத்து பெட்டிக் கடைகளுக்கும் சேதம் விளைவித்தார்கள். அப்போது அங்கு பணியில் இருந்த காவல் படையினர் கலகக்காரர்களை விரட்டியபோது அவர்கள் ஓடி விட்டார்கள்.

*முற்பகல் 9-55*

மீண்டும், சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள், அரிவாள் மற்றும் ஆயுதங்களோடு மேட்டுப்பட்டி கிராம மக்களைத் தாக்கும் நோக்கத்தோடு புறப்பட்டபோது, பணியில் இருந்த காவல் துறையினர் தடுத்து நிறுத்த முயன்றபோது, அவர்கள் தாக்கப்பட்டதில், வடமதுரை காவல் ஆய்வாளர் மற்றும் எட்டு காவலர்கள் காயம் அடைந்தார்கள். கலகக்காரர்கள், காவல் துறை வாகனங்கள் இரண்டுக்குச் சேதம் விளைவித்ததோடு, ஒரு வாகனத்தில் இருந்த மாற்று டயருக்கு தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

கலகக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் கலைந்து செல்லாததால், திண்டுக்கல் கோட்டாட்சியர் அனுமதியோடு கண்ணீர் புகை பிரயோகம் செய்யப்பட்டது. அது பலன் அளிக்காததால், தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதில் அக்கூட்டத்தில் இருந்த சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த அந்தோணி மகன் ஊர்துராஜ், முனியப்பன் மகன் பாலாஜி மற்றும் பெரியநாயகம் மகன் வேளாங்கண்ணி ஆகியோர் காயமடைந்து சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

தடியடிப் பிரயோகமும் பயனளிக்காததால், சட்ட விரோதமாகக் கூடியிருந்த கும்பலைக் கலைப்பதற்கு, கோட்டாட்சியர் ஒப்புதலோடு காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்தக் கும்பலில் இருந்த சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த செல்வம் மகன் ஜெகன் (வயது 20), இன்பராஜ் மகன் கணபதி (வயது 22), துரைராஜ் மனைவி ரோகிணி (வயது 49) ஆகியோர் காயம்பட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இம்மூவரில், ஜெகன் என்பவர் மருத்துவமனையில் 10.15 மணிக்கு இறந்துவிட்டார். மற்ற இருவரும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



ஆரோக்கியம் கொலை செய்யப்பட்டது குறித்து, திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய குற்ற எண் 526/96-ல் இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 342, 302 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டு கம்பெனிகளும் மற்றும் மாவட்ட ஆயுதப் படையினரும் திண்டுக்கல் நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சரும் கூடுதல் காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு) அவர்களும் திண்டுக்கல் சென்று இரு பிரிவினரையும் சந்தித்து அமைதி நிலவ அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார்கள். துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஜெகனின் பிரேதம் அன்று பிற்பகலில் ஒப்படைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. சவுரியார்பாளையம் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய இடங்களில் ரோந்துப் பணியும், பாதுகாப்புப் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இப்போது பூரண அமைதி நிலவுகிறது.

இந்தச் சம்பவத்தில், துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஜெகன் என்பவருடைய குடும்பத்திற்கு ரூபாய் ஐம்பதாயிரமும், கொல்லப்பட்ட ஆரோக்கியசாமியின் குடும்பத்திற்கு ரூபாய் ஐம்பதாயிரமும், அதிக அளவில் காயமடைந்த இரண்டு பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதமும், சிறிய அளவில் காயமடைந்தவருக்கு தலா ஐந்தாயிரம் ரூபாய் வீதமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்படுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே நீதி விசாரணை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்கு அடிப்படையாக, கலைந்து செல்லுமாறு கண்ணீர்ப் புகையோ, பிரம்படியோ நடத்தப்படவில்லை. இவையெல்லாம் ஆராயப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இவையெல்லாம் நடந்திருந்தபோதிலும் கூட, இன்னும் உள்ள ஐயப்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்கு நீதி விசாரணை எந்த மட்டத்தில் நடத்தலாம் என்பதை அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருப்பூரில் வடக்குப் பகுதியில் குடிநீர் போர்வெல் வற்றி விட்டதால் . பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திலிருந்து தண்ணீர் விடவேண்டிய அவசியம் குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. கோவை மாவட்டத்தில் திருப்பூரில் வடக்குப் பகுதியிலுள்ள ஊராட்சியில் குடிநீர் போர்வெல் வற்றிவிட்டதால் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திலிருந்து தண்ணீர் விட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

*மாண்புமிகு திரு. துரைமுருகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு என்று சொன்னால் முன்னரே அறிவிப்பு கொடுக்க வேண்டும். நான் அறிக்கை அளிக்க வேண்டும். அதற்கு அவகாசம் வேண்டும். துறையின் மூலமாக விளக்கம் வர வேண்டும். காலையில் செயலாளர் ஸ்பெஷல் மென்ஷனாக வருகிறது என்று சொன்னார். கவன ஈர்ப்பு என்று சொன்னால் அதற்கு முன்னரே அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உறுப்பினர் பேசியபிறகு பொதுப்பணித் துறை அமைச்சர் பதில் சொல்லலாம். கருத்துத்தான் முக்கியம். அந்த அளவில் நீங்கள் பதில் சொல்லுங்கள். திரு. கே. சுப்பராயன்.

*திரு. கே. சுப்பராயன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அறிவித்ததையே காலத்தின் அருமை கருதி நானும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. இதனுடைய முழுமையான விவரங்களை அமைச்சரிடத்திலே நேரிலேயே விளக்கி இருக்கிறேன். எனவே, கடுமையான குடிநீர்ப் பிரச்சினை கிராமங்களில் நிலவுகிறது என்கிற காரணத்தால் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திலிருந்து, அங்குள்ள 17 குளம் குட்டைகளுக்கு தண்ணீர் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன். நான் வலியுறுத்திக் கேட்டதற்குப் பின்னரும் தண்ணீர் அங்கே விடவில்லை. ஆனால், அதே நேரத்தில் அதே பகுதியில் உள்ள ஒரே ஒரு குட்டைக்கு மட்டும் பணம் பெற்றுக்கொண்டு தண்ணீர் விட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-00

*மாண்புமிகு திரு. துரைமுருகன்:* தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு நீரை திருமூர்த்தி அணையிலே சேர்த்துவைத்து, நாம் பாசனப் பகுதிக்கு அனுப்புகிறோம். திருமூர்த்தி அணையினுடைய பாசனப் பகுதியின் பாசன அமைப்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். நான்கு மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுழற்சி முறையிலே நாம் நீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இரண்டு தினங்களுக்கு முன்னால் வரையில் நான்காவது மண்டலத்திற்கு நீர் வழங்கி முடித்திருக்கிறோம். திருமூர்த்தி அணையிலே இப்போது இருப்பது 700 மில்லியன் கன அடி தண்ணீர். உடுமலைப்பேட்டையினுடைய குடி நீருக்கும், dead storage-க்கும்' போக மிச்சம் இருப்பது 300 மில்லியன் கன அடி தண்ணீர். இந்த 300 மில்லியன் கன அடி தண்ணீரைக் குளம் குட்டைகளுக்கு வழங்க இயலாது. காரணம், அங்கே 300 குட்டைகளுக்கு மேலே இருக்கின்றன. இரண்டாவது, இந்தப் பாசன அமைப்பே வித்தியாசமானது. ஒன்றாவது ஜோன், இரண்டாவது ஜோன், மூன்றாவது ஜோன் என்று எல்லா இடத்திலேயும் பரந்து இருக்கின்றது. பாக்கெட் பாக்கெட்டாக இருக்காது. வரிசையாக ஒன்றாவது ஜோன், இரண்டாவது ஜோன், மூன்றாவது ஜோன் என்று இருக்காது. இங்கும் ஒன்றாவது ஜோன் இருக்கும், அங்கேயும் ஒன்றாவது ஜோன் இருக்கும். உடுமலைப்பேட்டையிலேயும் ஒன்றாவது ஜோன் நிலம் இருக்கும், திருப்பூருக்குப் பக்கத்திலேயும் ஒன்றாவது ஜோன் நிலம் இருக்கும். அந்த முறைப்படி தற்போது அமைத்திருக்கிறார்கள். எனவே, 300 குட்டைகளுக்கும் இருக்கின்ற தண்ணீரை விடுவது என்பது இயலாததாகும்.

அதே நேரத்தில், விவசாயிகள் மத்தியிலேயிருந்து தென்னை மரங்கள் காய்ந்து போகின்றன, அதற்கு உயிர்த் தண்ணீர் விடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே, நான்காவது மண்டலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சி நிறுத்தி இருக்கின்ற காரணத்தால், இரண்டாவது மண்டலத்திலே இருக்கின்ற தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் விடுவதற்கு முடியுமா என்று அதிகாரிகளைக் கேட்டேன். அவர்களும் விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த மண்டலத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் குட்டைகளும் இரண்டாவது மண்டலத்திற்கு உட்பட்டு வருமானால், பிரத்தியேகமாக அவர்களுக்கும் கொஞ்சம் விடுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால், நான்காவது மண்டலத்திலோ அல்லது மூன்றாவது

மண்டலத்திலோ அந்தக் குட்டைகள் வருமானால் அதிலே நிரப்ப முடியாது என்பது அவருக்குத் தெரியும். ஏனென்றால் பாசன அமைப்பு அப்படி. ஆனால் குறிப்பாக உறுப்பினர்கள் கேட்கின்ற கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். மாண்புமிகு பொள்ளாச்சி உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் ஆழியாற்றிலே இருந்து பொள்ளாச்சி கால்வாயிலே வருகின்ற 'ஏ' பிரிவுக்கு தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டார். அங்கே கொஞ்சம் தண்ணீர் இருந்தது. தென்னைகளுக்கு உயிர் கொடுப்பதற்காக தண்ணீர் விட்டிருக்கிறோம். அதேபோல, தாராபுரத்திற்கு அமராவதி அணையிலேயிருந்து தண்ணீர் விடவேண்டும். அங்கேயும் 612 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருக்கிறது. அதிலேகூட, dead storage எல்லாம் போக, மீதம் 300 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருக்கும். கரூர் எம்.எல்.ஏ. கூட அவர்களுக்குத் தண்ணீர் விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தண்ணீரை ஆற்றிலே விட்டால் அது அமராவதி வரை கிட்டத்தட்ட தாராபுரம் வரையிலேதான் வரும். இருந்தாலும், குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக இருக்கின்ற தண்ணீரை திறந்து விடுங்கள் என்று உத்தரவிட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், எல்லாக் குட்டைகளையும் நிரப்புவது என்பது முடியாது. நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற குட்டைகள் இரண்டாவது ஜோனுக்கு உட்பட்டு வருமானால் அவற்றிற்கு பிரத்தியேகமாக வழங்கப்படும். ஏதோ ஒரு குட்டைக்கு காசு வாங்கிக்கொண்டு விட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது எந்தக் குட்டை என்று தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். அதனை இந்த அவையில் அறிவிப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** இதிலே மேற்கொண்டு விவாதம் கூடாது. நீங்கள் அமைச்சரை அறையிலே சென்று பார்த்து விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். குட்டைகளுக்குத் தண்ணீர் விடவில்லை என்று முடிவு எடுத்தால், கோவை மாவட்டத்திலே எல்லாக் குட்டைகளுக்கும் தண்ணீர் விட்டிருக்கக் கூடாது. திருப்பூருக்கு மட்டும் விட மறுத்ததற்கு என்ன காரணம் என்று நான் அறிய



விரும்புகிறேன். பல்லடம் தாலுகாவிலுள்ள குட்டைகளுக்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. திருப்பூர் தாலுகாவிலுள்ள குட்டைகளுக்குத் தண்ணீர் விடவில்லை, அதற்கு என்ன காரணம்?

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஜோனிலே தண்ணீர் விடுகின்றபோது அங்கேயிருக்கின்ற ஒன்றிரண்டு குட்டைகளுக்குப் போயிருக்கலாம். உங்களுக்குத் தெரியும், சில நேரங்களிலே அந்தக் கடைகோடிக்குத் தண்ணீர் விடுகின்றபோது, இடையிலே உடைத்து எடுத்துவிடுகிறார்கள். பிறகு அதிகாரிகள் சென்று அதை அடைக்கிறார்கள். நான் கேட்கின்ற கேள்வி, இந்த இரண்டாவது ஜோன் தவிர, வேறு ஜோனிலே இருக்கின்ற குட்டைகளுக்கு தண்ணீர் விட்டிருந்தால், உறுப்பினருக்கு விவரம் தெரிந்தால் கொடுங்கள், நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

## 2. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வெடிகுண்டு வெடித்தது குறித்தும், மதுரையிலே 10-10-1994 அன்று இந்து முன்னணித் தலைவர் திரு. ராஜகோபாலன் படுகொலை செய்யப்பட்டது குறித்தும் உள்ள வழக்குகளை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்துள்ளது குறித்து**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிப்பார்கள்.*

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-5-1996 அன்று மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குண்டு வெடித்தது தொடர்பாக நேற்று 27-5-1996 அன்று இந்த அவையில் சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்திய தேசிய லீக் தலைவர் திரு. அப்துல் லத்தீப், தமிழ் மாநில காங்கிரசின் சார்பில் திரு. ஞானசேகரன், அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி, டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் சி.பி.ஐ. விசாரணை கோரப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தனர். அந்தக் கருத்து பரிசீலிக்கப்படுமென்று நான் நேற்று அறிவித்திருந்தேன்.

முற்பகல் 10-05

1994 அக்டோபர் 10 -ஆம் தேதியன்று இதே மதுரை நகரில் இந்து முன்னணித் தலைவர் திரு. ராஜகோபாலன் படுகொலைக்கு ஆளானபோது குற்றம் சாட்டப்பட்டு - தடாவில் கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளிவந்த சீனி நயினா முகம்மது என்பவரே, இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ச்சியிலும் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகியுள்ளதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

இந்து முன்னணித் தலைவர் திரு. ராஜகோபாலன் அவர்களின் படுகொலையின்பொழுதே சி.பி.ஐ. விசாரணை கோரப்பட்டு அதற்கு சில இந்து முன்னணித் தலைவர்களே சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என்று அப்போது கூறியுள்ளதை நினைவூட்ட விரும்புகிறேன்.

சில நிகழ்வுகளில் உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காக குற்றமிழைக்காதவர்களைக் குற்றவாளிகளாகக் கொண்டுபோய் நிறுத்திய ஒருசில அதிகாரிகளின் நியாயத்திற்குப் புறம்பான செயல்கள் சில, கடந்த ஆட்சியின் முன்னுதாரணமாக இருப்பதின் காரணமாக இந்தச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள்தானா அல்லது திசை திருப்பப்பட்டுள்ளதா என்ற சந்தேக அடிப்படையிலும், இந்தக் குண்டு வெடிப்பில் வெளியார் இயக்கங்கள் ஈடுபட்டிருக்கக்கூடும் என்ற சந்தேக அடிப்படையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சி.பி.ஐ. விசாரணையைக் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கை பற்றி அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்து, பின்வரும் முடிவை எடுத்து இந்த அவைக்கு அறிவிக்கிறது.

18-5-1996 அன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற வெடிகுண்டு வெடிப்பு சம்பவம் குறித்த வழக்கில் மதுரை நகரின் காவல் எல்லைக்குட்பட்ட பி.2 காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சீனி முகம்மது, ராஜா முகம்மது மற்றும் செய்ட் என்பவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ள சாகிப் மற்றும் பக்ருதீன் என்பவர்கள் தலைமறைவாகி இருக்கிறார்கள்.

திரு. ராஜகோபாலன், இந்து முன்னணித் தலைவர், 10-10-1994 அன்று காலை மதுரையில் அவரது இல்லத்திற்கு எதிரே அடையாளம் தெரியாத சிலரால் படுகொலை செய்யப்பட்டார். சம்பவத்திற்குப் பிறகு குற்றவாளிகள் அந்த இடத்திலிருந்து தப்பியிருக்கிறார்கள். மதுரையில் திலகர் திடல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு



விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிறகு இது புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவிற்கு மாற்றப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

இந்த இரண்டு வழக்குகளிலும் வெளி மாநிலத்தைச் சேர்ந்த இயக்கங்களோ, நபர்களோ சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்று சந்தேகப்படுவதால் இவ்வழக்குகளின் விசாரணையை மத்திய புலனாய்வுத் துறைக்கு, சி.பி.ஐ.-க்கு ஒப்படைக்க மாநில அரசு முடிவு செய்து, மத்திய அரசின் உள்துறைச் செயலாளருக்கு இன்று கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் — தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்து, ஆளுநர் உரையின் மீதான விவாதம். இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் 18 பேர் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆளுக்குப் பத்து நிமிடம் என்றால், நிச்சயமாக அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே, முதலிலே விளவங்கோடு தொகுதி மாண்புமிகு உறுப்பினர் டி. மணி அவர்கள் நேற்றையதினம் தொடங்கிய பேச்சை இன்றையதினம் முடித்து வைப்பார்.

*திரு. டி. மணி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் பேசியபோது இந்தக் கிரிமினல் குற்றவாளிகளுக்கு அரசியல், பாதுகாப்பாக இருக்கிறது என்பதை குறிப்பிட்டேன். இந்த நிலையைப் போக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், இந்த அறிக்கையோடு நிற்காமல் இந்தக் குறைபாடுகளை நீக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு உண்டு என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டும். அதே நேரத்தில் கடந்த கால சில நிலைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, சில மாதங்களுக்கு முன்னாலே காவலர் தேர்வு நடைபெற்றது. இந்தத் தேர்வு காலத்திலே ஒரு காவலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னால் 40,000, 80,000 ரூபாய் கொடுத்தால்தான் அந்த இடம் கிடைக்கும் என்ற ஒரு நிலை இருந்தது. அதுபோன்று, சப்-இன்ஸ்பெக்டர் போஸ்ட்டுக்கு 2 இலட்ச ரூபாய் வரை கேட்கப்பட்டதாக அல்லது அவ்வளவு கொடுத்தால்தான் அந்த இடம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபோன்று, குழித்துறையிலே தேவஸ்தானத்திற்குச்

சொந்தமான ஒரு யானை இருந்தது. அந்த யானை இறந்துவிட்டது. அதனுடைய தந்தங்களை அந்த தேவஸ்தானத்தின் அறையிலே வைத்திருந்தார்கள். சில மாதங்கள் தாண்டியபிறகு அந்தத் தந்தங்களைக் காணவில்லை என்று சொன்னார்களே தவிர, உரிய வழக்கு பதிவு செய்யப்படவில்லை. அவை எங்கே என்று கண்டுபிடிக்கப்படவும் இல்லை. அதுபோன்றுதான், ஒரு ஆண்டுக்கு முன்னாலே குடிவளை என்ற பகுதியிலே புருஷன் தன்னுடைய மனைவியைக் கொலை செய்துவிட்டு வெளிநாடு சென்றுவிட்டான். F.I.R. போட்டதற்குப் பிறகும், இரண்டு ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் இன்னும் அதற்கான 'charge sheet' கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இப்படி காவல் துறையிலே பல்வேறு விதமான முறைகேடுகள் இருக்கின்ற காரணத்தினால்தான் குற்றவாளிகள் பெருகுவதற்குக் காரணமாக அமைகின்றன. இன்னும் சொல்லப்போனால், சாராய வியாபாரிகள் பெருகியிருக்கின்ற காலம் இது. அதைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே, என்னுடைய பகுதியிலே இருக்கின்ற ஒரு காவல் நிலையத்திலே ஒரு அதிகாரி மாதந்தோறும் மாமூலாக 25 ஆயிரம் ரூபாய் வரையிலும் பெற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த நிலையைப் போக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 10-10*

ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி மாநில மனித உரிமைகள் ஆணையத்தை விரைவில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறை நல்ல முறையில் செயல்பட மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு, கட்சிப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுக்கள் அமைத்து செயல்படுத்துவது சிறப்பான ஏற்பாடாகவும் , உரிய கண்காணிப்பாகவும் இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'ஊழலற்ற ஆட்சி அமைப்போம்' என்று இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆட்சியின் அதிகாரத்திலே உள்ளவர்களாக இருந்தாலும், உயர் பதவியில் உள்ளவர்களாக இருந்தாலும், ஊழல் குற்றத்தில் ஈடுபட்டால் உரிய தண்டனை வழங்கி, ஆளுநர் உரையில் குறிப்பிட்டதுபோல் 'ஆம்புட்ஸ்மென்' என்ற விசாரணை அமைப்பை உருவாக்கி ஊழலுக்கு எதிராக மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்க வேண்டும். கடந்த காலத்தில் மிகப் பெரிய ஊழல் நடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே இதுபற்றி நான் கூறியபடி இன்னொரு விவரத்தைக்கூட குறிப்பிட விரும்புகிறேன்.



எங்களுடைய குமரி மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. கடந்த காலத்தில் பொதுப் பணித்துறை என்று சொல்லுகின்ற மிகப் பெரிய துறையிலே இருக்கின்ற ஒரு அதிகாரி, மாதந்தோறும், அன்றைக்கு அமைச்சராக இருந்த பொதுப்பணித் துறை அமைச்சரை சென்று பார்க்க வேண்டும், அவருக்கு ஒரு சூட்கேஸ் வழங்க வேண்டும் என்ற ஏற்பாட்டை வைத்திருந்தார். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நாம் நம்புகிறேன். அந்த அடிப்படையில் ஊழலற்ற ஆட்சி என்று சொல்லுகிறபோது, கடந்த ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய அதிகாரிகள் ஆனாலும் சரி, அமைச்சர் பெருமக்கள் ஆனாலும் சரி, ஊழல் புரிந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இனி தமிழ்நாட்டில் ஊழல் நடக்காது என்ற நம்பிக்கையை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சி மன்றங்களுடைய தேர்தலை உடனடியாக நடத்துவது இந்த அரசின் தலையாய கடமையாகும். அந்தத் தேர்தல் குறித்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். கடந்த காலத்தில் ஏற்பட்டது போல் அல்லாமல் மிகவும் அக்கறை எடுத்து அடித்தளத்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க, உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்க, போதிய நிதி ஆதாரத்தை வழங்க உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரம் போதுமானதாக இல்லை. கடந்த காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்பு முதலமைச்சராக இருந்தபோது அன்றையதினம் நான் குழித்துறை நகராட்சியின் தலைவராக இருந்தேன். அப்போது என்னுடைய பகுதிக்கு ஒரு பேருந்து நிலையம் வேண்டுமென்று நேரடியாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதற்கான ஒரு மனுவைக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சரும் அதற்கான ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள், ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். அதேபோன்று, அந்த நகராட்சியிலும் ஏகமனதாக ஒரு முடிவை எடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் ஒரு ஆணையைப் பிறப்பித்ததற்குப் பின்னால், நகராட்சி ஏகமனதாக ஒரு முடிவை எடுத்தற்குப் பின்னால், அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அந்த முடிவை மீறுகிறார் என்று சொன்னால் நகராட்சிகளினுடைய அதிகாரம் என்ன ஆகும் என்பதையும், நகராட்சிக்கு என்ன பயன் கிடைக்கும் என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற ஒரு

பெரிய சாபக்கேடு என்னவென்றால், நமக்குத் தேவையான அத்தியாவசியமான பகுதிகளை நில ஆர்ஜிதம் செய்து எடுத்துக் கொண்டால் மட்டும்தான் வழிப்பாதைகளையும், சாலைகளையும் அமைத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் ஒரு தடை இருக்கிறது. நகராட்சிகளுக்கோ, உள்ளாட்சிகளுக்கோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான உரிமை வழங்கப்படவில்லை. அந்த உரிமையை வழங்க வேண்டும். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகப்படியான உள்ளாட்சி மன்றங்களிலே இருக்கின்ற பேரூராட்சிகள், வருமானம் அற்றவையாக உள்ளன. குறிப்பாக, சம்பளம் கொடுப்பதற்குக்கூட லாயக்கு அற்றவைகளாக உள்ளன. எனவே, அந்தப் பேரூராட்சிகளை உள்ளாட்சிகளாக மாற்றுவதன் மூலமாகத்தான் அந்த ஏற்பாடுகளைச் சரிவர நடத்த முடியும். அந்த வகையிலே உள்ளாட்சி மன்றங்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்றும், வருவாயைப் பெருக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தல். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஜனநாயக முறையில் நடத்திட தகுதியுள்ளவர்களை உறுப்பினர்களாக சேர்த்து கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உடனடியாக நடத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

பொது விநியோக முறையைப் பொறுத்த வரையில், ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பது அனைத்தும் உண்மையாகும். அந்தக் குறைகளைப் போக்க அரசின் உளப்பூர்வமான அக்கறை தேவைப்படுகிறது. விநியோக முறை சரிவர நடக்க அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள், அடிக்கடி கடைகளைப் பார்வையிடுவதன் மூலம் விநியோக முறையில் சீரான நிலையினை உருவாக்க முடியும். அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் கிடைக்கச் செய்வதன் மூலம் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தலாம். மேலும், குடும்ப அட்டைகள் மலையோரப் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும் உள்ள கிராமங்களில் கிடைப்பதற்கும் குறைந்தபட்சம் 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்ற ஏற்பாட்டை உருவாக்குவதன் மூலமாக, அந்தப் பகுதி மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தர முடியும். ஒரு மலையோர கிராமத்தில் ஒரு அணைக்கட்டைத் தாண்டி 4 மைல் தூரம் வந்து சேர வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, இது போன்ற பகுதிகளுக்கு ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. அத்தியாவசியப் பண்டங்களை இந்த நியாய விலைக்



கடைகள் மூலம் விநியோகிப்பதன் மூலம் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய எம்.எல்.ஏ.க்கள் தங்கும் விடுதி வளாகத்தில் இரண்டு கடைகள் இருக்கின்றன. சாதாரண சாப்பாடு என்று சொன்னாலே ஒரு கடையிலே 25 ரூபாயும், மற்றொரு கடையில் 20 ரூபாயும் இருக்கிறது. அதுபோன்று ஒரு தோசைக்கு 7 ரூபாயாகிறது. அந்த அளவிற்கு விலைவாசி என்பது இறக்கை கட்டிப் பறக்கின்ற ஒரு நிலையிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் நிலச்சீர்திருத்தம் பற்றியோ அல்லது குத்தகை விவசாயிகள் பற்றியோ குறிப்பிடப்படாதது கவலைக்குரியது ஆகும். விவசாயத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க அரசின் புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்குவது தேவையான ஒன்றாகும். குறிப்பாக, களியல் கிராமத்தில் சக்ரபாணி, நெலியயிலா, மாங்கோடு கிராம விவசாயிகளுக்குப் பட்டா வழங்குவதிலே காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*திரு. டி. மணி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கிராம விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதில் சிறு சிறு விஷயங்கள் காரணமாக கூறப்பட்டு நிராகரிக்கப்படுகிறது. எனவே, புறம்போக்கு நிலங்களைப் பட்டா போட்டு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் சிறுதொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஸ்தாபன ரீதியாகத் தீர்க்கப்படாத தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கவும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கயிறு, கைத்தறி, நெசவுத் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முந்திரித் தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. திட்டத்தை அமலாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்தமட்டில், ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில், தோல் பதனிடும் தொழில் பாதிக்கப்படாமலும், சுற்[illegible] கெடாமலும் பாதுகாத்திட



24921

தமிழக அரசு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள், ஒரு நிமிடம் என்று மூன்று முறை கூறிவிட்டீர்கள்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். குடிநீர்ப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாகும். மாநிலம் பூராவிலும் இருக்கிறது. ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடிநீரை அனைத்து கிராமங்களுக்கும் கிடைப்பதற்கு நம்முடைய ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தாலும் என்னுடைய பகுதியைப் பொறுத்தமட்டில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்பது போதுமானதாக இல்லை. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே குழித்துறையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் கன்னியாகுமரி ஒரு பெரிய சுற்றுலா ஸ்தலமாக இருந்தாலும் அங்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, இந்த நிலையைப் போக்கிட போர்க்கால அடிப்படையில் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தில் பலகாலம் வேலை செய்து வெளியேற்றப்பட்டிருக்கிற ஒரு சாராருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் அடிப்படைச் சுகாதாரம் என்பது சீர் கெட்டுபோய் உள்ளது. தொற்று நோய் பரவியுள்ளது. கொசுத் தொல்லை இல்லாத பகுதிகளே இல்லை. மலேரியா பரவியுள்ளது. யானைக்கால் நோய் அதிகரித்துள்ளது. கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் இல்லை. மருந்தும் இல்லை. ஆகவே, இந்தப் பகுதிகளில் மருத்துவமனைகள் அமைத்து, மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அதேநேரத்தில், மருந்துகள் கிடைப்பதற்கும், முக்கியமாக உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மேல்மலையனூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆ ஞானசேகரன்.

டாக்டர் ஆ. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற புதியதோர் இணையற்ற குறளை உருவாக்கி, அதன்படி நாளும்





உழைத்து, உலகத் தமிழினத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் பாதகமலங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

இதோ, இந்தத் தமிழகச் சட்டப் பேரவையை உற்று நோக்கும்போது, அதில் உள்ள தலைவர்களின் உருவப் படங்களைக் காணும்போது, இதுதான் எவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றம் என்கிற பெருமிதம் என் நெஞ்சை ஆட்கொள்கிறது. அத்தகைய சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் என்னையும் ஒரு அங்கமாக இருக்க வைத்த இந்தச் சாதாரண, சாமான்ய, மிகவும் பிற்படுத்தப்பட்ட குடியில் பிறந்த இந்த எளியோனையும் ஓர் உறுப்பினர் ஆக்கிய அந்த தானைத் தலைவர் இருக்கும் திசைநோக்கி வணங்கி, என்னுடைய முதல் சட்டமன்ற கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன்.

இந்த வரலாற்றுப் புகழ்வாய்ந்த சட்டமன்றம்தான் சமீபத்தில் சத்தமன்றமாக மாறி, தினசரி பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்தபோது, கூனிக் குறுகி கூசக் கூடிய அளவில் இருந்தது கண்டு வெட்கித் தலைகுனியாதவர்களே கிடையாது.

எதற்கும் ஒரு முடிவு உண்டு, எந்த இன்னல்களுக்கும் ஒரு விடிவு உண்டு. ஆம், இதோ எங்கள் தமிழின நாயகர் தலைவர் கலைஞர் முதல்வராகி பொறுப்பேற்று விட்டார். இந்த அரங்கில் உள்ள உன்னதத் தலைவர்கள் எல்லாம் அவரை வாழ்த்தி வரவேற்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. இனி இந்தச் சட்டமன்றம், சட்டமன்றமாகவே திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மேதகு ஆளுநர் உரையில், முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்படும் என்ற தேனினும் இனிய செய்தியைத் தெரிவித்து உள்ளார்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறாததால் பல கிராமங்கள் எந்த அளவிற்குப் பாழ்பட்டுக் கிடக்கின்றன என்பதை 131 கிராமப் பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய எனது தொகுதியைச் சுற்றிப் பார்க்கும்போது என்னால் உணர முடிந்தது. அந்த வகையில் இது என்னைப் போன்றவர்களுக்குத் தேனான செய்தியாகும்.

அடுத்து, இந்த அரசு பொறுப்பேற்ற உடனே முதல் உத்தரவாக, ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் குடும்பங்கள் பயன்பெறக்கூடிய வகையிலே மனைவரி - Ground Rent, தல வரி - Local Cess, கூடுதல்

தலவரி - Local Cess Surcharge போன்ற வரிகளை ரத்து செய்து, தானைத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையெழுத்திட்டிருப்பது உண்மையிலேயே இது ஏழையினுடைய, நடுத்தர மக்களினுடைய அரசு, அண்ணாவின் அடியொற்றிவரும் அரசு என்பதை நிரூபித்துள்ளது.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தும், மாநிலங்களுக்குச் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை மீண்டும் மேதகு ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கு மத்தியில் உள்ள நிலைமைகளைப் பார்க்கும்போது, அதுதான் உண்மை என்பதும் நிரூபணம் ஆகிவருவதைக் காணமுடிகிறது.

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழகத்தின் முதல் அமைச்சராய் ஆதல் வேண்டும்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கனவு - "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற ஏற்றமிகு நிலையால் நனவாவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. முதன் முதலாக தமிழ் ஆட்சி மொழித் துறைக்கு தனி அமைச்சகம் ஏற்படுத்திய தமிழக மாண்புமிகு முதல்வரைத் தமிழ்த்தாய் போற்றாமல் இருக்கமாட்டாள்.

சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்காமல் இருக்க, ஆங்காங்கு இனி அமைதி காக்கும் குழு இருக்கும்...... (குறுக்கீடு).

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்று அரசு செயல்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டார்கள். 'ஆம்புட்ஸ்மென்' என்ற அமைப்பை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இராமன், உறுப்பினரின் கன்னிப் பேச்சிலே குறுக்கிடுவது முறையல்ல. நீங்கள் ஏதோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பப் போகிறீர்களோ என்று நினைத்தேன். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது முதலமைச்சருக்கு வேண்டுகோள் வையுங்கள். திரு. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்காமல் இருக்க, ஆங்காங்கு இனி அமைதி காக்கும் குழு இருக்கும். அதில் சமூகப் பெரியவர்களும், அனைத்துக் கட்சி முன்னோடிகளும் இடம் பெறுவார்கள் என்று மேதகு ஆளுநர் உரையில் கூறியிருப்பது மக்களுக்கு மேலும் இதமாக இருக்கிறது.

"ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்" என்று ஐம்பெரும் முழக்கங்களைத் தொடர்ந்து கடைபிடித்து வரும் நமது கழக அரசு, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை எக்காரணம் கொண்டும் கைவிடாது. அதற்காக உச்சநீதி மன்றத்தில் முனைப்புடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மேதகு ஆளுநர் உறுதி கூறியுள்ளார். இது அந்த





மக்களுக்கெல்லாம் ஒரு பெரும் வரப்பிரசாதம் என்று சொன்னால் அது மிகையாகாது.

*முற்பகல் 10-25*

மாநில மனித உரிமைகள் ஆணையம், "ஆம்புட்ஸ்மென்" என்கிற விசாரணை அமைப்பு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் தேர்தல், குடும்ப அட்டைகளுக்குத் தவறாமல் மாதத்தில் எந்த தேதியில் ஆனாலும் உணவுப் பொருள்கள் விநியோகம், காவிரிப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு, தமிழகத்தில் தொழில் வளத்திற்கான ஏற்பாடுகள் அதாவது முதலீட்டாளர் நேய அணுகுமுறை (Investors Friendly) போன்ற பலப்பல அறிவிப்புகள் தமிழக மக்களுக்குத் தேனான செய்திகள் ஆகும்.

மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக மாவட்டம்தோறும் 1,000 பெண்களுக்கு என, 25,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நமது அரசின் புதிய திட்டத்தை வரவேற்காத கிராமப்புறப் பெண்களே இருக்கமாட்டார்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். நேரம் கருதி எனது தொகுதி பிரச்சினைக்குச் சென்று விடுகிறேன்.

மேல்மலையனூர் தொகுதி முழுவதும் சாலைகள் என்று, பெயரளவில் உள்ளனவே தவிர எதுவுமே சீராக இல்லை. இரண்டு நூற்றாண்டுக்கு முற்பட்ட தோற்றத்தையே என் தொகுதியினுடைய சாலைகள் பிரதிபலிக்கின்றன.

குடிநீர்ப் பிரச்சினை எப்போதும் இல்லாத அளவிற்கு என்னுடைய தொகுதியில் உள்ளது. இதற்கு முந்தைய ஆட்சி, அராஜக அ.தி.மு.க. அரசு, என்னுடைய தொகுதியைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. தாய்மார்கள் மணிக்கணக்கில், மைல் கணக்கில் குடித் தண்ணீருக்காக அலையும் நிலை உள்ளது. ஆழ்துளைக் கிணறு ஆங்காங்கு ஏற்படுத்தி உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கழக அரசு கொண்டு வந்த நந்தன் கால்வாய் திட்டம் அப்படியே கிடப்பில் உள்ளது. உடனடியாக, மறுபடியும் அந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் 2,500 ஏக்கர் நிலத்தில் நீர்பாசன வசதியை, என்னுடைய தொகுதி மக்கள் பெறுவார்கள் என்று இந்தத் தருணத்தில் மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்மலையனூர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆனால், அது இருக்கும் இடத்தில் தங்கும் விடுதிக்கு ஏற்பாடு செய்தால் அங்கு வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குத் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்தத் தருணத்தில் மிகவும் பணிவன்புடன்

தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த ஆலயத்தில் குடிநீர் வசதியே இல்லாத ஒரு அவல நிலை நிலவுகின்றது. எனவே, இந்த வசதிகள் செய்து தர ஆணை பிறப்பிக்கும்படி மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வசிக்கும் மக்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்லூரி படிப்பிற்காக திண்டிவனத்திற்கும், திருவண்ணாமலைக்கும், ,வேலூருக்கும் செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கிய சூழ்நிலை உள்ளது. எனவே, என்னுடைய தொகுதியில் உள்ள அவலூர்பேட்டையில் ஒரு அரசுக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்கள் அதிகம் உள்ள எனது தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான மேல்மலையனூரில், மின்சார வசதி இல்லாத கிராமங்கள் அதிகம் உள்ள ஒரு அவல நிலையும், இருட்சூழலில் வசிக்கும் ஒரு துர்பாக்கியச் சூழ்நிலையும், என்னுடைய தொகுதி மக்கள் மீது, முன்பிருந்த அரசின் கவனக்குறைவால், சுமத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், இப்போது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது இயங்கி வருகின்றன. குறிப்பாக, அவலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சுகாதார நிலையங்கள், என்னுடைய தொகுதிக்குப் போதாது. எனவே, என்னுடைய தொகுதியில் மேலும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தித் தருமாறு மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூரில் உள்ள தேவனூர் உயர்நிலைப் பள்ளி, தேவதானம்பேட்டை உயர்நிலைப் பள்ளி, கணக்கன் குப்பம் உயர்நிலைப் பள்ளி இவை மூன்றையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய இந்த கன்னிப் பேச்சுக்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், மீண்டும் ஒரு முறை எங்களின் இதய சூரியன், உதய சூரியன், இணையில்லா தன்மானத் தலைவர், முத்தமிழ் கலங்கரை விளக்கம், தமிழக மக்களின் தலைமகன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## 4. அறிவிப்புகள்

### (அ) 25-5-1996 அன்று உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன் பேசிய சில சொற்களை நீக்க வேண்டுமென்ற ஆணை இரத்து செய்யப்படுதல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *25-5-1996* அன்று, இந்திய தேசிய லீக் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசியபோது, அவர் பேசியதாகச் சில வார்த்தைகளைச் சொல்லி அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்க வேண்டுமென்று அவருடைய குழுத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள், என்னை அறையிலே சந்தித்து, தான் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, அவைக் குறிப்புகளை நான் இப்பொழுது பார்த்தேன். அவர் பேசியது தமிழுக்கு என தனிக் கொடியும், தமிழ் இனத்திற்கு என தனி நாளும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதுதான். தனி நாடு என்று அவர் சொல்லவில்லை. தனி நாள் என்று சொல்லி இருக்கின்றார். என்னைப் பொறுத்தவரையிலே, அதில் ஆட்சேபனை இல்லை. ஆகவே, அவருடைய பேச்சிலே இருக்கிற குறிப்பை நீக்கச் சொன்ன உத்தரவை இரத்து செய்து, அந்தப் பேச்சு அப்படியே இருக்கலாம் என்று அறிவிக்கின்றேன். அடுத்து உசிலம்பட்டி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் பி.என். வல்லரசு.

*(குறுக்கீடு)*

*முற்பகல் 10-30*

*திரு. ம. அப்துல் லத்தீப்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவிலே 'கன்னட நாள்' என்று ஒரு நாளைக் குறித்து அவர்கள் கொண்டாடுகிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழர்களுக்கும் 'தமிழர் நாள்' என்று நாம் கொண்டாடிக்கொண்டுதான் இருக்கிறோம். இருந்தாலும் ,குறிப்பிட்ட வகையிலே 'தமிழர் நாள்' என்றுதான் நான் சொன்னேன் என்று என்னிடத்திலும் விளக்கம் சொன்னார். அதை மாண்புமிகு தலைவர் அவர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு கண்டுபிடித்து, அவைக்கு அறிவித்து, நீக்கப்பட்டதை மீண்டும் சேர்த்துக் கொண்டதற்கு நன்றி செலுத்திக் கொள்கின்றேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. பி.என். வல்லரசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெருமை வாய்ந்த இந்த சட்டப் பேரவையில் திருவுருவப் படமாக இருந்து நம்மையெல்லாம் ஆசீர்வதித்துக் கொண்டு இருக்கின்ற தேசியத் தலைவர், தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த உசிலம்பட்டி தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொண்டு உரையைத் தொடங்குகிறேன்.

### (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையானது என்னைப் பொறுத்தவரையில் டாக்டர் கலைஞர் உரையாகவே உள்ளது. கவர்னர் உரை குறுகிய உரையாக இருந்தாலும், அள்ள அள்ளக் குறையாத, அட்சய பாத்திரத்தைப் போல, எடுக்க எடுக்கக் குறையாத எண்ணற்ற திட்டங்களைக் கொண்டுள்ளது. சிலர் அவைக்கு வெளியிலே இருந்துகொண்டு கவர்னர் உரை ஏமாற்றம் அளிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். உண்மையில் கவர்னர் உரை ஏமாற்றம் அளிப்பதாக இருக்கவில்லை. மாறாக, தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே, நடைபெற்றுவிட்ட ஊழல்களால், முறைகேடுகளால் ஊனமுற்றுக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு இன்றைய கவர்னர் உரை ஒரு மாமருந்தாக அமையும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சுருக்கமாகச் சொல்வோமேயானால், இன்றைய கவர்னர் உரை தங்கத் தட்டில் வைக்கப்பட்டுள்ள வைரக் கற்களாக ஜொலிக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், தமிழ்ச் சமுதாயத்தினுடைய இரண்டு பெரிய பிரச்சினைகள், 69 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையும், காவிரி நீர்ப் பிரச்சினையும், நமது இரண்டு கண்களைப் போன்ற பிரச்சினைகள் ஆகும். 69 சதவீத இட ஒதுக்கீட்டை முதன் முதலில் அமலுக்குக் கொண்டுவந்ததே டாக்டர் கலைஞர் அவர்கள்தான். டாக்டர் கலைஞர் அவர்கள் அன்று முதலமைச்சராக இருந்தவரை 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு எந்தவித ஊனமும் ஏற்படவே இல்லை. ஆனால், முதலமைச்சராக வருவதற்கு முன்பே, பொருளாதார அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு வேண்டும் என்று ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தவர்கள் ஆட்சிபீடம் ஏறிய பின்புதான், 69 சதவீத இட ஒதுக்கீடுக்கு ஊனமே ஏற்படத் தொடங்கியது. 69 சதவீத இட ஒதுக்கீடுக்கு ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்தது என்றால், அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது என்றால், அதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள்தான் காரணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அகில இந்தியாவில் இருக்கிற அனைத்து அகில இந்திய அரசியல் கட்சிகளுக்கும், அகில இந்தியத் தலைவர்களுக்கும் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வெளியிலே இருந்து கொண்டு, அங்கே எங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும், 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு பாராளுமன்றத்திலே ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதிய பின்புதான் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய ஆதரவை நல்கி அதன் அடிப்படையில்தான் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. ஆனால், தமிழக சட்டசபையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டும், 69 சதவீத இட ஒதுக்கீடு சட்டப்படி அமல்படுத்தாததற்கு என்ன காரணம் என்பதை தமிழக மக்கள் ஆச்சரியக் கண்ணோட்டத்தோடு பார்த்தார்கள். ஜனாதிபதி ஒப்புதல் கொடுத்துவிட்டார், 9-வது அட்டவணையிலே 69 சதவீத இட ஒதுக்கீடு இடம் பெற்றுவிட்டது, ஆனாலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்த முடியவில்லை என்றால், அதற்கு யார் காரணம் என்பதை தமிழக மக்கள் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், இங்கு இருக்கிற அரசியல் கட்சிகளுக்கும் தமிழக மக்களுக்கும் தெரியாமல், உச்சநீதிமன்றத்தில் 50 சதவீத இட ஒதுக்கீடுக்கு ஒப்புதல் கொடுத்ததுதான் அடிப்படைக் காரணம் என்பதை தமிழக மக்கள் பின்பு தெரிந்து கொண்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் சமூக நீதிக்கு துரோகம் செய்துவிட்டு, சமூக நீதியைக் காத்ததாக எப்படி பெயர் சூட்டிக்கொள்ளலாம் என்பது புரியாத புதிராக இருக்கிறது.



முற்பகல் 10 -35

இன்றையதினம் 69 சதவிகித இட ஒதுக்கீட்டில் 100-க்கு மேற்பட்ட சீர்மரபினர் சமுதாயங்களை ஒன்றாக இணைத்து, அவற்றுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் முக்குலத்தைச் சேர்ந்த சீர்மரபினர் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, மக்கள் தொகை அடிப்படையில் கணக்கெடுத்து, முக்குலத்தோர், சீர்மரபினர்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டுமென்று நான் தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கலைஞர் அவர்களுடைய பெருமுயற்சியால்தான் காவிரி நடுவர் மன்றமே கொண்டு வரப்பட்டது. காவிரி நீர் பிரச்சினைக்கு அடிப்படையாக நடுவர் மன்றம் நமக்கு உதவியாக இருக்கும் என்று எண்ணிய காரணத்தினால், அன்றையதினம் கலைஞர் அவர்கள் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் துணையோடு நடுவர் மன்றத்தை ஏற்படுத்தினார்கள். அந்த நடுவர் மன்றம் தீர்ப்பு அளித்த 205 டி.எம்.சி. தண்ணீரையோ, இடைக்கால தீர்ப்பாக அளிக்கப்பட்ட 15 டி.எம்.சி. தண்ணீரையோ பெற முடியாதவர்கள், பெறாதவர்கள்-இங்கே கிராமத்திலே சொல்லுவார்கள், கட்டைப் பஞ்சாயத்து என்று, அதுபோன்ற-கட்டைப் பஞ்சாயத்தை டெல்லியிலே நடத்தி, வெறும் 6 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றவர்கள், தங்களை காவிரித் தாய் என்று அழைத்துக் கொள்வதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை. இன்று நமக்கு கர்நாடகத்திலே இருந்து மீண்டும் ஒரு மிரட்டல் வந்துகொண்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன்பு பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். மத்தியிலே பிஜேபி அரசு அமைந்திருக்கிறது என்று கூறி, அந்த பிஜேபி-யினுடைய கர்நாடக தலைவர்கள், எங்களுடைய மத்திய பிஜேபி அரசினிடம் சொல்லி, காவிரி நடுவர் மன்றத்தை ரத்து செய்வோம் என்று அங்கே மிரட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிரட்டல்களுக்கிடையே இன்றையதினம் ஜூன் மாதம், ஜூலை மாதம் என்றால் தமிழக அரசுக்கு ஒரு கடமைப்பட்ட, மிகவும் அதிகப்படியான கடமைகள் உள்ள மாதங்களாகும். இந்த ஜூன் மாதத்தில் தான் காவிரியில் தண்ணீர் பெற வேண்டிய ஒரு சூழ்நிலை. இந்த ஜூன், ஜூலை மாதங்களில்தான் 69 சதவிகித இட ஒதுக்கீடு அடிப்படையில் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு இடத்தை நிரப்ப வேண்டிய கடமை இருக்கிற காரணத்தினால், மதிப்பிற்குரிய அகில இந்திய அரசியல் சாணக்கியர் என்று இன்றையதினம் இந்திய மக்களால் பாராட்டப்படுகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஜூன், ஜூலை மாதங்களில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையையும், காவிரி நீர்ப் பிரச்சினையையும் தீர்த்து வைப்பார்கள் என்று நான் ஆழமாக நம்புகிறேன்.

கடந்த 5 வருட கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியானது எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்னும் நிலையை உருவாக்கிவிட்டது. ஆனால், இன்றைய கலைஞர் அவர்களுடைய அரசு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. எனவே, இன்றையதினம் இங்கே ஆம்புட்ஸ்மென் அடிப்படையில் ஊழல் விசாரணை நடத்திட இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன். ஆனால் இங்கே பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கடந்த கால





அரசு பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை ஊழல் செய்திருக்கிறது என்று—பல்வேறு அரசியல்-கட்சிகளும், குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த காலத்தில் கவர்னரிடத்தில் சென்று ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்யப்பட்டிருக்கிறது என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கவர்னரிடத்திலே புகார் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இன்றைய சூழ்நிலையில், கடந்த ஆட்சியினுடைய பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழலால் இன்று களஞ்சியம் காலியாக இருக்கிறது, இன்று கஜானா காலியாக இருக்கிறது. எனவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குற்றவாளிகளைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயையும் பறிமுதல் செய்து மீண்டும் தமிழக அரசினுடைய கஜானாவை நிரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை இன்றையதினம் உருவாகிட காரணமாக இருப்பதற்கு இன்று தமிழ் மொழிக்கு தனி மந்திரியை நியமனம் செய்திருப்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் மொழியினுடைய ஏற்றத்துக்கு எத்தனையோ செய்தோம் என்று சொல்கிறார்கள், ஆனால் உண்மையிலேயே இன்றையதினம் தமிழ்மொழியினுடைய வளர்ச்சிக்காக தனியாக ஒரு மந்திரியை நியமித்து இருப்பது டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு. இன்று தமிழை மத்திய ஆட்சிமொழியாக ஆக்கிட உறுதிமேற்கொண்டிருக்கின்ற அரசு டாக்டர் கலைஞருடைய அரசு. எனவே, மத்திய ஆட்சி மொழியாக தமிழை ஆக்க வேண்டுமென்கின்ற முயற்சிக்கு தமிழக மக்கள் உங்கள் பின்னால் நிற்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தஞ்சையிலே நடத்திய உலகத் தமிழ் மாநாடு வெற்று விளம்பரத்திற்கே உதவியது, ஆனால் உருப்படியாக தமிழ் மொழி வளர்ச்சிக்கு எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் உங்களுடைய கோஷமான 'தமிழை மத்தியில் ஆட்சிமொழி ஆக்குவோம்' என்ற கோஷம் தமிழக மக்களைக் கவர்ந்திருக்கிறது. ஆகவே, அதை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொகுதியான உசிலம்பட்டி தொகுதி, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் அறிமுகமான தொகுதி. காரணம், இந்த சட்டமன்றத்திலே தொடர்ந்து உசிலம்பட்டித் தொகுதியின்

சட்டமன்ற உறுப்பினராக, கால் நூற்றாண்டுக் காலமாக இருந்து செயல்பட்டு மறைந்த எங்கள் பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திரு. பி.கே.எஸ். மூக்கையா தேவர் அவர்களின் தொகுதியாகும். எனவே அந்தத் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிற 58 கிராம கால்வாய்த் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், இந்த ஆண்டே அந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகின்ற விழாவையும் தாங்கள் நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-40*

இங்கே தாங்கள் முதல்வராக இருந்தபோது உசிலம்பட்டி தொகுதியை மிகப் பின்தங்கிய தொகுதியாக அறிவித்தீர்கள். அப்படி அறிவிக்கப்பட்டிருந்தாலும் இதுவரை எந்தத் தொழிலும் அங்கே தொடங்கப்படவில்லை. ஆகவே, அரசு சார்பில் ஆயிரம் பேருக்கு மேலாக வேலைவாய்ப்பு தருகிற அளவுக்கு மிகப் பெரிய நூற்பாலையை அங்கே நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகவும், மற்றும் அரசு பாலிடெக்னிக்கும் உடனடியாக நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியார் அணைக்கோ, வைகை அணைக்கோ துளியும் சம்பந்தம் இல்லாமல் இருக்கும், அஸ்வமேளா, திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். என்றுமே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிராத உசிலம்பட்டி நகரில் இன்று கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்கும் வகையில் குடிநீர் வழங்க ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்றித் தரும்படியும் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தென்பாண்டி மண்டலத்திலே வாழ்கிற தென் மாவட்ட மக்களுக்கு பெரியார் அணை மிகப் பெரிய உதவியாக இருந்து வருகிறது. எங்களைப் பொறுத்தவரையில், பெரியார் அணைத் திட்டம், என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு காவிரி நீர்ப் பிரச்சினை போல இருக்கிறது. தென் மாவட்டங்களில் வாழ்கிற மக்களின் வசதிக்காக பெரியார் அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்ற நிலையை அந்த மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கவர்னர் உரையில் அது இடம் பெறவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்ற அடுத்த நாளே பெரியார்





நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுத்ததைக் கண்டு தென் மாவட்ட மக்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்கள். அன்றைய கலைஞர் அரசானது கடந்த காலத்தில் விவசாயிகள் கடனை ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாய் அளவுக்கு ரத்து செய்த அரசு தான். இன்றைய கலைஞர் அரசு அந்த விவசாயிகளுடைய முழுக் கடனையும் ரத்து செய்யாவிட்டாலும்கூட, இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய வட்டியை முழு அளவில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்த அரசு, பொது மருத்துவமனைகளில் இருக்கின்ற நோயாளிகளைப் பார்க்க வருகிற பார்வையாளர்களிடம் 2 ரூபாய் கட்டணம் வசூலிக்கிற முறையை ஏற்படுத்தியது. இன்னும் அந்த முறை தொடருகிறது. அந்த 2 ரூபாய் வசூல் கட்டணத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி உயர்வு இன்றையதினம் கடுமையான அளவில் உயர்ந்திருக்கிறது. நாம் பல்வேறு கால கட்டத்தில் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடியிருக்கின்றோம். எனவே அந்த விலைவாசி உயர்வைத் தடுக்க தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார்கள், விலைவாசியைக் குறைப்பார்கள் என்று தமிழக மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிற வேளையில், நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், விலைவாசி எந்த அடிப்படையில் உயருகிறது என்பதைக் கண்டறிய ஒரு கமிட்டி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கமிட்டியில் வணிகர்கள், பொதுமக்கள், ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோரைப் போட்டு, அதன் வாயிலாக விலைவாசியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடை மழை பெய்தாலும் செடி விளையவில்லை என்று சொல்வார்கள். சென்ற ஆண்டில் அறிவிக்கப்படாத மின் வெட்டு பல இடங்களில் இருந்தது. அந்த மின்வெட்டு இன்றும் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நீடிக்கிறது. குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி தொகுதியில் தொடர்ந்து மின்வெட்டு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கவர்னர் உரையில் ஒரு சிறப்பான பகுதி சேர்க்கப்பட்டு இருக்கிறது. மேல்சபை மீண்டும் கொண்டு வரப்படும் என்று ஓர் அறிவிப்பு செய்யப்பட்டிருப்பது, தமிழக

மக்களுக்கு ஒரு பெரிய மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது. தொன்மை வாய்ந்த மேல்சபையில் டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இடம் பெற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு அன்றையதினம் மேல்சபையைக் கலைத்தார்கள். அத்தகைய மேல்சபையை மீண்டும் உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்கள் உரையாற்றுகிறபோது, ஒட்டுமொத்தமாக புழுதி வாரித் தூற்றுகிற வகையில் பத்திரிகை தலைப்புச் செய்தியாக வரவேண்டுமென்ற நோக்கோடு சென்ற ஆட்சியில் 1000 கோடிக்கு ஊழல் நடந்தது என்று சொன்னார்......

முற்பகல் *10-45*

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் ஒவ்வொரு நாளும் குறுக்கே எழுந்து ஒவ்வொருவருடைய பேச்சுக்கும் விமர்சனம் செய்வதை ஒரு வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார். வல்லரசு அவர்கள் ஏதோ பத்திரிகைக்கு தலைப்புச் செய்தி கொடுப்பதற்காகப் பேசினார் என்று சொல்லிவிட்டு அதே காரியத்தை திருநாவுக்கரசு அவர்கள் செய்வது முறையல்ல என்பதைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் (குறுக்கீடு).

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். பத்திரிகைகளில் செய்தி வருவதில் தவறில்லை. எல்லா அரசியல்வாதிகளுமே பத்திரிகைகளில் செய்தி வர வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். ஆனால் உண்மைக்கு மாறான செய்திகள் வரக் கூடாது என்பதால் சொல்கிறேன். தவறாக மாற்றிச் சொல்லக் கூடாது. வெளியே சொன்னால், சம்பந்தப்பட்டவர்கள் அவ்வாறு சொல்பவர்கள் மீது வழக்கு போடவோ அல்லது மறுப்பு சொல்லவோ வெளியே வாய்ப்பு இருக்கிறது. உள்ளே இங்கே சொல்கிறபோது, சட்டமன்றத்திற்குள்ளே பேசுகிற பேச்சையொட்டி



வழக்கும் போட முடியாது, வெளியேயிருந்து அறிக்கையும் கொடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை, ஆயிரம் கோடி ஊழல் நடந்திருக்கிறது என்று அவர் சொன்னதை நான் ஆட்சேபிக்கிறேன். அதை, சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இரண்டாவது சட்டமன்ற மேலவை, கலைஞர் அவர்கள் இடம் பெற்றார்கள் என்பதற்காகத்தான் கலைக்கப்பட்டது என்பது மாண்புமிகு அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீது உள்நோக்கம் கற்பிப்பது, மற்றும் களங்கம் விளைவிக்கும் வகையில் அமையும். எனவே அதையும் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்தில் மட்டுமல்ல மக்கள் மன்றத்திலும் அதைத்தான் சொல்லி இருக்கிறேன். நான் கூறிய அனைத்தும் உண்மையென்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் ஊழல்கள் நடைபெறவில்லை என்று அவர் சொல்கிறார். . . .

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** போதும், அடுத்து திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொள்கிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், எங்களை எல்லாம் இங்கே ஆளாக்கி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எங்களுடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் நன்றிதனை காணிக்கையாக்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை தரும் நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும்

என்ற இடத்தில் நான் நிற்கிறேன். இந்த உலகத்திற்கு என்னை அறிமுகப்படுத்திய பெற்றோர்கள், அதற்கு பின்னாலே 60,888 வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, அரசியல் உலகிற்கு என்னை அறிமுகப்படுத்திய வேலூர் தொகுதி மக்களுக்கு சில வாக்குறுதிகளை வேட்பாளர் என்ற முறையில் கொடுத்துவிட்டு இங்கே தமிழகத்தினுடைய முதல்வர், கருணையினுடைய உருவாக மட்டுமல்ல, நிதியையும் தன்னிடம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிற அந்தக் கருணை - அதுதான் சொன்னேன், 'மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும்' என்ற இறை வணக்கப் பாடலோடு நிறுத்தினேன். நான் கடந்த ஐந்தாண்டு காலமாக பல முறை - மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் - பேசாத நாள் இல்லை. பேசிப் பேசி அலுத்துவிட்டாலும் கூட, எத்தனையோ முறை - 120 போராட்டங்களை நடத்தி, 52 முறை கைது செய்யப்பட்டு, போராட்டமாகவே என்னுடைய வாழ்க்கை கடந்த ஐந்தாண்டு காலத்தில் முடிந்து விட்ட நேரத்தில், வேலூர் மக்களுக்குச் செய்ய முடியாத சில கோரிக்கைகள் அப்படியே நிலுவையில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநகருக்கு சென்று மத்திய அரசை அங்கே உருவாக்குவதற்கு போனபோது, நான் பேக்ஸ் செய்தியை அனுப்பி, அதிலே நான்கு கோரிக்கைகளை வைத்தேன். அதிலே முதல் கோரிக்கையாக எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டு, உடனடியாக அந்தப் பெயரை உருவாக்கி தந்திருக்கிற முதல்வர் அவர்களுக்கு ஏற்கனவே நான் நன்றியை காணிக்கையாக்கிவிட்டேன். அதனுடன் மூன்று கோரிக்கைகளை நான் வைத்திருந்தேன். வேலூர் மக்களுடைய தாகத்தை தீர்ப்பதற்காக - என்னுடைய வேலூர் தொகுதி மக்களுக்கு பொன் கேட்கவில்லை, பொருள் கேட்கவில்லை, மாட மாளிகைகளை எதையும் நான் கேட்கவில்லை. தாகத்தைத் தீர்ப்பதற்கு தண்ணீரைத்தான் நான் கேட்கிறேன். பாலாறு இப்போது பாழாறாகிவிட்ட நிலையில், நிலத்தடி நீர் எங்கேயோ உள்ளே சென்றுவிட்ட நிலையில், நாங்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். காரணம் நமக்குத் தொலைநோக்குப் பார்வை வேண்டும். இன்று இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர், எதிர்காலத்தைத் திட்டமிட்டு குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வரவில்லை என்று சொன்னால், அடுத்த ஆண்டிலேகூட எங்களுடைய மக்களுக்குத் தண்ணீரே இல்லாமல் போய், அவர்கள் எல்லாம் பாவம் நிர்கதியாக அல்லல்படக்கூடிய நிலை வந்துவிடும். இந்தக் காரணத்தாலேதான்,





9½ கோடி ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கடந்த ஆட்சியிலே படாதபாடுபட்டு கேட்டு, 9¾ லட்சத்தை மட்டும் ஆய்வுக்காகப் பெற்று, ஆய்வுகள் எல்லாம் முடிக்கப்பட்டு, அரசிடம் இப்போது பணத்தைப் பெறுகின்ற நிலையில் யாசகம் கேட்டு நிற்கிறேன். எனவே 9½ கோடி ரூபாயை நீங்கள் கொடுத்து, வேலூர் நகரத்திற்கு, பாலாறு புதிய குடிநீர்த் திட்டத்தை நீங்கள் கொடுத்துவிட்டால், வேலூர் மக்கள் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதை நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-50*

அடுத்து, பாதாள சாக்கடைத் திட்டம். வேலூரிலே சிறு மழை பொழிந்தாலும்கூட, மலைகளுக்குப் பக்கத்திலே, மலைகளின் ஊடே அமைந்திருக்கிற வேலூர் நகரத்தில், சிறு மழை என்று சொன்னாலும், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிற நிலை வந்து, அங்கே இருக்கக்கூடிய ரோடுகளை எல்லாம் அரித்தெடுத்துச் செல்வதோடு, 4 நாட்கள், 5 நாட்கள் தண்ணீர் அப்படியே ரோடுகளில் நிற்கும். ஒருமுறை, நான் நான்கு நாட்கள் தண்ணீர் வெளிப்படாத காரணத்தாலே, சாக்கடையில் கழுத்தளவு தண்ணீரில் அமர்ந்து சாலை மறியல் செய்து, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலே 7.79 கோடி ரூபாயைப் பெற்று, இப்போது ரோட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டும் என்று கேட்டுள்ளேன். அதற்கு 6 கோடி ரூபாய் ஆகிறது. தாராள மனம் படைத்த முதல்வர் அவர்கள், இந்த 6 கோடி ரூபாயையும் அள்ளித் தருவார்கள் என்று சொன்னால், பாதாளச் சாக்கடைத் திட்டம் வந்து விடும். மக்கள் எல்லாம் போற்றுவார்கள்.

அடுத்து புதிய பஸ் ஸ்டாண்ட். 5½ கோடியிலே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலே கேட்டு, அதற்கும் ஆய்வுகள் எல்லாம் முடிக்கப்பட்டு, எல்லாமே கடைசி நேரத்தில் நின்றுவிட்டன. இந்த 3 கோரிக்கைகள் தவிர, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் இரண்டுக் கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள தொரப்பாடி பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டும். அடுத்து என்னுடைய பிறந்த மண்ணாக இருக்கிற முல்லைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய வெள்ளக்குட்டை என்ற கிராமத்தில் உள்ள பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டும் என்று இரண்டு கோரிக்கைகளை நான் ஏற்கெனவே வைத்திருக்கிறேன். சென்ற ஆண்டு இதே அவையிலே பலமுறை வாக்குறுதிகள் பெற்றும்கூட, அவைகள் எல்லாம் காற்றில் பறந்துவிட்டன. நேற்றைக்குக் கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அந்த மனுவை நீங்கள் கருணையோடு

பரிசீலித்து, கருணையையும் நிதியையும் நீங்கள் எங்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்றும், எங்களுக்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்றும் பணிவன்பான வேண்டுகோளை வைத்து, என்னுடைய உரையை நான் இங்கே துவக்குகிறேன். (சிரிப்பு) ஏன் என்றால், பிறகு நான் வேறு பல பிரச்சினைகளைப் பேசுகிற சூட்டில், தொகுதியை விட்டுவிட்டேன் என்று சொன்னால், பழிக்கு ஆளாவேன் என்கிற காரணத்தாலே முதலிலே நான் அடிபோட்டுவிட்டேன். அடுத்து இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு நான் வருகிறேன்.

'நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்'

என்று வள்ளுவன் மிக அழகாகச் சொன்ன குறளை, நீதி அரசர் சீனிவாசன் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பிலே கோடிட்டுக் காட்டினார்கள். எந்தக் கட்டத்தில் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியும். கொடைக்கானலில், மாடி கட்டிட, ஹோட்டலைக் கட்டுவதற்கு, அன்றைய ஆட்சியில் முறைகளை எல்லாம் மீறி, அன்று இருந்த முதல்வர் அவர்களும், அன்று இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆணை பிறப்பித்து, எவ்வளவு முறைகேடுகள் நடந்தன என்பதை நாம் அறிவோம். 'நாடொறும் நாடி' என்பதற்கு இணங்க, நாள்தோறும் தன்னுடைய ஆட்சியிலே விளைகின்ற நன்மை, தீமைகளை ஆராய்ந்து, முறை செய்யாத அரசன், நாள்தோறும் மெல்ல, மெல்ல நாட்டை இழந்துவிடுவான் என்று வள்ளுவன் சொல்லியதற்கு மாறாக, இங்கே மெல்ல மெல்ல என்பது போய், எல்லாம் ஒரேயடியாக ஒட்டுமொத்தமாக தன்னுடைய நாட்டை இழந்துவிட்ட கதையை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சியிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என்று சொல்லி பத்திரிகையிலே தலைப்புச் செய்தி என்றெல்லாம் சொன்னார்கள். கடந்த 5 ஆண்டுக் காலத்தில், நீங்களும்தானே எங்களோடு சேர்ந்து கொண்டு, இதே குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, ஆளுநர் மாளிகைக்கு எங்களோடு வந்திருக்கிறீர்கள். பலமுறை அதையே சொல்லி இருக்கிறீர்கள். அன்று நீங்கள் சொன்ன கூற்றை இன்று மாற்றிக் கொள்ள வேண்டிய காரணம் என்ன? பொதுவாக சட்டமன்றத்திலே நடந்ததை நாங்கள் சொல்கிறோம். அதற்கு, ஏதோ கட்சியினுடைய தலைவர் பொறுப்புக்கு வந்துவிட்டால்,



எல்லாவற்றையும் மறுக்கவேண்டும், என்பது அல்ல. யதார்த்தத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அன்று ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்த முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு ஊழல் செய்தார்கள் என்று நீங்களே பட்டியலைக் கொண்டு போய் பல இடங்களிலே கொடுத்திருக்கிறீர்களே, இன்று அவைகள் எல்லாம் அப்படியே சரியாகிவிட்டதா? எந்த மாற்றம் உங்களை அப்படி மாற்றியிருக்கிறது என்பதை நீங்கள் விளக்கவேண்டும். இதற்கெல்லாம் மறுப்புச் சொல்லிக் கொண்டிருப்பேன் என்று சொன்னால், அது சரியாக இருக்காது. ஒரு ரூபாய் சம்பளம் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டிருந்த முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு சொத்துக்களைச் சேர்த்து இருக்கிறார். அவ்வளவு சொத்துக்களையும் நாம் உடனடியாக பறிமுதல் செய்தாலொழிய.......... (குறுக்கீடு).

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. எஸ். திருநாவுக்கரசு.

முற்பகல் 10-55

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* அரசியல் மாற்றத்திற்கு காரணம் கேட்டார். அது குறித்து விளக்க தாங்கள் வாய்ப்பு தந்தால் 1/2 மணி அல்லது 10 நிமிஷத்திலே விளக்குகிறேன். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* தாராளமாக விளக்கலாம்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* எந்த அரசியல் மாற்றம் ஒரு காலத்திலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணியாக இருந்த அவர், காங்கிரசிலிருந்து விலகி வந்து தனியாக உட்கார வைத்து — இங்கே எந்த அரசியல் மாற்றம் அவரை உட்கார வைத்து இருக்கிறதோ, அது போலத்தான் வேறு அரசியல் மாற்றம் என்னை இங்கே உட்கார வைத்திருக்கிறது. அப்படிப் பார்த்தால், வரிசையாக நானும் பல உதாரணங்களை ஆளும் கட்சியின் மீது சொல்ல முடியும். இதெல்லாம் அரசியல் ரீதியான முடிவே தவிர, அதற்கென்று உள் நோக்கம் எல்லாம் கற்பித்துப் பேச வேண்டியதில்லை. ஆகவே வெளியே பேசிய பிரச்சினைகள் குறித்து நான் சொல்வதைப் போல நீங்களும் பேசியிருக்கலாம். நாங்களும் பேசியிருக்கலாம். ஆனால் வெளியே பேசுவது என்பது வேறு. பொதுக் கூட்டத்தில் பேசுவது என்பது வேறு. அதைத்தான் நேற்றிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். பொதுக் கூட்டத்திலே பேசுவது வேறு. இங்கே சட்டமன்றத்திற்குள்ளே வந்து குற்றச்சாட்டுக்களை பதிவு செய்வது என்பது வேறு. வெளியே பேசினால்

வெளியே இருப்பவர்களுக்கு, இந்த மன்றத்திலே வாய்ப்பு இல்லாதவர்களுக்கு வெளியேயிருந்து வழக்கு போடவும், பதில் சொல்லவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் உள்ளே வந்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு இம்யூனிட்டி இருக்கிறது. வெளியே வந்து அவர்கள் ஒன்றும் சொல்லமுடியாது. கோர்ட்டிற்குக் கூட போக முடியாது. அதனால் இங்கே பேசுகிறபோது நியாயமாகப் பேசுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன், அவ்வளவுதான். எல்லோருக்கும் திருப்பித் திருப்பி வரும். யாரும் காருள்ள வரை, கடல் நீர் உள்ள வரை ஆண்டு கொண்டிருக்கப் போவதில்லை. மாறி மாறி வருகிறபோது இதேதான் திருப்பித் திருப்பி நடக்கப் போகிறது. அதனால்தான் முதலமைச்சரை முதலிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். கொஞ்சம் பார்த்துப் பேச சொல்லுங்கள் என்று.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நீதி அரசர் சீனிவாசன் அவர்கள் சுட்டிக்காட்டிய குறளை இங்கே சுட்டிக் காட்டி, கொடைக்கானல் ஹோட்டல் சம்மந்தமாக நடைபெற்ற அந்த முறை கேட்டை, அரசுதான் காரணமாக இருந்து நடத்தியது என்பதை விளக்கியிருக்கிறார். அதைப் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சு என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களக் கருதுகிறார்களா, அல்லது மறுக்கிறார்களா என்பதுதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* அதே மாதிரி பிரச்சினை வருகிறபோது சொல்லுங்கள், நான் பதில் சொல்கிறேன். கோர்ட்டில் தீர்ப்பு கொடுத்ததற்கு நான் என்ன சொல்லமுடியும்? கோர்ட்டை மீறி நான் என்ன செய்வது? கோர்ட்டில் நீதிபதி என்ன சொன்னாரோ, அத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். (சிரிப்பு) நான் தெளிவாகத்தான் இருக்கிறேன். இதிலே சிரிப்பதற்கோ, கேலி பண்ணுவதற்கோ ஒன்றுமில்லை. ஆதாரபூர்வமான குற்றச் சாட்டுகள், கோர்ட்டில் நீதிபதி சொன்னார் என்று சொல்கிறீர்கள். நீதிபதி சொன்னதை நான் இல்லை என்று சொல்லமுடியுமா? அதற்காக நீங்கள் கண்டதெல்லாம் சொல்லி, 1000 கோடி, 2000 கோடி, 3000 கோடி, அதிலே ஊழல், இதிலே ஊழல் என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல்



பேசமுடியுமா? ஒரு வரைமுறையோடு பேசுங்கள் என்றுதான் சொல்கிறேன். குற்றச்சாட்டு இருந்தால். ஆதாரபூர்மாக நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லுங்கள், எங்களிடம் ஆதாரம் இருந்தால் மறுக்கிறோம். ஓட்டுமொத்தமாக குற்றச்சாட்டு சொல்வதைத்தான் நான் மறுத்துக்கொண்டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. ஞானசேகரன்.

*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்ற முறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களை ஆதாரம், ஆதாரம் என்று எப்படி எல்லாம் துரத்தி அடித்தாரோ, அப்படியே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு இப்போது தன்னுடைய இருக்கையிலே அமர்ந்துகொண்டு ஆதாரம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் கூறி, கொடைக்கானல் ஹோட்டலில் ஊழல் நடந்திருக்கிறது, என முதலமைச்சரைப் பற்றியும், உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பற்றியும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி சொன்னதினுடைய அடிப்படையில் இங்கே உடனடியாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம் எதற்கெடுத்தாலும் (குறுக்கீடு) நான் யீல்டாகவில்லை. I am not yielding (interruption)

**Hon. Deputy Speaker:** He is not yielding. Hon. Member Thiru Thirunavukkarasu, please be seated. (Interruption) நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடன் உங்கள் வாய்ப்பு வரும்போது பேசுங்கள். ஒவ்வொரு வரியிலும், வரிக்கு வரி குறுக்கிட்டால் எப்படி? இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (Interruption)

**Thiru C. Gnanasekaran:** I am not yielding. (Interruption) I am telling about the judgment, (Interruption) because I request the Hon. Chief Minister to take action on the basis of the judgment.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களே, ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும். நீங்கள் துணைத் தலைவராக இருந்திருக்கிறீர்கள். ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது அவர் 'நாட் யீல்டிங்' என்று சொன்னால், நீங்கள் உட்கார்ந்து கொள்ளவேண்டும். He is not yielding. Please sit down.

*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்

கொள்வதெல்லாம், சென்ற ஆட்சியிலே பொதுவாக ஆளுகின்ற வர்க்கம் அரசு இயந்திரத்தை இயக்காமல் இருந்த போது ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பால்தான் அதைச் சரிசெய்யவேண்டுமென்ற ஒரு அவலநிலை, தமிழகத்திற்கு வந்து சேர்ந்த நிலை, மாறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே நம்முடைய உயர்நீதிமன்றம் கோடிட்டுக் காட்டிய அந்தக் கோப்புகளையெல்லாம் பார்த்து யார் எல்லாம் தவறு செய்திருக்கிறார்களோ, யார் எவ்வளவு பணம் வாங்கியிருந்தாலும் சரி, — அவர் கோடி கோடி என்று சொன்னால் கோபித்துக் கொள்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை — யார் எவ்வளவு பணம் பெற்றிருக்கிறார்களோ, அந்தக் கையூட்டுப் பணத்தை, முறைகேடாகப் பெற்ற பணத்தை உடனடியாக நீங்கள் பறிமுதல் செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் லஞ்ச லாவண்யம் என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக எல்லா இடங்களிலும் இன்று வியாபித்து இருந்துகொண்டிருக்கிறது. 'தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் கடவுள்' என்று கடவுளைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தக் கடவுளைவிட சக்தி வாய்ந்ததோ என்னவோ தெரியவில்லை, இந்த லஞ்சம், எங்கு பார்த்தாலும் வியாபித்துக் கொண்டு, ஏற்கனவே நம்முடைய தமிழகத்தை உலுக்கி கொண்டிருக்கக் கூடிய ஒரு இயக்கமாக இந்த லஞ்சம் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. காவல் நிலையத்திலேயிருந்து ஆரம்பித்து, அது தாலுக்கா ஆபிசாக இருந்தாலும் சரி, கிராம நிர்வாக அதிகாரிகளானாலும் சரி, ஆர். டி. ஓ. ஆபிஸ் என்று எல்லாத் துறைகளிலேயும் இது இப்போது பரவி வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவைகளை சரிப்படுத்தி ஆக வேண்டும். இந்த லஞ்சப் பேயை ஒழித்து ஊழல் அற்ற ஒரு ஆட்சியை அமைக்க வேண்டும் என்று நீங்கள் உங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறீர்கள். முதலமைச்சர் உள்பட, அமைச்சர்கள் மீதெல்லாம் விசாரணை நடத்துவதற்காக 'ஆம்புட்ஸ்மென்' என்ற ஒரு அமைப்பையும் உருவாக்கப்போவதாக ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நன்றி சொல்லுகிறேன்; பாராட்டுகிறேன். ஆனால் அது ஏட்டளவில் இருந்துவிடக் கூடாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. கடந்த காலத்திலேகூட யார் யார் எல்லாம் தவறு செய்திருக்கிறார்களோ அவர்களையெல்லாம், இன்று கூட பத்திரிகையிலே பார்த்தேன். ஜெயா பப்ளிகேஷன்ஸ்-உடைய நிலத்தை ஏற்கனவே முன்னாள் முதல்வர் அவர்கள் தன்னுடைய பெயருக்கு மாற்றியதாகச்



சொல்லுகிறார்கள். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் வழக்குகள் எல்லாம் இருக்கின்றன. ஆதாரம் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. அதற்கு மிக ஆழமான ஆதாரங்கள், அடிப்படையான ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்த நிலத்தை உடனடியாக பறிமுதல் செய்து அரசுக்கே கொண்டு வர வேண்டியது இந்த அரசினுடைய தலையாய கடமை.

*முற்பகல் 11-00*

ஜெயா பப்ளிகேஷன்ஸ் சம்பந்தமாக, அதிலே யார் எல்லாம் தவறு செய்திருக்கிறார்களோ, அந்த அதிகாரிகள் மீதும், அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி அதனால் பணத்தைப் பெற்றவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை சட்டத்தின் முன்னாலே கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன, விரைவாகப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** விரைந்து சென்று விடுகிறேன். அடுத்து ரௌடிகள் சாம்ராஜ்யம். எங்கு பார்த்தாலும் மிச்ச சொச்சங்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய சென்னை மாநகரத்தினுடைய பிராட்வே பஸ் ஸ்டாண்டை எடுத்துக் கொண்டால் பஸ்ஸிலிருந்து லக்கேஜ் எடுத்துக் கொண்டு — கிராமப் புறத்திலிருந்து ஒருவன் வருகிறான் என்று சொன்னால் — அவனே பாவம் பஸ்ஸிலிருந்து லக்கேஜ்ஜை எடுத்துக் கொள்வான். ஆனால் அதற்குள் ஓடோடிபோய் லக்கேஜ்ஜை இறக்கி விடுவது, பிறகு 50 ரூபாய் கொடு, 100 ரூபாய் கொடு என்று அவனை மிரட்டுவது, இல்லை என்று சொன்னால் அடிப்பது. எங்கும் பார்த்தாலும் குடிசைகள். மெரினா பீச்சை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே எங்கு பார்த்தாலும் குடிசைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எல்லா இடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு, எங்கு பார்த்தாலும் ரௌடிகள் சாம்ராஜ்யமாக இருந்துக் கொண்டிருக்கிறது. இன்று கூட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே பார்த்தால் பொதுவாக வியாபாரிகளிடமிருந்து பணம் பறிக்கிறார்கள் என்று, அது மாதிரி யாரும் இருக்கக் கூடாது என்று அதில் இருக்கிறது. இந்த நல்ல முன்னுதாரணத்தை நீங்கள் அறிக்கை வாயிலாக சொல்லியிருக்கிறீர்கள். யாராக இருந்தாலும் சரி, அமைச்சர் பெருமக்களிலிருந்து, மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், யாருமே முன்பிருந்தவர்கள் அதைச் செய்தார்கள் என்ற காரணத்திற்காக நீங்கள் லீகல் ஹேர் போன்று, அதையே வாரிசாக எடுத்துக் கொண்டு, அந்த பலன்களையெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணம் இல்லாமல்,

[திரு. சி. ஞானசேகரன்] [1996 மே 28

ஒரு தூய்மையான ஆட்சியைப் படைக்க வேண்டும். அரசியல் கலர் பூசிக்கொண்டு எத்தனையோ பேர் ரௌடிகள் கும்பல்கள் எல்லாம் உள்ளே வந்து விடுகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரே ஐ.ஜி. இருந்து சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றிய காலத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருந்தது. ஆனால் பல டி.ஜி.பி-க்கள் எல்லாம் உருவாகி யாருக்கு எந்த டி.ஜி.பி. என்று தெரியாமல் சட்டம் ஒழுங்கு எங்கோ சென்று சுக்கு நூறாகிப் போய்க் கொண்டிருக்கிறது. எங்கு சென்றாலும் இது எங்கள் சப்ஜெக்ட் இல்லை, கிரைமுக்கு போங்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு ஐ.ஜி. இருந்த காலத்தில் நிலைப் படுத்திய சட்டம் ஒழுங்கு பல டி.ஜி.பி..-க்கள் வந்த பின்னால் கெட்டு விட்டது. அதை சரி செய்து சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தில் தங்கள் மீது உள்பட, என்மீது உள்பட, பல வழக்குகள் பொய்யாகவே புனையப்பட்டு பல வழக்குகள் பெண்டிங்கிலே இருக்கின்றன. ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்களைக் கூட பல பேர் தாக்கினார்கள். அவர்களை யார் அடித்தார்கள் என்பதே கடைசி வரையில் தெரியாமல் மர்மமாகவே இருந்து போய் விட்டது. ஆகவே நீங்கள் அந்த கிரைம் நம்பர்களை, குற்ற எண்களைக் கண்டுபிடித்து-ராணிபேட்டை சட்டமன்ற உறுப்பினரை அடித்தது யார்? மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்களை அடித்தது யார்? ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினரை அடித்தது யார்? இதெல்லாம் தெரியாமல் மர்மமாகவே இருந்து விட்டது-சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்துப் பார்த்து உண்மையான குற்றவாளிகள் யார் என்று நீங்கள் நாட்டுக்கு காட்டுவீர்கள் என்று சொன்னால், உங்களுடைய அரசின் மீது பொது மக்களுக்கு நம்பிக்கை வரும். என்மீது எத்தனையோ பொய் வழக்குகள். கடைசியாக ஆட்சி போகிறபோது கூட, எங்களுடைய நகராட்சிக்கு சேர வேண்டிய 9 லட்சம் ரூபாயை எக்சிபிஷன் நடத்தி வரும் வருவாயை, வேலூர் நகராட்சிக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதிலே என்னை அடித்ததற்காக வழக்குகள் எல்லாம் கூட அப்போதிருந்த சமூக நலத்துறை அமைச்சர் மீது புகார் கொடுத்து, வேலூர் தெற்கு காவல் நிலையத்தில் வழக்கு கூட பெண்டிங்காக இருந்தது. ஆனால் அதில் ஆக்ஷன் எடுத்தார்களா, டிராப் செய்து விட்டார்களா என்று தெரியவில்லை. நாங்கள் எல்லாம் நீதி தான் கேட்கிறோம். பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. நீதி வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.



1996 மே 28] [திரு. சி. ஞானசேகரன்]

முற்பகல் 11.05

அடுத்து மின்சாரம். சென்னை மாநகரை எடுத்துப் பார்த்தோம் என்று சொன்னால், 50 யூனிட் வரை, ஒரு யூனிட்டுக்கு 65 பைசா என்று இருக்கிறது. அதில் 2 மாதத்திற்கு ஒரு முறை கணக்குப் போடுகிறார்கள். அப்படி 2 மாதத்திற்கு கணக்குப் போடும் போது 25 யூனிட் இருந்தால் தான் 65 பைசா கணக்கு வரும். இப்படி ஸ்லாப் சிஸ்டத்தை வைத்து போடுவதினால் சாதாரண ஒரு பியூன் கூட 400 ரூபாய், 500 ரூபாய் மின்சார சார்ஜ் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஸ்லாப் சிஸ்டத்தை உடனடியாக நீங்கள் எடுத்து விட்டு யூனிட்டுக்கு ஒட்டு மொத்தமாக வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு பம்புசெட் வைக்கும் கட்டணம் 20 ஆயிரம் என்று முதலில் செய்தார்கள். பிறகு 10,000 என்று குறைத்தார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய வள்ளலே நீங்கள். அதிலே இப்போது கேட்கிறவர்களுக்கு நாம் 10,000 என்று கேட்டால் அது ஏதோ பராபட்சமாக நடந்து கொள்வது போல் இருக்கிறது. யார் கேட்டாலும் அதே முறையை நீங்கள் தயவு செய்து வைத்து எல்லோருக்கும் கரண்ட் கொடுக்க வேண்டும். உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சீரான மின்சாரத்தை நீங்கள் உடனடியாக கொடுத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் மின்வெட்டு, மின்வெட்டு என்று நாங்கள் முன்பெல்லாம் கேட்டபோது, அது மின் வெட்டு அல்ல அது மின் தடை என்ற ஒரு விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள். அதே விளக்கத்தை எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் இங்கே சொல்லிவிடக் கூடாது. எங்களுக்கு தேவை கரெண்ட், அது ஏதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்ல, தொடர்ந்து எங்களுக்குக் கிடைப்பதற்காக, நீங்கள் 'க்ரிட் ஃபெய்லியர்' என்று சொல்வீர்களோ அல்லது மின்தடை என்று சொல்வீர்களோ எங்களுக்குத் தெரியாது, அதை நீங்கள் எப்படியாவது சீர் செய்து மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக தமிழகத்தை நீங்கள் படைக்க வேண்டும். தொழிற்பேட்டைகள் எல்லாம் வருவதற்கு நீங்கள் சிலவற்றை செய்து முடித்தால்தான் தொழில் வளரும். விவசாயிகள் கரும்புக்கு-என்னுடைய கரும்பைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் 1½ வருடமாக எல்லாம் சக்கையாகிப் போய்விட்டது. இன்னும் சர்க்கரை மில்லுக்குப் போனபாடு இல்லை. 1½ ஆண்டு காலம் கரும்பு வெட்டுவதற்கு, கட்டிங் ஆர்டர் கொடுப்பதற்கு நாம் எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால் விவசாயிகளாகிய எங்களுக்கு உழவுகோல்கூட மிஞ்சாது. பிறகு நாங்கள் எதற்காக அதை வைத்துக் கொண்டு இருக்க வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று வைத்துக்

கொண்டு ஒரு ஆண்டிலேயே கட்டிங் ஆர்டர் வரக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் வழிவகை செய்து உடனடியாக ஓராண்டுக்கு. யார் யாருக்கு எல்லாம் கட்டிங் ஆர்டர் வரவில்லையோ அவர்களுக்கெல்லாம் கட்டிங் ஆர்டர் கொடுப்பதற்கான வழிமுறையை நீங்கள் உருவாக்கித்தர வேண்டும்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** 20 நிமிடங்கள் ஆகிவிட்டன சீக்கிரமாக பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

***திரு. சி. ஞானசேகரன்:*** விவசாயிகளுக்கு நிலுவையில் இருக்கக்கூடிய கட்டணங்கள் வேறு அப்படியே கொடுக்காமல் இருக்கிறார்கள். அதையும் நீங்கள் உடனடியாகப் பெற்றுத் தரவேண்டும். எங்களுடைய வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் மழையே இல்லாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிற ஒரு மாவட்டமாக இருக்கிற காரணத்தினாலே அதை வறட்சி மாவட்டமாக அறிவித்து, நீங்கள் வறட்சிக்கான போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். புறம்போக்கு நிலத்திலே பலபேர் வீடுகளைக் கட்டிக் கொண்டு அவர்களுக்கு கரண்ட் இல்லாமல் இருக்கிறது. சென்ற ஆட்சியில் புறம்போக்கில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு 'நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்' ரெவின்யூ டிபார்ட்மெண்ட் கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் வீடு கட்டி 14, 15 வருடமாக இருக்கிறார்கள். சிலபேர் புறம்போக்கில் இருப்பவர்கள் கரண்ட் பெற்றுவிட்டார்கள். சிலபேர் பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி இருந்தாலும் கூட அவர்கள் பல்லாண்டு காலமாக இருந்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். புறம்போக்கு என்று சொல்லி இனி எடுக்கப் போவது இல்லை. இனி யாரும் புறம்போக்கிலே வீடு கட்ட வேண்டாம் என்று சொன்னால் கடுமையான ஆணை பிறப்பித்து, வீடே வராமல் வேண்டுமானால் தடுத்துவிடுங்கள். இப்போது வந்திருக்கிற வீடுகளுக்கு நீங்கள் எப்படியாவது உடனடியாக கரண்ட் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வீரப்பனை கடந்த ஆட்சியிலே பிடிக்காமலே விட்டுவிட்டார்கள். வீரப்பன், போன அரசுக்குத்தான் சவால் விட்டான் என்று சொன்னால், இப்போதுகூட பத்திரிகையைப் பார்த்தால், 5 கோடி ரூபாய் பொது மன்னிப்புக்கு, வந்து சரண் அடைய 5 கோடி ரூபாய் என்று இப்படிப்பட்ட சவால்களை விட்டுக் கொண்டிருக்கிறான். இப்போது அமைந்திருக்கிற அரசு நல்ல ஒரு அரசாக, நாட்டு மக்களுக்கு சட்டம், ஒழுங்கைக்



கொடுக்கக் கூடிய ஒரு அரசாக இருக்கிற காரணத்தினாலே, கடந்த 5 ஆண்டுக்காலத்தில் பிடிக்க முடியாத வீரப்பனை—எத்தனையோ டி.ஜி.பி இருக்கிறார்கள். டி.ஜி.பி. போகிறார்கள்; வருகிறார்கள். ஹெலிகாப்டரிலே போவதாக செய்தி அறிவித்தார்கள். இப்படி எல்லாம் சொல்லிவிட்டு, வீரப்பனைப் பிடிக்காமலேயே விட்டு விட்டார்கள். சமூக விரோதிகளுக்கு நீங்கள் பொது மன்னிப்பு கொடுப்பது என்பதை விட்டு விட்டு, நீங்கள் தண்டித்தால்தான் நம்முடைய காட்டு வளம் காப்பாற்றப்படும்.

பூரண மதுவிலக்கை நீங்கள் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய இளைஞர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையில் தொழிற்பேட்டைகளை நீங்கள் அறிவித்து-போன 1989 தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்கள் — மாவட்டந்தோறும் தொழிற்பேட்டை வரும் என்று. ஆனால், இந்த ஆளுநர் உரையிலே நீங்கள் தொழிற்பேட்டையைப் பற்றி சொல்லவில்லை. மாவட்டந்தோறும் ஒரு தொழிற்பேட்டையைப் படைத்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும். எம்.எல்.ஏ.-க்கள் சிபாரிசு செய்தால் உடனடியாக ரேஷன் கார்டுகளை 30 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று சென்ற ஆட்சியிலே ஒரு வரை முறை இருந்தது. ரேஷன் கார்டுகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. நீங்கள் அதே முறையைக் கையாண்டு மக்களுடைய பிரதிநிதிகள் பரிந்துரை செய்தால் உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 1-½ ஆண்டு காலமாக எங்கள் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்திலே ரேஷன் கார்டு கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்கின்ற முகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவையும் கூடி, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் 30 நாட்களுக்குள் அந்த ரேஷன் கார்டுகளை கொடுக்க வேண்டும் என்ற ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** ஒரு வரியில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

***திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கிராமங்களுக்கெல்லாம் பஸ் வசதி இல்லாமல் இருக்கிறது. கடந்த ஆட்சியிலே ரூபாயைப் பெற்றுக் கொண்டு — எத்தனைக் கோடி என்று சரியாகத் தெரியவில்லை, பல கோடி ரூபாய், ஏனென்றால் கணக்குக் கேட்பார்கள் — பல கோடி ரூபாய் கைமாறியதன் விளைவு, 'ரூட் வேரியேஷன்' என்ற பெயராலே கிராமங்களுக்கு பஸ் போகாமல் நஷ்டம் வரக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் இல்லாமல் நல்ல இலாபம் வரக்கூடிய ரோட்டிலே இன்று பஸ்கள் ஓடிக் கொண்டு இருக்கின்றன.

அதனால் எங்களுடைய தொகுதியிலேகூட பாலமதி என்ற மலை, செங்காநத்தம் என்ற மலை கிராமங்களுக்கு பஸ் இல்லாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏற்கனவே போடப்பட்ட அந்த அரசாணையை தயவு செய்து கேன்சல் செய்து பழைய நிலையை நீங்கள் கொண்டு வந்து கிராமங்களுக்கு பஸ்களை விட வேண்டும். பி.ஏ.டி.சி. அல்லது அரசு போக்குவரத்துக் கழகங்களைக் கேட்டால் அவர்கள் எங்களுக்கு லாஸ் வரும், ஏன் அவர்கள் இவ்வளவு நாள் ஓட்டி சம்பாதித்தார்கள், அவர்களையே போகச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி உங்களுக்குள் இருக்கிற போராட்டத்தில் மக்கள் நட்டாற்றில் நின்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மக்களுக்கு பஸ் வசதியை பழைய ரூட் வேரியேஷன்படியே மாற்றி நீங்கள் முறையாக செய்து கொடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு தொழில் வரியை ரத்து செய்ய வேண்டும். சத்துணவுப் பணியாளர்களை நீங்கள் நிரந்தரமாக்க வேண்டும்.

முற்பகல் 11 -10

அதே போல எங்களுடைய பால் பண்ணையிலே 15 கோடி ரூபாய் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு—அம்பேத்கர் மாவட்டத்தில், பலமுறை நான் பேசி நீதி விசாரணை கூட கேட்டுப் பார்த்துவிட்டேன். பால் பண்ணையிலே இன்று ஊழல்கள் ஏராளமாக ஏற்பட்டு இருக்கின்றன. என்னுடைய ஒரு மாவட்டம் மட்டும் அல்ல. எல்லா மாவட்டங்களிலும் பால் பண்ணையிலே ஏற்கனவே இருந்த பணம் பூராவும் அவுட். அதற்காக எந்தவித நடவடிக்கையும் இன்று வரை எடுக்கவில்லை. ஆகவே பால் பண்ணையிலே இன்று ஊழல்கள் ஏராளமாக ஏற்பட்டு இருக்கின்றன. என்னுடைய ஒரு மாவட்டம் மட்டும் அல்ல. எல்லா மாவட்டங்களிலும் பால் பண்ணையிலே ஊழல் ஏற்பட்டு இன்று தண்ணீர் பால் வழங்கப்படுகிறது. அந்த நிலையெல்லாம் மாற்றி நல்ல பாலை வழங்கி பழைய குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சரி அவர்களை நீங்கள் கைது செய்து சட்டத்தின் முன்னாலே கொண்டுவந்து நிறுத்த வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருக்கிறார், மகிழ்ச்சியான செய்தி. இன்னும் யார் யாரெல்லாம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்களோ அவர்களை நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும். அதேபோல ஐ.ஏ.எஸ். மட்டும் அல்ல. ஐ.பி.எஸ்-ஸிலும் அப்படி கறுப்பு ஆடுகள் இருக்கின்றன. ஐ.பி.எஸ்—ஸிலும் எடுத்துக் கொண்டால் கூட-பிரின்ஸிபிள் சீஃப் ஆஃப் கன்ஸர்வேட்டரிலே கூட - வாச்சாத்தி வழக்கிலே அவர்கள் குற்றவாளிகள் என்று சொல்லுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கூட அதிலே குற்றவாளிகளாக சி.பி.ஐ.-லே வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள் அவர்கள் ஐ.ஏ.எஸ். படித்தவர்களாக இருந்தாலும் சரி, ஐ.எஃப்.எஸ் படித்தவர்களாக





இருந்தாலும் சரி, அல்லது ஐ.பி.எஸ். படித்தவர்களாக இருந்தாலும் சரி தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன்னால் சமம் என்ற நிலையை நீங்கள் இங்கே கொண்டுவர வேண்டும்.

நாட்டு மக்கள் ஒரு நம்பிக்கையோடு வாழ வேண்டும். அரசியல்வாதிகள் என்று சொன்னாலே ஏதோ இவர்கள் எல்லாம் ஊழல் பேர்வழிகள் என்கிறார்கள். பொதுவாக அரசியல்வாதிகள் என்று சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. இப்படி பல பேர் கோடி கோடியாக கொள்ளை அடித்ததினுடைய விளைவு இன்று அரசியல்வாதி என்று சொல்லிக் கொண்டு பெருமையோடு நம்மாலே ரோட்டிலே நடமாட முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையை எல்லாம் மாற்றி. எப்படி எங்களுடைய கர்ம வீரர் காமராஜ் அவர்களுடைய காலத்திலிருந்து தொடங்கி மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கு மணம் உண்டு என்று சொன்னாரே அண்ணா, அவருடைய காலம் வரை பார்த்தீர்கள் என்று சொன்னால் அரசியல் வாதிகளை ஒரு கௌரவமாக நினைப்பார்கள். ஒரு எம்.எல்.ஏ. என்று சொன்னால் மரியாதை இருக்கும். கவுன்சிலருக்கு இருக்கக்கூடிய மரியாதைகூட இப்பொழுது கிடைக்கமாட்டேன் என்கிறது. இந்த நிலையையெல்லாம் மாற்றி அரசியல்வாதிக்கு முழு அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்று சொன்னால் இங்கே நியாயம், நீதி, நேர்மை எல்லாம் வர வேண்டும். அப்படி வரவேண்டும் என்று சொன்னால் ஏற்கனவே இடைத்தரகர்களாக இருந்த அதிகாரிகள் எல்லாம் இங்கே தண்டிக்கப்பட்டு அவர்களுடைய சொத்துக்கள் எல்லாம் அது ஆயிரம் கோடியோ அல்லது பத்தாயிரம் கோடியோ, ஐந்தாயிரம் கோடியோ எங்களுக்குத் தெரியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர்களும் இனி கோப்புகளை கண்டு எடுக்க வேண்டும். காவல்துறையை நீங்கள் பயன்படுத்த வேண்டும். எத்தனை கோடி ரூபாய்கள் கொள்ளை அடித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் நீங்கள் பறிமுதல் செய்து அவர்களை எல்லாம் கைது செய்து சட்டத்தின் முன்னாலே கொண்டு வந்து நிறுத்தினால்தான் அரசு இயந்திரத்தின் மீது நம்பிக்கை இருக்கும். இல்லையென்று சொன்னால் நம்பிக்கை போய்விடும் என்று சொல்லி 'நம்பினோர் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு' என்று சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. திருநாவுக்கரசு, அடுத்து உங்களுடைய கட்சி உறுப்பினர் பேச இருக்கிறார். அவர் பேசும்போது பதில் சொல்லலாம். நீங்கள் ஒவ்வொரு வரிக்கும் எழுந்து நின்று இப்படி குறுக்கீடு செய்து கொண்டிருந்தால் நன்றாக இருக்காது. *(குறுக்கீடு)* அடுத்து உங்களுடைய கட்சி உறுப்பினா பேசவிருக்கிறார். அவர் பேசும் போது சொல்லலாம். உட்காருங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அவர் முதலமைச்சரைப் பற்றி சொன்னார். தவறாகச் சொல்லியதைத் திருத்திச் சொல்ல வேண்டும். நாங்கள் எதற்காக உட்கார்ந்திருக்கிறோம்? வராமல் இருந்து விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தான் அதிக நேரம் பேசுகிறீர்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்கு வரலாமா வரவேண்டாமா என்பது அவரவர்களுடைய விருப்பம். உரிமை. ஆனால் ஒரு உறுப்பினர் பேசுவதிலே அதுவும் ஒரு நீதிமன்றத் தீர்ப்பு என்று சுட்டிக்காட்டிப் பேசியதில் அவர் குறிப்பிட்டது தவறாக இருந்தால் அதற்குப் பதிலளிக்கிற முதலமைச்சரோ மற்றவர்களோ பதில் சொல்லலாமே தவிர, அவையிலே உள்ளவர்கள் தங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னால், அதுவும் தவறு என்று இன்னொருவர் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே ஒருவர் தவறை இன்னொருவர் திருத்துவது என்ற முறையில் தாங்கள் சம்பந்தப்படாத பிரச்சினையில் எந்த உறுப்பினரும் திருத்துவதாகச் சொல்லி ஒரு கருத்தைச் சொல்ல இந்த அவையில் அனுமதிக்கக் கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்லும்போது அந்தத் தீர்ப்பைப்பற்றிச் சொல்கிற போது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரைப்பற்றி அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது என்று அவர் சொன்னார். அது தவறான செய்தி. முன்னாள் முதலமைச்சரைப்பற்றி அந்த கொடைக்கானல் ஹோட்டல் சம்பந்தமான வழக்கில், முதலமைச்சரைப்பற்றி எதுவும் இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் அரசாங்கத்தைப் பற்றி அந்தத் தீர்ப்பில் குறை கூறப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு குறளையும் நீதிபதி சீனிவாசன் கையாண்டு அதையும் குறிப்பிட்டிருக்கின்றார். முன்னாள் அரசு என்றாலே அது முதலமைச்சர் உள்ளிட்ட அரசு என்றுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருவோணம் மா. இராமச்சந்திரன்.



***திரு மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்த என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல் எங்களை எல்லாம் ஆளாக்கி எங்களுக்கு எல்லாம் பிதாமகராக இருந்து பீஷ்மர் அஸ்த்தினாபுரம் எப்படி தனக்கு உரிமை என்று கருதினாரோ அதேபோல் தமிழகம் தன்னுடைய உரிமை என்று கருதிய தன்னுடைய வாழ்நாள் எல்லாம் இந்த மக்களுக்காக அர்ப்பணித்து தன்னுடைய உழைப்பை-இன்றைக்கு உலகத் தலைவர்கள் அத்தனைப் பேர்களும் இந்த அளவுக்கு உழைத்து இருக்க முடியாது, அந்த அளவுக்கு தன்னுடைய உழைப்பை-இந்த மக்களுக்காகச் செலுத்திய - அவர்களுடைய உழைப்பை விட அவருக்குக் கிடைத்த பெருமைகள் குறைவு-அப்படிப்பட்ட ஒரு சிறந்த தலைவரை நாங்கள் எல்லாம் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல் அரசியலில் எப்படி வாழ வேண்டும்; நடைமுறைகளில் எப்படிப்பட்ட மனிதனாக இருக்கவேண்டும்; அரசியல்வாதிகளில் 'பிராக்டிகல் மேன்' என்று சொல்வார்களே அந்த அளவுக்கு தகுதியும், திறமையும் படைத்த, எங்களை எல்லாம் உருவாக்கிய எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. கோ. சி. மணி அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இரணடாவது முறையாக நாங்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் இந்த நாட்டில் 1989-ல் தேர்வு செய்தபோது, எங்களுக்கு அந்தத் தொகுதி மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் அவ்வளவு பெரியதாக இல்லை. ஆனால் இன்றைக்கு 1996-ல் தேர்வு செய்கிறபோது எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிற சிரமங்கள், அந்த மக்களைக் காண்கிறபோது பயம் பெரியதாக இருக்கிறது. காரணம் இதற்கு முன்னால் பிரச்சினைகள் இருந்தன. ஒரு கொடுங்கோன்மை ஆட்சி இந்த நாட்டில் நடைபெற்றிருக்கிறது என்பதை உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதி திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னது போல்,

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

— என்று சொன்னார்கள். இது எந்த அதிகாரத்தில் வருகிறது என்று

சொன்னால் கொடுங்கோன்மை என்ற அதிகாரத்தில் இந்தப் பாடல் வருகிறது. அப்படிப்பட்ட ஆட்சி இந்த நாட்டில் நடைபெற்ற காரணத்தால் நான் இன்றைக்கு நாம் எல்லாம் மக்களைக் காண்கிறபோது, அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளை எப்படி செயல்படுத்துவது என்கிற முறையிலே நாங்கள் எல்லாம் மக்களுக்கு எப்படி சேவை செய்வது என்ற மிக வருத்தமான சூழ்நிலையிலே இருக்கிறோம்.

எத்தனையோ திட்டங்களை 27 பாகங்களாக நமக்கு ஆளுநர் உரையிலே தந்து இருக்கிறார்கள். இன்றைக்கு கடவுள் மீது நம்பிக்கை இருப்பவர்களுக்கு 27 என்று சொன்னாலே நட்சத்திரங்கள் என்று சொல்லுவார்கள். 27 நட்சத்திரங்களைக் கொண்டு தான் இந்த நாட்டிலே அந்த ஜாதக கணிதத்தை வைத்து தான் நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளை இன்றைக்கு கணிக்கிறார்கள். அதேபோல் 27 பாகங்களைத் தந்திருக்கிற ஆளுநர் உரையிலே, மிக சிறப்பான திட்டங்களை இதில் தந்திருக்கிற ஆளுநர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஒன்றொன்றாக பாராட்டிக் கொண்டு போனால் எங்களுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளை என்னால் சொல்ல முடியாது.

தஞ்சை மாவட்டம் என்று சொன்னாலே காவிரியை நம்பி இருக்கிற மாவட்டம். இதற்கு முந்தி இருந்தவர்கள் ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் வந்து விடும் என்று சொல்வார்கள். எங்களுக்கு ராசியே தண்ணீர் ராசி என்று சொல்லி ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுகிறோம் என்று சொல்லி எங்களுடைய விவசாயிகளை எல்லாம் மிகக் கஷ்டத்திற்கு ஆளாக்கி, ஒரு முறையான முறையில் தண்ணீர் விடுகிறோம் என்று சொல்லாமல் சாகுபடி ஆரம்பிக்கச் சொல்லி தண்ணீருக்காக கஷ்டப்பட்ட காலங்கள் முன்னாலே. நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது நடுவர் குழுவை இந்த மாநிலத்திற்கு அமைத்து மிக சிறப்பான ஒரு முறையிலே நடுவர் குழு ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்புக்காக முன்பு இருந்தவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்து, தண்ணீர் திறந்து விட செய்கிறோம் என்று சொல்லி கடற்கரைச் சாலையில் காற்று வாங்கியவர்கள் இன்னும் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்பதை எல்லாம் நாம் அறிந்தவர்கள் தான். இன்றைக்கு மறுபடியும் நம்முடைய தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு தீர்வு காண இருக்கிறார்கள் என்பதை நாம் எல்லாம் பார்க்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.



முற்பகல் 11-20.

அதேபோல, தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு முன்னுரிமை வழங்க வேண்டும். விவசாயத்தை நம்பியே தஞ்சை மாவட்டம் இருக்கிறது. அந்த விவசாயத்தை நம்பியிருக்கிற மக்களுக்கு ஏதாவது ஒரு முன்னுரிமை அளித்து, தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் அந்த மக்கள் வாழ்வதற்கு ஒரு முறையாக, அவர்களுடைய வருமானம் பெருகுவதற்கு ஒரு வழிவகை செய்யும். அதற்காக வேண்டி நல்ல முறைகள் தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட வேண்டுமென்பது எங்களுடைய ஆசை.

அதே போல, எந்தச் சட்டமன்ற உறுப்பினர் திருவோணம் தொகுதியிலே நின்றாலும், முதலை முத்துவாரித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்வது வழக்கம். தேர்தலிலே வல்லம் பகுதியிலே செல்கிறபொழுது முதலை முத்துவாரித் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம் என்று சொல்லித்தான் வாக்குகளை வாங்குகிறோம். முன்னால் இருந்த நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலும், நம்முடைய அமைச்சரவர்கள் அப்பொழுது அவருடைய பொதுப் பணித் துறை மானியத்தில் ஒன்றேகால் கோடி ரூபாய் அந்த நிதி நிலை அறிக்கையிலே வகுத்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே வந்த அரசாங்கம் அதைச் செயல்படுத்தாமல் அப்படியே விட்டு விட்டார்கள். அதை மறுபடியும் ஏற்படுத்தி முதலை முத்துவாரித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

வல்லம் பகுதியிலே எங்கள் பகுதிக்கு மின்சாரப் பிரச்சினை மிகக் கஷ்டமாக இருக்கிறது. வல்லம் பகுதியிலே 230 கே.வி., 230 கிலோவாட் என்கிற அந்தப் பெரிய மின் நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்படுத்திய ஆட்சி மிகத் துரிதமாகச் செயல்படுத்தாமல் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு நாளும் ஷீ ணித்துப் போகிற அளவிற்கு வேலைகளைக் குறைத்து கொண்டிருக்கிறார்களே தவிர, பெரிதாகச் செய்யாமல் இன்றைக்கு நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அதைத் துரிதப்படுத்தி எங்களுக்கு அந்த மின்சாரத்தை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இன்றைக்கிருக்கின்ற காவல் துறையைப் பொறுத்து, நம்முடைய தலைவரைப் பார்க்கிற பொழுதெல்லாம், நாங்களெல்லாம் முன்னமே பார்க்கிறபொழுது மகிழ்ச்சியாக இருப்பார். நாங்களெல்லாம்

சந்தோஷப்படுவோம். அவருடைய முகத்திலே ஒரு மகிழ்வு இருக்கும். ஒரு கனிவு இருக்கும். ஆனால் இன்றைக்குப் பார்க்கிறபொழுது எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தோழமைக் கட்சி நண்பர்களெல்லாம் சொல்கிறார்களே, இத்தனை கோடி ரூபாய்களை, பல ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் ஊழல்கள் நடைபெற்று விட்டன, அவைகளையெல்லாம் கண்டுபிடித்து நீங்கள் திறமையாகச் செயல்படுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே, மக்களுடைய எதிர்பார்ப்புகளை எப்படிச் செய்வது, மக்களுக்குச் சேர வேண்டிய காரியங்களை எப்படிச் செயல்படுத்துவது என்பதிலேதான் மிகக் கஷ்டமாக இன்றைக்கு நம்முடைய தலைவரவர்கள் மக்கள் நம்மை நம்பி இன்றைக்குத் தேர்ந்தெடுத்து முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள், அவர்களுக்கு எப்படிக் காரியங்களைச் செய்வது என்பதிலே அவர்களுடைய கவனம் இருப்பதினாலே, இன்றைக்குக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். நான் முள் பாதையிலே நடைபோட வேண்டியிருக்கிறது என்று சொல்லி, அவருடைய முகத்திலிருந்த கனிவு இன்றைக்கு இல்லை. நாங்களெல்லாம் அவரைப் பார்க்கிறபொழுது வருத்தப்படுகிறோம். இந்த ஆட்சியிலே இல்லாமல் இருந்தால்கூட அவர் நன்றாக தெளிவாக இருப்பாரே என்கிற வருத்தம் எங்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட, மக்களைச் சிந்தித்துப் பார்க்கிற ஒரு முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது.

இன்றைக்குக் காவல் துறையைப் பார்க்கிறபொழுது அத்தனை காவல் துறையிலும் இதற்கு முன்னாலேயிருந்த அரசாங்கம் எஃப்.ஐ.ஆர். என்பதே போடுவது இல்லை. எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் முன்னாலேயிருந்த அரசாங்கத்திலே ஒவ்வொரு காவல் நிலையங்களிலேயும் இருக்கிறவர்கள், ஏழை எளியவர்கள் அடிபட்டு வருகிறபொழுது அவர்களுக்கெல்லாம் ஒரு எஃப். ஐ. ஆர். போட்டு அந்த நிகழ்ச்சியை அதற்குப் பின்னாலே இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லி விசாரணை செய்து வாக்குமூலங்களையெல்லாம் விசாரித்து குற்றப் பத்திரிகை செய்வது வழக்கம். ஆனால் முன்னாலேயிருந்த அரசாங்கம் செய்ததன் காரணமாக, எந்த வழக்காக இருந்தாலும் ஒரேநாளிலே முடித்து விடுகிற ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிறோம். ஒரே நாளிலே ஒரு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது, அதை ஒப்புக் கொள்வது, அதற்குத் தண்டனை அளிப்பது, ஏதாவது அபராதத்தைப் போடுவது (மணியடிக்கப்பட்டது) 4,3 நிமிஷம்தானே பேசி இருக்கிறேன்.. அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகையினாலேதான் அந்த நடைமுறைகளையெல்லாம் மாற்றி, எப்பொழுதுமே நீதிமன்றத்திலே வந்து போகிற ஒரு நிகழ்ச்சியாக



இருந்தால்தான் குற்றவாளிகள் என்பவர்கள் நீதிமன்றத்திலே வாய்தாவுக்கு வந்து போகிற நிகழ்ச்சியாக இருந்தால் குற்றங்கள் குறையும். அதைபோல நீதிமன்றத்திலே ஒரு கொலைக் குற்றமாக அல்லது பெரிய குற்றமாக இருந்தால் அந்தக் குற்றத்தை ஜாமீனிலே விடுவது என்பது மிகக் குறைவாக இருந்தால் குற்றங்கள் குறையும். இவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்பது வேறு.

*முறற்பகல் 11-25*

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கிற மக்களுடைய பிரச்சினை, குடிநீர். அதை நம்முடைய முதலமைச்சரவர்களே ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் பிரச்சினை மக்கள் மத்தியிலே பெரிதாக இருக்கிறது. அதை தீர்க்க வேண்டுமென்ற நிலை வருகின்றபோது, அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிறைய பணங்களை மக்கள் மத்தியிலே செலவிடுவதற்கு நிதிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கின்ற நிலத்தடி நீர் கீழே போய்விட்டது. கீழே போய்விட்ட காரணத்தினாலே ஜெட் பம்புகளை இன்றைக்கு டுவாட் போர்ட் வைத்திருக்கிறார்கள். ஜெட் பம்புகளைப் போட்டால் கீழே இருக்கின்ற தண்ணீரை எடுத்து மேலே தொட்டியிலே கொட்டுவது குறைவாக இருக்கும். ஆனால் மின்சாரத்தினுடைய கட்டணம் கூட இருக்கும். ஆகவே, அந்தமாதிரி ஜெட் பம்புகளை மாற்றி நீர் மூழ்கி மோட்டார்களை பயன்படுத்துவது தான் நல்லது. அந்த நீர்மூழ்கி மோட்டார்களை பயன்படுத்துகின்றபோது அது தண்ணீரை நிறைய கொண்டு வரும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும். கிராமங்களிலே இன்றைக்கு ஜெட் பம்புகளை வைத்துக் கொண்டு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம், இதற்கு முன்னாலே இருந்த மந்திரிமார்களெல்லாம், தண்ணீர் கொண்டு செல்வதற்கு அந்தக் குழாய்களைப் போடுவதற்கு, டென்சிட்டி, கேஜ் என்று சொல்வார்களே அது கூடுதலாக இருந்தால் தண்ணீர் சிதறி வெளியே வராமல் சரியாகப் போகும். எப்படியோ, எந்தக் காரணத்தினாலோ அவர்கள் செய்த தவறுகளின் காரணமாக அந்தக் குழாய்கள் எல்லாம். அந்த டென்சிட்டி, அந்தக் கேஜ் குறைந்த காரணத்தினாலே, குழாய்கள் வெடித்து தண்ணீர், மேலே தொட்டிகளிலிருந்து மக்களுக்குப் பயன்படுகிற தண்ணீர், பயன்படாமல், வீணாகத் தெருக்களிலே போவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைக்கு வடிகால் வாரியத்தை, எங்களுடைய அமைச்சரிடம், மாண்புமிகு அண்ணன் அவர்களிடம்

அந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மிகத் தெளிவாகச் செய்கின்ற அமைச்சராகத்தான் இன்றைக்கு இருக்கிறார். நிதி ஒதுக்கீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு தூரம் இதிலே அக்கறை எடுத்து குடிநீர் சேர்க்க வேண்டுமென்று கருதுகிறார்களோ, அதற்கு நிறைய ஒதுக்கீடு செய்தால்தான் சரியாக செய்ய முடியும். அதனுடைய மெயின்ட்டனன்ஸ் என்ற ஒரு பகுதியிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் இதைப் போட்டுவிட்டால், அதற்குப் பின்னால் மெயின்டனன்ஸ்-சை மறுபடியும் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே மெயின்டனன்ஸ் செய்வதற்கு, அதைப் பராமரிப்பதற்கு அவர்களிடம் ஒன்றுமே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிருக்கிறது.

அதேபோல யூனியன் டிஸ்பென்ஸரிகள். நம்முடைய ஆட்சிக் காலத்தில் யூனியன் டிஸ்பென்ஸரியை, அந்த ஒன்றியத்தினுடைய மருத்துவமனையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றினார்கள். இதற்கு முன்னாலே 5 ஆண்டு காலம் ஆண்ட ஆட்சி எதையுமே செய்யாமல், மக்களுக்கு ஒன்றும் செய்யாமல், அப்படியே இருந்து விட்டு, அந்த மருத்துவ மனைகளையெல்லாம் பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றவில்லை. கிட்டத்தட்ட 70, 76 மருத்துவமனைகள் யூனியன்களில் இருக்கின்றன. அவையெல்லாம் அப்படியே இருக்கின்றன. அங்கு மருந்தே கிடையாது. டாக்டருக்கு சம்பளம் கொடுப்பதற்கு மட்டும்தான் யூனியனுக்கு முடியுமே தவிர, மருந்து வாங்கி கொடுப்பதற்கு அவர்களால் முடியாது. அவைகளையெல்லாம் பிரைமரி ஹெல்த் சென்டருக்கு மாற்றினால்தான் அந்த மக்களுக்குப் பயன்படுகிற ஒரு மருத்துவமனையாக இருக்கும். இப்படிபட்ட சூழ்நிலை மாற வேண்டும். (மணியடிக்கப்பட்டது) ஏன் தி.மு.க.-வுக்கு மட்டும் குறைச்சலான நேரம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** சரி முடித்துவிடுகிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் சரி செய்து, நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, திருவோணம் தொகுதியைப் பொறுத்தவரை, 86 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அத்தனையும் கிராமங்கள். சாலைகள் எதுவும் போடப்பட்டதாகத் தெரியவில்லை, மக்கள் மத்தியிலே, இதற்கு முன்னாலே 5 ஆண்டு காலம் ஆண்டவர்கள் பொதுவாக பெரிய சாலைகளாக இருப்பதை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால்,



கிராமத்திலே நடுவிலே இருக்கின்ற சாலைகள் எல்லாம் அப்படியே பழுதுபட்டுப் போனவைகள் எல்லாம் திரும்பவும் ஒன்றுமே செய்யாமல், 5 ஆண்டு காலம் அப்படியே கிடப்பிலே போட்டு, அவையெல்லாம் போடப்பட்டதாகக்கூடக் கணக்கிலே எழுதி பணம் பெற்றிருக்கிறார்கள். இவைகளையெல்லாம், இந்தக் குற்றங்களையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டே இருந்தால், நாட்டுக்கு நல்லது செய்வது என்பது மிகக் கஷ்டமான காரியமாக இருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்துகிறபோது, தேவைகளை செய்ய முடியுமா? நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டமே இவர்கள் செய்த ஊழல்களைக் கண்டுபிடிப்பதா அல்லது மக்களுக்குச் சேவை செய்வதா என்ற எண்ணத்தினாலேதான் இன்றைக்கு எங்களுடைய தலைவருடைய முகத்திலே தெளிவு இல்லாமல் இருக்கிறார்கள். 35 ஆயிரம் திருமணங்களை கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்தினார்கள் 35 ஆயிரம் திருமணங்களை, 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து நடத்தினார்கள். ஆயிரம், 5 ஆயிரம் என்று நடத்தியவர்கள். அதற்கெல்லாம் என்ன கணக்கு என்றே தெரியவில்லை. 5 ஆயிரம் திருமணங்கள், ஆயிரம் திருமணங்கள் நடத்தினார்கள். அதற்கு ஆன செலவுகளை யார் கொடுத்தது. எங்கேயிருந்து அந்தப் பணம் வந்தது, என்பதே தெரியவில்லை. அந்தத் திருமணங்கள் நடந்துவிட்டன. எனக்கே ஒன்று வந்தது. என்னுடைய புருஷன் இன்னொரு பெண்ணை அழைத்துக்கொண்டு போய் கல்யாணம் பண்ணுகிறார் என்று என்னிடம் வந்து கத்தினார்கள் இரண்டு மூன்று பேர். அப்போது தந்திகூட கொடுத்தோம். ஆகவே, இந்த 5 ஆயிரம் திருமணங்கள், ஆயிரம் திருமணங்களில் எல்லாம் இதற்கு முன்னாலே திருமணம் ஆகி, வயதானவர்கள் எல்லாமே மறுபடியும் திருமணம் செய்துகொண்ட நிலைகள் எல்லாம் இருந்தது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. அவைகள் எல்லாம் இல்லாமல் கலைஞர் அவர்கள் 35,000 திருமணங்களை நடத்துவதற்கு 5,000 ரூபாய் வீதம் செலவு செய்தார்கள். இன்றைக்கு அதை 10,000 ரூபாய் என்று நம்முடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல நிகழ்ச்சிகளை நடத்துகிற இந்த அரசாங்கம் மறுபடியும் வந்திருக்கிறது. நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுடைய தலைவர் மகிழ்ச்சி அடைய வேண்டும்: அதுதான் எங்களுடைய ஆசை. அவருடைய மனதில் இருக்கிற கஷ்டம் நீங்க வேண்டும். நல்லாட்சி மலர வேண்டும். அவரை நாங்கள் பார்க்கிற போது அவருடைய முகத்தில் எப்போதும் இருக்கிற கனிவு மறுபடியும் வர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

[1996 மே 28

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ.வ. அப்துல் நாசர்.

*திரு. அவ. அப்துல் நாசர்: வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றிதெரிவித்து இந்திய தேசிய லீக்கின் சார்பாக கன்னிப்பேச்சு பேசுவதற்கு தாங்கள் எனக்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். தமிழக மக்களால் தெளிவான தீர்ப்பளிக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அமையப் பெற்ற இந்த 11-வது சட்டமன்றப் பேரவையில் புவனகிரி தொகுதி சார்பில் உறுப்பினராக அங்கம் வகிக்க வாய்ப்பினைத் தந்த எனது தலைவர் பன்மொழிப் புலவர் அல்ஹாஜ் எம். ஏ. லத்தீப் சாகிப் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருண்டு கிடந்த தமிழகத்தில் உதயசூரியன் ஒளிமிகுந்த நல்லாட்சியை நடத்திட தெளிவான, உறுதியான தீர்ப்பை மவுனப் புரட்சியின்மூலம் ஏற்படுத்தித் தந்த தமிழகத்தின் கோடான கோடி தமிழ் நெஞ்சங்களை மனதாரப் பாராட்டுவதோடு, எனது நெஞ்சார்ந்த நன்றியையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன். குறிப்பாக எனது தொகுதியான புவனகிரி தொகுதி மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரை என்ற பெயரிலே பெரிய புத்தகத்தைக் கையில் கொடுத்து பொருத்தமில்லாத புகழுரைகளையும், கற்பனைக்கு எட்டாத திட்டங்களையும், வரைமுறையற்ற வாக்குறுதிகளையும் வாரி வழங்கிடாமல் கடுகு சிறுத்தாலும் காரம் குறையாதென்பதைப் போல குறைவான பக்கங்களில் இருந்தாலும், நிறைவான திட்டங்களுடன் மேதகு ஆளுநர் அவர்களின் உரையை அளித்து தமிழக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் திட்டம் வகுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் கனவு நனவாகும் வண்ணம் திராவிட மொழிகளில் தொன்மையானதும், கீர்த்தி பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் செறிந்த அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிட இந்த அரசு எடுக்கும் அனைத்து வகை முயற்சிகளுக்கும் நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் தனது முழு ஒத்துழைப்பையும் தரும் என்று உறுதி கூறுகிறேன்.



1996 மே 28] [திரு. அ. வ. அப்துல் நாசர்]

அதுமட்டுமல்லாமல் இதுவரை எந்த அரசும் செய்திராத முறையில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ், இன்றும் தமிழ், என்றும் தமிழ் என்ற நிலை உருவாகிட தமிழ் மொழிக்கோர் துறையை ஏற்படுத்தி, தங்கத்தில் வைரத்தைப் பதித்தது போல், அதற்குப் பொருத்தமான ஓர் அமைச்சரையும் திறம்பட நியமனம் செய்திட்ட, தமிழார்வம் கொண்ட தமிழின் பெருமை அறிந்த தமிழர் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அரசு பாராட்டுக்குரியது. இதற்கு உவமையாகச் சொல்லவேண்டுமானால் நமது மாண்புமிகு முதல்வர் எழுதியுள்ள திருக்குறள் உரையில் கலைஞர் குறிப்பிட்டு உள்ளதுபோல 'இமயமலையின் மீது பட்டாடை போர்த்தியது போல' என்ற உவமைதான் எனது நினைவிற்கு வருகிறது.

அதே சமயம் சிறுபான்மை மொழியான உருதுமொழியின் வளர்ச்சிக்கும் இந்த அரசு உதவி செய்யும் என்று நான் நம்புகிறேன்.

மேலும் மக்களிடம் மறக்கடிக்கப்பட்ட உள்ளாட்சித் தேர்தலை நடத்திடவும், கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், நியாயவிலைக் கடைகளில் வினியோக முறைகளைச் சீராக்கவும் இந்த அரசு மேற்கொள்ள இருக்கின்ற நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன்.

அறிஞர் அண்ணா வழியில் நடைபோடும் இந்த அரசு, பெருக்கெடுத்து ஓடும் கள்ளச்சாராயத்தை ஒழித்து மக்களுக்கு நல்வாழ்வைத் தமிழகத்தில் வழங்கிட பூரண மதுவிலக்கை அமல் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள், வணிகர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று அனைத்துத் தரப்பினரும், இந்த அரசு பலவிதமாக நன்மைகளைச் செய்யும் என்று நம்பி வாக்களித்து இருக்கிறார்கள். மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான இந்த அரசு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நன்மையான காரியங்களைச் செய்யும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புவனகிரி தொகுதியில் நெசவாளர்கள் நிறைந்து வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற நெசவாளர்கள் வாழ்வில் ஒரு மலர்ச்சி ஏற்பட வேண்டும். கைத்தறிச் சிட்டா நூல் மானியம் 1-4-1996 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மானியத்தை மீண்டும் வழங்கி கைத்தறி நெசவாளர்கள் இல்லங்களில் ஒளியேற்றிட வேண்டும் என்று இம்மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில் புவனகிரி ஒன்றியம் கஸ்பா ஆலம்பாடியில் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் கண்ணாடித் தொழிற்சாலை விரைவில் கட்டி முடிக்கப்பட்டு எனது தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிட வேண்டும் என இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

எனது தொகுதி கிள்ளைப்பகுதியில், விவசாயத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்பட்டுவரும் கான்சாஹிப் வாய்க்கால் தூர்ந்து போய், பாழடைந்துள்ளது. மேலும், கொள்ளிடம் ஊற்றுநீர்த் திட்டம் சர்வே செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, கிடப்பில் போடப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஊற்றுநீர் திட்டத்தை செயல்படுத்தி, கான்சாஹிப் வாய்க்கால் சுத்தப்படுத்தப்பட்டால், அந்த வாய்க்கால் பாசனத்தைக் கொண்டு கிள்ளைவாழ் பகுதி மக்களின் தண்ணீர்ப் பிரச்சினை தீர்வதோடு, சுமார் 9,000 ஏக்கர் விளைநிலங்கள் இருபோக சாகுபடி செய்ய வகை செய்யும். எனவே, இத்திட்டத்தை முறையாக நிறைவேற்றி, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை கழக அரசு நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பரங்கிப்பேட்டை துறைமுகம் முன்னொரு காலத்தில் இயற்கைத் துறைமுகமாக விளங்கி வந்தது. அந்தத் துறைமுகம் தூர்ந்துப்போயுள்ளது. அந்தத் துறைமுகத்தின் முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, மீன்பிடி துறைமுகமாக அமைத்து அப்பகுதிவாழ் மீனவர்களின் வாழ்வில் ஏற்றம் பெற, வகை செய்திடும்படி இந்த அரசை இம்மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அழகுமிக்க பிச்சாவரத்தில் அறிஞர் அண்ணா சுற்றுலா மையம் தகுந்த பராமரிப்பு இல்லாமல் சீர்குலைந்து போயுள்ளது. அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் அதனைக் கண்டு ஏமாற்றமும் வேதனையும் அடைகின்றனர். எனவே, அந்தச் சுற்றுலா மையத்தை அழகுபடுத்தி, நவீனப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் பயன்பெற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



பரங்கிப்பேட்டையில் ஒரு குடம் குடிநீர் இரண்டு ரூபாய்க்கு வாங்கித்தான் பயன்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதே போல் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பின்னத்தூர் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு கடந்த எட்டு வருடங்களாக மின்மோட்டார் இல்லாமல், பயன்படுத்தப்படாமல் வீணாக உள்ளது. இது போன்ற குடிநீர்ப் பிரச்சினைகள் எனது தொகுதி முழுவதும் பரவலாக உள்ளன. மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுப்போம் என்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் திட்டப்படி, எனது தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவேண்டுமாய் இம்மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில் பரவலாக மின் அழுத்தக் குறைவு உள்ளது. இன்றும் சில கிராமங்களில், சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்றுவரை, மின் இணைப்பே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். இப்பிரச்சினை தீர்ந்திடவும், சாலை வசதிகள் மேம்படவும், பஸ் போக்குவரத்து அனைத்துக் கிராமங்களுக்கும் வழங்கிடவும் கேட்டுக் கொள்கிறேன். புவனகிரியில் அரசு பொது மருத்துவமனையாக இயங்கி வந்ததை கடந்த ஆட்சியில் ஆரம்ப சுகாதார மையமாக மாற்றியுள்ளதை மீண்டும் அதை அரசு பொது மருத்துவமனையாக தகுதி உயர்த்திடவும் ஆவன செய்யுமாய் இம்மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில் மல்லிகைப் பூந்தோட்டங்கள் அதிக அளவில் உள்ளன. இதனைப் பயன்படுத்தி கூட்டுறவு முறையில் சென்ட் தொழிற்சாலை அமைத்திட ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைமட்டும் கூறி நிறைவு செய்ய விரும்புகிறேன். சென்ற 1989-91-ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலே தமிழ்நாடு வஃப் வாரியம் எங்களது தலைவர் பன்மொழிப்புலவர் திரு. எம்.ஏ. லத்தீப் அவர்களின் தலைமையில் திறமையாகச் செயல்பட்டு சமூக விரோதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட வஃப் வாரியச் சொத்துக்களை மீட்டு, முஸ்லீம் சமுதாயத்தினரின் மனமார்ந்த பாராட்டுக்களைப் பெற்றதுபோல், தற்போது அமைந்துள்ள கழக ஆட்சியும் வஃப் வாரியத்தின் மூலம் சிறந்தப் பணியை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

மேலும், ஜார்ஜ் டவுனில், சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வஃப் வாரியக் கட்டிடம் கட்டுவதற்காக வாங்கப்பட்ட இடம், இன்னும்

கட்டிடம் கட்டப்படாமல் அப்படியே உள்ளது. இந்த அரசு வஃப் வாரியத்திற்கு அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, சிறுபான்மை முஸ்லீம்கள், கிறித்துவர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட கிறித்துவர்கள் நலனிலும் அக்கறை கொண்டு அவர்களுக்குரிய சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கிட ஆவன செய்யுமாறு இந்த அரசை இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொண்டு இதுகாறும் எனக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மேதகு ஆளுநர் உரைக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு மணி அடிக்கும் வேலையில்லாமல் செய்து, குறித்த நேரத்தில் முடித்துக் கொண்ட உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, சங்கரன்கோயில் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு சொ. கருப்பசாமி.

*முற்பகல் 11-40*

**திரு. சொ. கருப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. கழகம் என்னும் இயக்கத்தை உருவாக்கிய தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்ற, வங்க கடலோரம் தூங்கிக் கொண்டிருக்கும் தங்கத் தலைவர், மறைந்த முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால், ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அடையாளம் காட்டப்பட்டு, சங்கரன்கோவில் தொகுதி மக்களின் பேராதரவையும் பெற்று வெற்றியை ஈட்டித் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அவர்கள் அன்பைப் பெற்ற சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் 14-வது பத்தியில் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் குடிமைப்பொருள்கள் சரியான முறையில் வினியோகம் செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்ட நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும் முறைகேடாக நடக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று





மட்டும் உரையில் உள்ளது. இது தமிழக மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. காரணம் எங்களுடைய புரட்சித் தலைவியின் அரசு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கி வந்த மாதம் 20 கிலோ அரிசி மற்றும் 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி போன்ற எண்ணற்ற குடிமைப் பொருள்களை குறைந்த விலையில் வழங்கியதைத் தவிர ஏழை, எளிய மக்களுக்கான சலுகைகள் ஏதும் ஆளுநர் உரையில் இல்லை என்பதை நான் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேதகு ஆளுநர் உரையில் 18-வது பத்தியில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மாநகரங்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மொத்தம் 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கிராமப்புறங்களுக்கு ஒவ்வொரு ஒன்றிய வாரியாக அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த அரசு நிதி ஏதும் ஒதுக்கவில்லை. ஆதலால் கிராமப்புற மக்களைப் புறக்கணிப்பதாகத் தெரிகிறது.

மேதகு ஆளுநர் உரையில் 19-வது பத்தியில் உள்ளபடி மாநிலம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத குடியிருப்பு இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என்று உள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு குடியிருப்பிற்கும், ஒவ்வொரு கிராமங்களுக்கும் முதலில் குடிநீர் கிடைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது எனது வேண்டுகோள். காரணம், அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளது என்றுதான் சொல்கிறார்கள்.

மேதகு ஆளுநர் உரையில் 20-வது பத்தியில் கிராமப்புறங்களில் அடிப்படை மருத்துவ வசதி தடையின்றி கிடைக்கவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் முறையாக பணியாற்றுவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் உள்ளபடிதான் இருக்கிறதே தவிர புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவோ அல்லது கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதாகவோ, ஆளுநர் உரையில் இல்லை. இதுபோல்தான் அனைத்துப் பத்திகளிலும் உள்ளது என்று கூறி எனது தொகுதிக்கு தேவையான அடிப்படைத் தேவைகளை எடுத்துக் கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலே மிகவும் வறட்சியான பகுதி சங்கரன்கோவில் தொகுதிதான். இந்தத் தொகுதி 3 ஒன்றியம், 1 நகரம், 1 பேரூராட்சி அடங்கிய பகுதியாகும். குடிநீர்ப் பிரச்சினை

அதிகமாக உள்ள எனது தொகுதியில் போர்க்கால அடிப்படையில் குடிநீர் கிடைக்க கிராமப்புறங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க போதிய நிதி ஒதுக்கிடவும், கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக சங்கரன் கோவில் நகருக்கு எங்களது புரட்சித் தலைவி அரசு கொண்டு வந்த தாமிரபரணி கூட்டுக் குடி நீர் மேட்டுப் பகுதி, தாழ்வான பகுதிகளில் ஒரே சீராக கிடைப்பதற்கும், சங்கரன்கோவில் நகருக்கு அருகிலுள்ள குடிநீருக்கு மிகவும் கஷ்டப்படும் கிராமங்களுக்கும் தாமிரபரணி தண்ணீர் கிடைக்கவும் போதிய நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலேயுள்ள எனது தொகுதியான சங்கரன்கோவில் தொகுதி முழுவதும் வானம் பார்த்த பூமியாக விவசாயத்தை நம்பி இருக்கிறது. தொழில் வளம் இல்லாத பின்தங்கிய தொகுதியாக உள்ள சங்கரன்கோவில் தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை கட்டி ஆயிரக்கணக்கான வேலையில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வு கொடுத்திட இந்த அரசு முன்வர வேண்டும்.

*முற்பகல் 11-45*

சங்கரன்கோவில் நகரத்தைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையான மக்கள் நெசவுத் தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்ற மக்களாக இருந்து வருகிறார்கள். மேலும் சங்கரன்கோவிலைப் பொறுத்தவரையில் கல்வித் தரத்தில் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அங்கே பெண்களுக்காக கல்லூரி ஒன்றும் இல்லை. வெளியிடங்களுக்குச் சென்று படிக்கவேண்டிய நிலை உள்ளது. எனவே, பெண்கள் கல்லூரி ஒன்று கட்டி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி வீணாகக் கடலில் போய் சேர்கின்ற கீரி ஆற்றைத் தமிழகத்திற்குத் திருப்பிக் கொண்டு வந்தால் நெல்லை-கட்டபொம்மன், காமராஜர், வ.உ.சி. போன்ற மாவட்டங்கள் பயன்பெறக்கூடியதாக அமையும். எனவே, கீரி ஆறு திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டும்.

தென்மாவட்டங்களில் உள்ள முக்கிய தலைசிறந்த கோவில் ஸ்தலங்களில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலும் ஒன்று. ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு சுவாமி, அம்மன் ஆகிய இரண்டு தேர்களும் ரதவீதியைச் சுற்றி வரும். எங்களுடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஒரு தேருக்கு பல இலட்சம் ரூபாய் செலவில் இரும்புச் சக்கரம், இந்து அறநிலைத் துறையின் மூலமாகப் பொருத்தப்பட்டுள்ளது. மற்றொரு



தேருக்கும் அதேபோல் இரும்புச் சக்கரம் பொருத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

எனது தொகுதியான சங்கரன்கோவில் தொகுதி மூன்று பெரிய ஒன்றியம், ஒரு பெரிய நகரம் அடங்கிய பகுதியாகும். இதற்கான காவல் நிலையம் சங்கரன்கோவிலுக்குத் தென்பகுதியில் உள்ளதைப் போல் கீழ்ப்பகுதிக்கும், சங்கரன்கோவில் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து சங்கரன்கோவிலுக்குக் கிழக்குப் பகுதிகளை மையமாகக் கொண்டு தனியாக அங்கு ஒரு காவல் நிலையம் செயல்படுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேணடும்.

எனது தொகுதியான சங்கரன்கோவிலில் 1989-90 இல் அப்போது இருந்த உங்களுடைய அரசால் புதியதாக பேருந்து நிலையக் கட்டிடம் கட்டப்பட்டு இன்று வரையிலும் உபயோகப்படாமல் உள்ளது. கிட்டத்தட்ட பலகோடி ரூபாய் வீணாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. காரணம் அப்படிப்பட்ட இடத்தைத் தேர்வு செய்த அன்றைய அமைச்சர்கள் பங்கு போட்டுக்கொண்டார்கள். இதுபோன்ற நிலை வராமல் மக்கள் தேவைக்கேற்றவாறு பயன்பெறக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஆளுநர் உரையில் குறைவான பக்கங்களும், அதில் அடங்கிய உட்கருத்துக்களும் கூடுதலாக ஏதும் இல்லை என்று கூறி நான் சார்ந்திருக்கின்ற அ.தி.மு.க. சார்பில் நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை இந்த அவைக்கும், இந்த அவையின் மூலமாக மாநில மக்களுக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரிசி விலையை இரண்டு ரூபாய் என்று ஆக்கியது முன்னாள் முதலமைச்சர் என்று ஒரு கூற்று தேர்தல் நேரத்திலே பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்போது அதை உண்மை என்று நம்பவோ அல்லது நம்பவேண்டுமென்று நினைத்தோ அதே கருத்து இந்த அவையிலேயும் மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர்களால் எடுத்துச்சொல்லப்பட்டு வருகின்றது. உண்மை நிலவரம் என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மோட்டா ரக அரிசி நியாய விலைக் கடைகளில் இரண்டு ரூபாய்தான். அந்த இரண்டு ரூபாயில்தான் இப்போதும் விற்கப்படுகிறது. அதைத்தான் முன்பிருந்த முதலமைச்சர்

அவர்களும் கடைப்பிடித்தார்கள். அந்த இரண்டு ரூபாயைக் குறைக்கவில்லை. இது மோட்டா ரக அரிசி. சன்னரக அரிசி தி.மு.க. ஆட்சியில் 1989-90-இல் இரண்டு ரூபாய் ஐம்பது காசு, 'பைன் வெரைட்டி'. அதை ரூ.4.75 என்று உயர்த்தினார்கள். எதிர்க்கட்சிகளெல்லாம் போராடிய பிறகு அதை ரூ.3.75 என்று நிர்ணயித்தார்கள். எனவே, இந்த அரிசி விலை ரூ. 3.75 தான். அந்த வகையில் இரண்டு ரூபாய் என்பது தி.மு.க. ஆட்சியிலே இருந்த விலைதான் என்பதையும், இன்றைக்கு அந்த மோட்டா ரக அரிசிதான் இரண்டு ரூபாய் விலை என்பதையும் விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கின்ற 20 கிலோ அரிசியிலே 6 கிலோ மட்டும்தான் இரண்டு ரூபாய் விலைக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பாக்கி எல்லாம் அந்த சன்னரக அரிசியினுடைய மூன்று பிரிவாக ரூ. 3.50, ரூ. 4.50 என்று மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. வீரப்பன்.

*முற்பகல் 11-50*

* **திரு. கோ.க. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது இங்கே பேசுகிற வாய்ப்பை வழங்கிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே நடைபெற்று வந்த அக்கிரம ஆட்சிக்கு, அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டி மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஒரு நல்லாட்சி அமைந்திட வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை 1990-லே பாராளுமன்ற மேலவைக்கு அனுப்பி வைத்தார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் பணியாற்றுகிற வாய்ப்பையும் எனக்கு வழங்கி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நான் எத்தனை முறை நன்றி சொன்னாலும் அது தகும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி அமைவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி, அதற்காக அவர் பட்ட துன்பங்கள்



இதையெல்லாம் பார்க்கின்றபோது நாங்களும் அவருக்கு உறுதுணையாக இருந்தோம் என்கிற எண்ணம் எங்களுக்கு இந்த நேரத்திலே எல்லையில்லாத மகிழ்ச்சியாக இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே மீண்டும் வரவேண்டும், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வரவேண்டும் என்று சொல்லி நாங்கள் எண்ணிய எண்ணம் இன்றைக்கு ஈடேறியிருக்கிறது. அதற்காக தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கு எத்தனை கோடி முறை நன்றி சொன்னாலும் அது தகும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே பேசுவதற்கு முன்பு, என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒருசில பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு என்னுடையத் தொகுதியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மோகனூரிலே அமைந்திருக்கிறது. சென்றமுறை 1989-90-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே ஒரு எரிசாராயத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு 14 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, அங்கே அந்த எரிசாராயத் தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதி வழங்கினார்கள். அந்த ஆலை இன்றைக்குச் செயல்படாமல் மூடப்பட்டிருக்கிறது. எரிசாராய உற்பத்திக்கு ஆகிற செலவைவிட அங்கு அதனுடைய விலை குறைவாக இருக்கிற காரணத்தாலே அந்தத் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது என்று சொல்லி அந்த உற்பத்தையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் அங்கே அந்த எரிசாராயத் தொழிற்சாலை மீண்டும் செயல்படுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஐ.எம்.எப்.எல். அதாவது Indian made foreign liquor என்று சொல்வார்களே, அந்த மது வகைகளைத் தயார் செய்வதற்கான அனுமதியைத் தனியாருக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த அனுமதியை தங்களுடைய சேலம் சர்க்கரை ஆலை, அதாவது மோகனூரிலே அமைந்திருக்கும் சர்க்கரை ஆலையிலேயே அந்த ஐ.எம்.எப்.எல் பிளெண்டிங் யூனிட்டையும், பாட்டிலிங் யூனிட்டையும் திறப்பதற்கும் அங்கே உற்பத்தி செய்வதற்கும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கே என்னுடைய தொகுதியிலே மோகனூரிலேயிருந்து திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாங்கல் வரை, மோகனூரையும்,

வாங்கலையும் இணைக்கின்ற பாலம் ஒன்றை காவிரி ஆற்றின் குறுக்கே அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பாலம் அங்கே அமைக்கப்படுவதால் நாமக்கல்லிலிருந்து கரூர் செல்கிற தூரம் கிட்டத்தட்ட 20 கி.மீட்டர் குறைகிறது. அந்தப் பகுதியில் சுமார் 10000 வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலை நம்பர் 7-ல் இருக்கிற அந்த ஊர் வழியாக தினமும் செல்கின்றன. அந்தப் பாலத்தை நாம் அங்கே அமைப்போமேயானால் வண்டிகளுக்குப் போடப்படுகின்ற டீசல் செலவிலே 3 கோடி ரூபாய் மாதம் அரசாங்கத்திற்கு மிச்சமாகும். அதே நேரத்திலே தொழிற்சாலை அமையவும், வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் அது வசதியாக இருக்கும். அதோடு மோகனூர் தொகுதி மக்கள் கரூர் செல்வதாக இருந்தால் கிட்டத்தட்ட 40 கி.மீட்டர் செல்லவேண்டியிருக்கிறது. அந்தப் பாலம் அங்கே அமைந்தால் அவர்கள் 10 கி.மீட்டருக்குள்ளாக அங்கு சென்று வருகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தை மோகனூருக்கும், வாங்கலுக்கும் இடையிலே காவிரி ஆற்றின்மேலே அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும், அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

அதேபோல் குடிநீர்ப் பிரச்சினயை எடுத்துக் கொண்டால், என்னுடைய தொகுதியான கபிலர்மலை ஒன்றியத்தில் வடகிழக்குப் பகுதியிலும், பரமத்தி ஒன்றியத்தினுடைய வடக்குப் பகுதியிலும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் சுற்றுப்பயணத்தின்போது அப்பகுதிக்கு வந்தபோது, அங்கே அந்தப் பகுதியிலே இருந்த பெண்கள் எல்லாம் தலைவர் அவர்களுடைய வண்டியை நிறுத்தி மனு கொடுத்தார்கள். அப்போது கருணை உள்ளத்தோடு அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு ஆவன செய்கிறேன் என்ற உறுதியைக் கொடுத்து வந்தார்கள். ஆகவே, அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கபிலர்மலை ஒன்றியத்தைச் சார்ந்த ஜோடர்பாளையத்திலிருந்து குடிநீர்த் திட்டம் ஒன்றை அமைத்து, பரமத்தி ஒன்றியத்திலுள்ள நல்லூர் கந்தன்பாளையம் உட்பட மற்ற பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அதற்கான அனுமதியை வழங்கவேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கபிலர்மலை தொகுதியிலே இருக்கிற ராஜவாய்க்கல் பிரச்சினை என்பது நீண்டகாலமாக இருந்து வருகின்ற பிரச்சினை என்று



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆயக்கட்டுதாரர்களுக்கும், நீரேற்று பாசனம் செய்பவர்களுக்கும் இடையே இருக்கின்ற அந்தப் பிரச்சினை வெகுகாலமாக இருக்கின்ற பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த வாய்க்காலின் இரு கரைகளையும் பலப்படுத்தவேண்டும். ரீ-மாடல் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் 12-வது பத்தியில், மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களில் இல்லாமல் தவித்திடும் குறையை நீக்கிட உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தேதி இந்த முதல் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்று சொல்லியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். அதேநேரத்தில் நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, முந்தைய ஆட்சிக் காலத்திலே பல முறைகேடுகளைச் செய்து இருக்கிறார்கள். சட்டச்சிக்கல் எல்லாம் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, அதில் தேவையான திருத்தங்களைச் செய்து இந்தத் தேர்தலைக் கொண்டுவரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமென்று சொன்னால், நான் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தில் நாமக்கல் பகுதியிலே இருக்கின்ற எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மற்றும் எளச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம் ஆகிய அந்த 3 ஒன்றியங்களையும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு என்று ஒதுக்கினார்கள். தாழ்த்தப்பட்ட பெண்களுக்காக அந்த 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கான ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவி ஒதுக்கப்பட்டு இருந்தும்கூட–அந்த ஒன்றியங்களிலே 5 ஆயிரம் உறுப்பினர் கொண்ட அந்த கவுன்சிலுக்கு தேர்ந்தெடுப்பதற்காக ஒரே ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணுக்குத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, அந்த கவுன்சிலிலே 5 ஆயிரம் ஓட்டுகளில் வெற்றிபெறுகின்ற அந்த வேட்பாளர் போட்டி இல்லாமலேயே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக வருகின்ற வாய்ப்பு அதிலே இருக்கிறது. ஆகவே குறைபாடுகளை, முறைகேடுகளை எல்லாம் களைந்து நல்ல சட்டத் திருத்தத்தை கொண்டு வந்து, தேவையான சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், நான் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தில் கிட்டத்தட்ட 19 ஒன்றியங்களில் 10 ஒன்றியங்களைப் பெண்களுக்கு என்று

ஒதுக்கியிருக்கிறார்கள். பாதி ஒன்றியங்களுக்கு மேல் அதாவது, 10 ஒன்றியங்களைப் பெண்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். பெண்களுக்கும் ஆண்களுக்குமான ஜனத்தொகையின் அடிப்படையிலே அவ்வாறு ஒதுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிலே சரியான விவரங்கள் இல்லை. வேண்டுமென்றே, திட்டமிட்டு அந்த ஒன்றியங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக இதைச் செய்திருப்பதாக நன்கு தெரிகிறது. அந்தப் பிரச்சினை எல்லாம் களையப்பட்டு உள்ளாட்சி மன்றத் தேர்தலை அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படும் என்று மேதகு ஆளுநர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான், 1989-90-லேதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினோம். ஆனால் ஒருசில பகுதிகளில் விவசாயிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படாமல் அவர்களுக்கு இரவு நேரங்களில் மின்சாரம் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிறபோது கரும்புத் தோட்டங்களில் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் சிரமமாக இருக்கிறது. இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்சும்போது, பாம்பு, பூச்சி போன்றவற்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலை உள்ளது. அப்படிப்பட்ட இடையூறுகள், தொந்தரவுகள் போன்றவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க முடிந்த வரையிலும் பகல் நேரத்தில் அதிக நேரம் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டால், நான் சார்ந்திருக்கின்ற தொகுதியிலே கரும்பு விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையைப் பார்க்கும்போது மிகவும் கேவலமாக இருக்கிற ஒரு சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். 12 மாதத்தில் வெட்ட வேண்டிய கரும்பை 16 மாதம், 17 மாதம் ஆகியும் வெட்டாமல் இருக்கிறார்கள். அதே நேரத்தில் வெட்டிய கரும்புக்கும் உடனடியாகப் பணம் கிடைப்பதில்லை. பாதி பணத்தைக் கொடுக்கிறார்கள். மீதி பணத்தை தவணையில் கொடுப்பதாகச் சொல்கின்றார்கள். 12 மாதங்களில் வெட்ட வேண்டிய கரும்பை 17 மாதங்களில் வெட்டுகிறார்கள். அதனால் எடை குறைகின்றது. அந்த 5 மாதங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஏற்படுகிற டீசல் செலவு, ஆள் கூலி செலவு இவைகளையெல்லாம் பார்க்கிறபோது அவர்களுக்கு கட்டுப்படியாகாத விலை இன்றைக்கு கரும்பு விவசாயிகளுக்கு இருந்து



வருகிறது. நம்முடைய தேர்தல் அறிக்கையிலே, நாம் கரும்பு விவசாயிகளுக்கு வெட்டுக் கூலியும், வண்டி வாடகையும் ஆலையே ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த வாக்குறுதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கரும்பு விவசாயிகளுக்கு நன்மை செய்து கொடுக்கும் வகையில் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆளுநர் உரையின் 18-வது பாராவிலே மாநகர்களில் உள்ள போக்குவரத்து நெரிசலைப் போக்க புறவழிச் சாலைகள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமக்கல் நகரத்திற்கு நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு கோரிக்கை புறவழிச்சாலை இல்லையென்ற கோரிக்கை. அங்கே மணிக்கணக்கில் வண்டி வாகனங்கள் தேங்கிக்கொண்டிருக்கிற நிலைமை. நாமக்கல் ஒரு வணிக நகரமாகும். அங்கு லாரி போக்குவரத்து மிக அதிகமாக இருக்கிறது. இதனால் பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தைகள் கூட உரிய நேரத்தில் செல்ல முடியாமல் அவர்கள் மணிக்கணக்கிலே காத்திருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு அதனைப் போக்குகின்ற வகையிலே உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மேலும், இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்குக் கூட பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை வேலை துரிதமாக நடைபெறாமல் அங்கு புறவழிச்சாலை அமைக்கப்படாமல் இருக்கிறது. சாதாரண கிராமங்கள், சிற்றூர்களில் கூட புறவழிச்சாலைகள் இருக்கின்றன. ஆனால் நாமக்கல்லுக்கு ஒரு புறவழிச்சாலை இல்லை. அதனை உடனடியாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆளுநர் உரையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும்; "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்று சொல்கிற வகையிலே தமிழுக்கு என்று ஒரு தனி அமைச்சகம் அமைத்ததற்கும், மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்படும் என்பதற்கும், கூட்டுறவு சங்கத் தேர்தல் மூன்று மாதக் காலத்தில் நடத்தப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்டது மிக மிக மகிழ்ச்சித் தரத்தக்க அறிவிப்புகளாகும் . இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பேற்ற உடனேயே முதல் கையெழுத்திட்டது தரை வரியை ரத்து செய்ததாகும். இது கிராமங்களில் இருக்கிற, தமிழகத்தில் இருக்கிற அத்தனைப் பேருக்கும் மகிழ்ச்சித் தரத்தக்கதொன்றாகும்.

வாக்காளர்களைச் சந்தித்து வாக்கு கேட்க சென்ற நேரத்திலே அத்தனை கிராமங்களிலும் இதைத்தான் பெரிய பிரச்சினையாகச் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்குமானால், நம்முடைய தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவர் அவர்கள் நிச்சயமாக தரைவரியை ரத்து செய்வார்கள் என்று வாக்குறுதி கொடுத்தேன். அதனை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்காக எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று மேலவை அமைவது பற்றியும், பெண்களின் முன்னேற்றத்திற்காக சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சித்தரத்தக்கதாகும். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதங்கள் வழங்கப்படும் என்றும், ஆசிரியர்கள் நியமனம், வேலை வாய்ப்பகங்கள் மூலம் செய்யப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி தரத்தக்கதாகும். மொத்தத்தில் ஆளுநர் உரை நம்முடைய ஆட்சியினுடைய கொள்கைவிளக்கமாக அமைந்திருக்கிறது. ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, நாங்குநேரி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். நெல்லை மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் நீண்டகாலமாக இருந்து வரும் பிரச்சினை பச்சையாறு அணைக்கட்டுத் திட்டம். 1969-ல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது அடிக்கல் நாட்டப்பட்ட திட்டமாகும். அதற்குப் பிறகு எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அந்த அணைக்கட்டு கட்டப்பட்டால் நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை தொகுதி, சாத்தான்குளம் தொகுதி, திருச்செந்தூர் தொகுதிகளிலுள்ள விவசாய மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம்.... (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவ் ரெட்டி இறந்துவிட்டதாகச் சொல்கிறார்களே, அவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்களே . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்னறிவிப்புக் கொடுக்காமல் இப்படி எழுந்து எதுவும் பேசக்கூடாது. உட்காருங்கள். முறைப்படி தகவல் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆனால் கோட்டையிலே கொடியை இறக்கிவிட்டார்களே ? (குறுக்கீடு)

*பிற்பகல் 12.05*

**திரு. ச. அழகிரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கூட விசாரித்தேன். விசாரித்த அளவில், கொடி கிழிந்து போயிருப்பதால் அதை மாற்றுவதற்காக இறக்கியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொடியை மாற்ற இறக்கியிருக்கிறார்கள். அதற்காக இப்படி ஒருவரை அநியாயமாகச் சாகடிப்பது நன்றாக இல்லை. திரு.எஸ்.வி. கிருஷ்ணன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், அதாவது, இதுபோன்ற சம்பவங்களை சரியான தகவல் இல்லாமல், அவையிலே கிளப்புவது என்பது சரியல்ல. ஏனென்றால், இந்தப் பிரச்சினை, முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டது. அவர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது இந்த அவையிலே வந்து, பொருத்தமற்ற முறையில் திடீரென்று அறிவிப்பது என்பது சரியல்ல என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியது முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது முன்னாள் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் அது அவைக்குறிப்பில் இருக்கவேண்டாம் என்று உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரித்த அளவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல். இந்த

அவையை இந்த அளவுக்கு அதிர்ச்சிக்கு உள்ளாக்கக்கூடிய, உண்மைக்கு மாறான செய்தியை அவர் சொன்னதற்காக நான் வருத்தப்படுகின்றேன். முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் உடல்நலம் குன்றியிருப்பது உண்மை. அவர் நீண்டநாள் வாழவேண்டும் என்ற அந்த வாழ்த்துக்களை இந்த அவையின் சார்பாக அவருக்கு நான் தெரிவித்து இந்த அளவில் நிறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன். (குறுக்கீடு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியதை நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் பேசியவை இருக்கிறது. மற்றவை நீக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் தவறாகப் பேசி இருக்கிறார்கள். பேசியதை எல்லாம் எடுத்துவிடுங்கள், எடுத்துவிடுங்கள் என்று சொன்னால் எப்படி? நம்முடைய அவை எப்படி நடைபெறுகிறது என்பதை நாடு தெரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொள்கிறேன். அவைக் குறிப்பிலே பல விஷயங்கள் இடம்பெறுவதுதான் நல்லது. அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது, எடுக்கப்படுகிறது என்று சொல்லி, ஒருமுறை மார்ச் 25 ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சியே எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரலாற்றைக் கொண்டிருக்கிறது இந்த அவை. எனவே, இவையெல்லாம் எடுக்கப்படக்கூடாது. இருந்தால்தான் நாடு நம்மைப் புரிந்து கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே நடைபெற்ற அனைத்தும் நாட்டுக்குத் தெரிய வேண்டும் என்கிற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவை அப்படியே அவைக்குறிப்பில் இருக்க உத்தரவிடுகிறேன். திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம் மாண்புமிகு முதல்வர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது



அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்த அணைக்கட்டு கட்டப்பட்டால் நாங்குநேரி தொகுதி, இராதாபுரம் தொகுதி, சாத்தான்குளம் தொகுதி மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பலன் உள்ளதாக இருக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இந்தத் தொகுதிகளில் உள்ள நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி இப்போது வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பம்புசெட்டுக் கிணறுகளில் தண்ணீர் இல்லை; வறண்டுவிட்டது. வாழை, கடலை போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் விவசாயிகள் வேலையில்லாமல் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்பகுதியில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி மற்றும், களக்காட்டில் உள்ள கால்வாய்கள் பல ஆண்டுகளாக மராமத்துச் செய்யாமல் மேடிட்டு இருக்கின்றன. மழைக்காலங்களிலே ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற மூங்கிலடி மற்றும் பல ஆதி திராவிட கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. விவசாயமும் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்தக் கால்வாய்களை மராமத்துச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியில் பெரிய குளங்கள் என்று சொல்லக்கூடிய, திருக்குறுங்குடி பெரிய குளம், நாங்குநேரியில் உள்ள பெரிய குளம், வடக்கு விஜயநாராயணபுரம் பெரியகுளம், வள்ளியூர் பெரியகுளம் என நான்கு பெரிய குளங்கள் இருக்கின்றன. இவைகளிலே பருவகாலத்தில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் இல்லாமல் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, இந்தக் குளங்களை ஆழப்படுத்தினால் விவசாயத்திற்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்கும். ஆகவே, இவைகளை ஆழப்படுத்தித் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியில் நாங்குநேரி, திருக்குறுங்குடி, களக்காடு ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதி மற்றும் தண்ணீர் வசதி இல்லை. ஆகவே, அதைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வள்ளியூரில் புதிதாக ஒரு பெரிய மருத்துவமனை கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏர்வாடி, வள்ளியூர் ஆகிய நகரங்களில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. ஆகவே இதை உடனடியாக தீர்ப்பதற்கு நம்பி ஆற்றிலுள்ள கிணற்றில், அதிகம் பவர் கொண்ட மோட்டாரைப் பொருத்தி, உடனடியாக, இந்தப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

ஏர்வாடியில், மேல்நிலைத் தொட்டி ஒன்று அமைப்பதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இட்டங்குடி, களக்காடு, மூலைக்கருப்பட்டி ஆகிய நகரங்களில், போர்க் கால அடிப்படையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்குநேரி தொகுதியில், இதுவரையிலும் பல கிராமங்களுக்கு மின் இணைப்புக் கிடையாது. சில கிராமங்களுக்கு சாலைகளே கிடையாது. தலித் கிருஸ்துவர்கள் வாழும் என்னுடைய தொகுதிக்கு அனைத்து வசதிகளையும், சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிதண்ணீரும், மின்சார பல்புகளும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சில கிராமங்களில், முந்தைய ஆட்சியில் பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தால், *200* அடி பைப்கள் போடப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் *100* அடிதான் போடப்பட்டிருக்கின்றன. வறட்சியின் காரணமாக, தண்ணீர் இல்லை. ஆகவே, பழுதடைந்த நிலையில் இருக்கும் பம்புகளை ரிப்பேர் செய்து பல கிராமங்களுக்கு, குடிநீர் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுவரை பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிகுந்த பெருமை பொருந்திய இந்த மன்றத்திலே உறுப்பினராக வருவதற்கு வாய்ப்பளித்த பொன்னர்-சங்கர் காவியம் படைத்த குறளோவிய நாயகர் எங்கள் இனமான தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பெருவாரியான வாக்குகளை அள்ளித்தந்து என்னை இம் மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எமது கரூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு ஆளுநர் உரையின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்த காலத்தில் பெண்ணினம் மேன்மையடைய எண்ணிலடங்கா திட்டங்களை அறிவித்து நன்மைகளைச் செய்ததை நாடே அறியும். இந்த முறையும் ஆளுநர் உரையில் மாவட்டத்திற்கு ஆயிரம் பெண்களை மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தி அந்தப் பணிக்குரிய ஊதியம் வழங்கப்படும் என அறிவித்திருப்பதை பெண்ணினத்தின் சார்பாக வரவேற்று மகிழ்ச்சியடைகிறேன். எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி, விவசாயம், தொழில், பெருநகர் வளர்ச்சி, தமிழ் மொழி வளர்ச்சி நெசவாளர்கள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினரின் நலன்களுக்கான திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட இந்த உரை ஒரு சிறந்த புத்தகத்தின் முகவுரை என்று சொன்னால் அது மிகையாகாது. கரூரைப் பொறுத்த வரையில் தீரன் சின்னமலை மாவட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகிறதே தவிர மாவட்டத் தலைநகருக்கே உரிய எந்த ஒரு வசதியும் இல்லாமல் இருக்கிறது. மாவட்ட அளவிலான நீதிமன்றம், காவல் துறை அலுவலகம், கலெக்டர் அலுவலகம், வேலை வாய்ப்பு அலுவலகம் உள்ளிட்ட பல அலுவலகங்கள் உரிய இடம் இல்லாமல் சிறிய கட்டிடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

கரூரின் நடுவில் அழகுற ஓடிக்கொண்டிருந்த அமராவதி ஆறு இயற்கை பொய்த்துப்போன காரணத்தினால் வறண்டு போய், அதில் சாயப்பட்டறை கழிவு நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் நிலத்தடி நீரும் கெட்டுப் போன நிலையில் கழிவு நீரைக் காய்ச்சி வைத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட காவிரி நீர், கடந்த *5* ஆண்டுகளில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு, முறையாகச் செயல்படுத்தப்படாத காரணத்தினால் கரூர் மக்களுக்கு இன்னும் முழுமையாக வந்து சேரவில்லை. அதுபோலவே இனாம் கரூர் பகுதிக்கு கடந்த *89-90* ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது கொண்டுவரப்பட்ட காவிரி குடிநீர்த் திட்டத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த ஒரே காரணத்திற்காக

முந்தைய அ.தி.மு.க. அரசாங்கத்தால் அது கிடப்பிலே போடப்பட்டு இன்னும் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. தாயுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள், கொண்டு வந்த காவிரி குடிநீர்த் திட்டத்தை, மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களைக் கொண்டே பூர்த்தி செய்ய வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் என்று நம்புகிறேன்.

கரூரின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனது தொகுதிக்கு வேண்டிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதிகளை உடனடியாக செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எமது தொகுதிக்கு தொழில் துறை அமைச்சர் பதவி கிடைத்தும் கரூரைப் பொறுத்த வரையில் முதன்மையான தொழிலாக நடந்து வரும் கைத்தறி தொழில் நலிவுற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சாயப்பட்டறை கழிவு நீரை சுத்திகரிக்கும் திட்டம் இன்றி அன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்களின் அலட்சியப் போக்கினால் குடிநீரும் கெட்டு, சாயப்பட்டறை தொழிலுக்கு மூடுவிழா நடத்தும் நிலையில் இருக்கிறது.

## 4. அறிவிப்புகள்-தொடர்ச்சி.

### (ஆ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளை கண்ணுறும் ஒரிசா மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு அவையின் சார்பில் வரவேற்பு

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒரிசா மாநிலத்தின் சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு சிந்தாமணி தயான் சமந்தரா அவர்கள் நம்முடைய சட்டமன்ற நடவடிக்கையைப் பார்வையிடுவதற்காக பார்வையாளர் மாடத்திற்கு வந்து இருக்கிறார். அவருக்கு அவையின் சார்பாக வரவேற்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி வாசுகி முருகேசன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு ஆசியாவின் மிகப் பெரிய காகித



ஆலை எமது கரூர் தொகுதியில் அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் காகித ஆலையின் கழிவுநீர் அந்தப் பகுதி விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிறது. சுத்தம் செய்யப்படாத கழிவுநீர் பாசனக் கால்வாய்களில் கலந்து விடப்படுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு குடிநீரும் பாதிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் நேற்றையதினம் தமிழ் மாநில காங்கிரஸை சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்ற நிலையில் உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள், சாயப்பட்டறை தொழிலும் காகித ஆலை நிறுவனமும் நல்ல முறையில் செயல்படவும் கழிவுநீரால் மக்களின் குடிநீர், விவசாயம் பாதிக்கப்படாத அளவிலும் முறையாக செயல் திட்டங்களை வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் நடுவே ஓடி, நகரை இரண்டாகப் பிரிக்கும் அமராவதி ஆற்றில் கட்டப்பட்டுள்ள 2 பாலங்களும் மிகவும் சேதம் அடைந்துள்ள நிலையில் இருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களே நன்கு அறிவார். இந்த நிலையில் புதிய பாலங்கள் கட்டித் தருவதற்கு இந்த அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புகளூரில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் சர்க்கரை ஆலையை தனியார் நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கியது. வாங்கியவுடன் அரசின் திட்டங்களுக்கு மாறாக தொழிலாளர்கள் அனைவரையும் வேலைநீக்கம் செய்தது. வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் போராட்டம் அறிவித்தவுடன், 300-க்கும் அதிகமான தொழிலாளர்களை விட்டுவிட்டு மீதிப் பேர்களை பணிக்கு அமர்த்தியது. பாதிக்கப்பட்ட அந்த 300-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பல போராட்டங்களை நடத்தினார்கள். இதனால் ஆத்திரமுற்ற அந்த நிறுவனம் ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தி 3 தொழிலாளர்களைக் கொன்றது. 3 பேரை பழி வாங்கியதுடன் நில்லாமல், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மேலும் துன்புறுத்தும் நோக்கத்துடன் தொழிலாளர்களின் மீது ஏராளமான பொய் வழக்குகள் போடப்பட்டு, இன்றும் நீதிமன்றத்தின் நெடிய படிகளில் மாதம் ஒரு முறை அந்தத் தொழிலாளர்கள் ஏறி வருகிறார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் நல்ல முறையில் வாழ்ந்திட, அவர்கள் மேல் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறவும், அந்த தொழிலாளர்கள்

மீண்டும் பணிக்குத் திரும்பவும் இந்த அரசு உதவிட வேண்டுமாய் மிகுந்த தாழ்மையோடு கேட்டு, வாய்ப்பளித்த இந்த மாமன்றத்திற்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியினைச் சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

*** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முறையாக சட்டமன்றத்திலே நுழைந்து, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எங்களுடைய அன்புத் தலைவரும் மக்கள் தலைவருமான மூப்பனார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும் இன்றைய முதல்வருமான கலைஞர் அவர்களுக்கும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கும், பவானி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து எனது கன்னிப்பேச்சைத் துவக்குவதிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்றபோது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் தெள்ளத் தெளிவாக சட்டதிட்டங்களை எல்லாம் கூறினார்கள். முன்பு இருந்த நிலையை மாற்றி, உள்ளாட்சித் தேர்தல்கள் மூலம் முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அந்தத் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் முழுமையான அதிகாரத்தையும் அதே நேரத்திலே அதிக நிதி உதவியையும் கொடுத்து, அண்ணல் காந்தி கண்ட கனவை, அமரர் ராஜீவ் காந்தி கண்ட கனவை, தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்குமாறு தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

குறிப்பாக, கடந்த காலத்தில்,, கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திலுமே, பெரியார் மாவட்டத்திலே முழுமையாக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலேயும் என்னென்ன நடந்தது என்பதுபற்றி எல்லாம் புள்ளிவிவரங்களோடு எனக்குத் தெரியும்.

அங்கே கொள்ளைக் கூட்டமாக தான் நடந்துகொண்டிருந்ததேயொழிய, பால் உற்பத்தியாளர் சங்கமாக இருந்தாலும் சரி, கைத்தறி நெசவாளர் சங்கமாக இருந்தாலும் சரி, ஒவ்வொன்றிலும் எப்படி கொள்ளையடிப்பது



என்ற குறிக்கோளோடு தான் செயல்பட்டுக் கொண்டிருந்தார்களேயொழிய நாட்டு மக்களுடைய, நாட்டினுடைய நலனுக்காகச் செயல்படவில்லை என்பதைத் தெரிந்து, அங்கே இருக்கக்கூடிய சிக்கல்களை, நீதிமன்றத்திலே இருக்கக் கூடிய சட்ட திட்டங்களை எல்லாம் இயன்ற அளவுக்கு அதிகபட்சமாக மாற்றி, எதிர்காலத்திலே கைத்தறி நெசவாளர்களாக இருந்தாலும் சரி, துவக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக இருந்தாலும் சரி, பால் உற்பத்தியாளர் சங்கமாக இருந்தாலும் சரி, — குறிப்பாக, பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யக்கூடிய கைத்தறி நெசவாளர் சங்கங்களிலே காஞ்சிபுரத்திலே எல்லாம் அவர்களுடைய ஆட்கள் தலைவர்களாக வருவதற்காக எத்தனை லட்சங்களை அங்கிருந்த தலைவர்கள் இங்கு இருக்கக்கூடிய அத்துணை பேருக்கும் தெரியும் செலவு செய்தார்கள் என்பது. இப்படிப்பட்ட நிலையை எல்லாம் முழுமையாக மாற்றி, மக்களுக்குத்தான் இந்த ஆட்சி என்ற நிலையை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு, பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஜனநாயக நாட்டில் தேர்தல் மிக மிகக் கேவலமாக, கேலிக் கூத்தாக போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலையை உறுதியாக நாம் மாற்றியாக வேண்டும். அதற்கு சுயேட்சையாக நிற்கக்கூடியவர்கள், — நாம் நிற்க வேண்டாமென்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அதேநேரத்தில், சுயேட்சையாக நிற்கக்கூடியவர்கள் — குறைந்தது சட்டமன்றத்திற்கு என்றால் 10 ஆயிரம் ரூபாயாவது, பாராளுமன்றத்திற்கு என்றால் 20 ஆயிரம் ரூபாயாவது டெபாசிட்டாக கட்ட வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளுடைய தலைவர்களை எல்லாம் வரவழைத்து பேசி, இந்த மாமன்றத்தின் மூலமாக தேர்தல் ஆணையத்திற்கு முறையிட்டு, — எதிர்காலத்திலே, கேலிக்கூத்தாகி கொண்டிருக்கக்கூடிய, குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் இன்று மொடக்குறிச்சியிலேகூட 1033 வேட்பாளர்களை நிறுத்தக்கூடிய மிக மோசமான ஒரு நிலையை பார்த்து வருகின்றோம். — இனி, எதிர்காலத்திலே, இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நீங்கள் உறுதுணையாக இந்த மாமன்றத்தின் மூலமாக தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்து, ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக, இன்று இருக்கக்கூடிய நிலையில் மிகக் கேவலமான தொழிலாக விவசாயத்தைப் பற்றி எல்லோருமே நினைக்கின்றார்கள். உண்மையிலே அன்போடு இந்த மாமன்றத்திலே சொல்லிக் கொள்வதை நான் பெருமையோடு நினைக்கின்றேன். காரணம் விவசாயிகளுடைய

குடும்பத்திலே இருக்கக்கூடிய ஒரு பெண்ணை விவசாயக் குடும்பத்திலே இருக்கக்கூடிய ஒரு ஆண் திருமணம் செய்வதற்கு தயாராக இல்லை. அதேபோல விவசாயக் குடும்பத்திலே இருக்கக்கூடிய ஒரு ஆணை பெண் வீட்டாரும் கொடுப்பதற்கு தயாராக இல்லை. காரணம், விவசாயத் தொழிலை ஒரு கேவலமான தொழிலாக, மோசமான தொழிலாக நினைக்கக்கூடிய நிலையைப் பார்க்கின்றோம். அன்று, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் அவர்கள்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று கூறினார்கள். ஆனால், இன்று இருக்கக்கூடிய நிலை எல்லாம், மற்ற அனைத்துப் பெரியோர்களை, அனைத்துத் தொழில் அதிபர்களை, அனைத்து அரசியல் கட்சி நண்பர்களை, பெரியோர்களை அத்தனை பேரையும் கண்டவுடன் இடுப்பிலே துண்டைக் கட்டி விவசாயிகள் குனிந்து செல்லக்கூடிய, அவர்களை வணங்கிச் செல்லக்கூடிய நிலையை மாற்ற, இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே மீண்டும் மின்சாரத்தை இலவசமாகக் கொடுத்து, ஒரு ஒளிமயமான நிலையை விவசாயிகளுக்கு முன்பு கொடுத்த அந்த நிலையை மீண்டும் கொண்டுவர, விவசாயத் தொழிலையும் ஒரு தொழிலாக ஏற்கக்கூடிய அளவுக்கு இந்த அரசாங்கத்திலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, விவசாயிகளுக்கு பயிர் வாரியாக தீர்வை விதிக்காமல், நஞ்சைப் பயிராக இருந்தாலும் சரி, புஞ்சைப் பயிராக இருந்தாலும் சரி ஏக்கருக்கு இத்தனை ரூபாய் என்கிற அளவிற்கு வரியை நிர்ணயிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, விவசாயிகளுக்கு இன்று பழச்செடிகள் வைப்பதற்கு, தோட்டக் கலையை வளர்ப்பதற்கு எல்லாம் நிறைய உதவி செய்வதாக கூறியிருக்கின்றீர்கள். அதற்காக மகிழ்ச்சி. குறிப்பாக, அரசாங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன மானியங்கள் கிடைக்கின்றது, அதேபோல மத்திய அரசாங்கத்தின் மூலமாக என்னென்ன மானியங்கள் கிடைக்கின்றது என்பதை எல்லாம் புள்ளிவிவரமாக நாம் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்று அன்போடு பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். நிறைய விவசாயிகளுக்கு இது தெரியாத காரணத்தினாலே அரசாங்கம் நன்மையை முழுமையாக கொடுத்தாலும்கூட, மானியத்தை அளித்தாலும்கூட அதைப் பெறுவதற்குத் தெரியாத சூழ்நிலையிலே ஒரு மாவட்ட அளவிலே விவசாயிகளுக்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாக மாநில அரசாங்கத்தின் மூலமாக இந்த இந்த அளவிலே மானியங்கள்



கிடைக்கின்றன என்ற நிலையை, அவர்கள் அறியும் வகையிலே தாங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த கால ஆட்சியில் எல்லாம் ஒப்புக்காக, ஒட்டுமொத்தமாக அவர்கள் பெற வேண்டிய காரணத்திற்காக, பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு கன்னியாகுமரிக்கும் ஒரே மாதிரியான விவசாயக் கருவிகளை, அதேபோல பெரியார் மாவட்டத்திற்கும் ஒரே மாதிரியான விவசாயக் கருவிகளை, ஒரே மாதிரியான பூச்சி மருந்துகளை வரவழைத்து யாருக்கு என்ன பயன்படுகிறது என்றுகூட பார்க்காமல், ஒட்டுமொத்தமாகக் கொடுத்தார்கள். அந்தந்த மாவட்டத்திற்குத் தேவையானதைத்தான் எதிர்காலத்திலே விவசாயத் துறையிலே இருக்கக்கூடியவர்கள் பயனடைகிற அளவிலே கொடுக்க வேண்டும். கருவிகளாக இருந்தாலும் சரி, பூச்சிமருந்துகளாக இருந்தாலும்சரி தமிழகம் முழுக்க ஒரே மாதிரியாக இருக்கக்கூடாது என்று அன்போடு நான் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், தாலுக்கா தலைமை மருத்துவமனைகளிலாவது எல்லாவிதமான கருவிகளும், தேவையான மருந்துகளும் வைத்திருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தொகுதியின் பல பகுதிகளுக்கும், மற்ற எல்லா பகுதிகளுக்கும் நாங்கள் எல்லாம் செல்கிறபோது, பல தாலுக்கா மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் ஓடுவதில்லை, ஆப்பரேஷன் தியேட்டர் ஒழுங்காக இல்லை, தேவையான மருந்துகள் இல்லை என்பதைப் பார்க்க முடிந்தது. அவசர கேஸ் என்றால் பவானியிலிருந்து ஈரோடுக்குச் செல்லவேண்டிய நிலை இருப்பதை மாற்றி, அந்தந்த தாலுக்கா மருத்துவமனைகளிலேயே எல்லாவித தேவையான மருந்துகளும், தேவையான கருவிகளும், ஜெனரேட்டர் ஓடுகிற வசதியும் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலைக்குப் போக டாக்டர்கள் தயாராக இல்லை. டாக்டர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான வசதிகளை, அதாவது குடியிருக்க குடியிருப்புக் கட்டிடம் கட்டிக் கொடுத்தால், தேவையான கருவிகளோடு மருந்துகள் இருந்தால் அவர்களும் வேலை செய்வதில் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எந்த அடிப்படைத் தேவையான வசதிகளும் இல்லாத நிலையில், அடிப்படை சுகாதாரத்தைக் காக்கும் வகையில் அரசு முழுமையான கவனத்தைச் செலுத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி ஆகியவை கிராமப்புறங்களில் அதிகமாக இல்லை என்ற நிலை இருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் கிராமப்புறச் சாலைகளில் மின்சார விளக்குகள் முழுமையாக எரிந்ததில்லை. அதிகாரிகளிடத்தில் கேட்டால், இப்போது வருகின்ற பல்புகள் எல்லாம் மூன்று நாளைக்குத்தான் எரியும் என்று சொல்வார்கள். பெறுவதைப் பெற்றுக்கொண்டு கிராமங்களுக்கு மிக மோசமான பல்புகளை அனுப்பிய காரணத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டது. எதிர்காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சற்று அதிகமாக பல்பு விலை இருந்தாலும் கூட, குறைந்தது ஆறு மாதம் வரக்கூடிய அளவுக்கு நல்ல தரமான பொருட்களை எல்லாம் வாங்கி கிராமங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

ஐந்து நிமிடம்தான் பேசினேன். அதற்குள் மணியடிக்கிறீர்கள்.... காவல் துறையின் மீது மக்களுக்கு முழுமையான நம்பிக்கை இல்லை. காரணம் இங்கே இருக்கக்கூடிய காவல்துறையினர் எல்லாரும் கடந்த காலத்தில் அரசாங்கத்திற்கு 'ஆமாம்' போடக்கூடிய அளவில்தான் அ.இ.அ.தி.மு.க.வின் பொறுப்பாளர்களைப் போல செயலாளர்களைப் போல செயல்பட்டு, மிகக் கேவலமான நிலையில் இருந்த காட்சிகளைப் பார்த்தோம். அந்த நிலை எதிர்காலத்தில் இருக்கக்கூடாது. அந்த நிலையை மாற்றி, நேர்மையான ஆட்சியை, பொறுப்பான ஆட்சியை நீங்கள் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இங்கே மாநில மனித உரிமை ஆணையம் கொண்டு வரப்படுவதாகத் தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். அதிலே நல்லவர்களாக, வல்லவர்களாக நேர்மையானவர்களாக உள்ளவர்களை நியமித்து, காவல்துறை தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் ஒரு சிறப்பான துறையாக முதன்மைத் துறையாக இருந்தது என்ற நற்பெயரை உங்கள் காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது).

பெரியார் மாவட்டத்திலிருந்து நான் ஒருவன்தான் பேசுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஐந்து நிமிடம் கொடுக்கவேண்டும். ஆகவே தயவுசெய்து பெல் அடிக்காதீர்கள். தொகுதிப் பிரச்சினை. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தொகுப்பு வீடுகள் 300 வீடுகளாவது கட்டித் தந்தால் அங்கேயுள்ள பிரச்சினை தீரும். எத்தனையோ பெரிய திட்டங்களைக் கூட ஒதுக்கி வைத்தாவது, ஒன்றியத்திற்கு 300 தொகுப்பு வீடுகள் தேவைப்படுவதால், குறைந்தது.





300 வீடுகளாவது உடனடியாகக் கட்டிக் கொடுக்கவேண்டும். அதில் ஒரு காலனி இருக்கிறதென்றால் தொடர்ச்சியாக 50 வீடுகளை அந்தக் காலனியில் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் இங்கே 5 வீடு, அங்கே 10 வீடு, அங்கே 15 வீடு என்ற அளவில் கட்டிக் கொடுத்ததை மாற்றி, ஒவ்வொரு காலனியிலும் முழுமையாகக் கட்டி கொடுத்தால்தான் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். 300 வீடுகள் தேவைப்படக்கூடிய இடத்தில் 10 வீடுகள் கட்டிக்கொடுத்து, லாட்டரி பிரைஸ் போல பத்து பேருக்குக் கட்டிக்கொடுத்து, 90 பேருக்கு எதிரியாக ஆகிறதைவிட முழுமையாக அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றியோ இந்து அறநிலையத் திட்டங்கள் பற்றியோ, மின்உற்பத்தியைப் பற்றியோ எதிர்காலத்தில் இவ்வாறு செய்யப் போகிறோம் என்பதைப் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் உரையில் காணவில்லை என்பதற்காக நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்று நான் சொல்லவில்லை.

மின் உற்பத்தி குறித்து ஆழமாகச் சிந்தித்து மின் உற்பத்தியை அதிகமாகச் செய்தால்தான்—எதிர்காலத்தில் தொழில் மயமாக இருந்தாலும், விவசாய மயமாக இருந்தாலும், மின் உற்பத்தியை அதிகமாக எதிர்காலத்தில் சிறப்பாகச் செய்தால்தான்—நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.) என் தொகுதிப் பிரச்சினை. கடந்த காலத்தில் மாண்புமிகு உறுப்பினர், அருமை அண்ணன் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஈரோட்டில் எம்.ஜி.ஆர், சிலையை அங்கே வைத்து, அன்புத்தலைவர் மூப்பனார் அவர்கள் அதைத் திறந்து வைக்க வேண்டுமென்று மாவட்டக் காங்கிரஸ் தலைவராகிய, என்னிடம் வந்த போது, அப்போது காவல் துறையின் பொறுப்பிலே அந்த சிலையை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அன்று மரியாதைக்குரிய, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும், எங்களுடைய அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களும் ஈரோட்டிற்கு வந்து கூட்டத்தில் பேசி விட்டு சென்ற நிலையில், மரியாதைக்குரிய இன்றைய முதல்வர் அவர்களுடைய தலைமையில் அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களை வைத்து, காவல் துறையின் பொறுப்பில் இருக்கக்கூடிய சிலையை வைத்து திறக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு மிக நல்லவர், வல்லவர். என்ன காரணத்தாலோ, எப்படிப்பட்ட சூழ்நிலையிலோ மாறி இப்போது குறுக்கே குறுக்கே பேசிக் கொண்டிருக்கிறார் என்பதில் உண்மையில் வருத்தப்படுகிறேன்.

*பிற்பகல் 12-30*

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சிலே குறுக்கிடுவது அவருக்கு சாதகமாகத் தான். ஈரோட்டிலே காவல் துறையினருடைய சிறைச் சாலையிலே இருக்கிற என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி. ஆர். அவர்களுடைய சிலையை விரைவில் விடுதலை செய்து (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே வைக்கப்படும் என்பதையும், அதற்கு சிறப்பு விருந்தினராகத் தம்பி திருநாவுக்கரசு அவர்கள் அழைக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:*** துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, கல்விக்கு அதிகமாக நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தொழிற் துறை வளர வேண்டும். நிறைய பேச வேண்டுமென்று நினைக்கிறேன். பெண்களுக்கு எல்லாம் நிறைய வேலை வாய்ப்பு கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு மெத்த நன்றி. அதைப்போல என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்லவில்லை என்றால் வம்பாகி விடும். பெரியார் மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். பவானி தொகுதியிலே காவிரி, பவானி நதிகள் ஓடுகின்றன. ஆனால் அங்கே தண்ணீர் குடிப்பதற்கு ஒழுங்காகக் கிடைக்கவில்லை. இரண்டு நதிகள் ஓடுகின்றன. (குறுக்கீடு)

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** திரு. தாமரைக்கனி, உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கிறார். யாரும் குறுக்கிடக் கூடாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த இருக்கையிலிருந்து சொல்லும்போது உறுப்பினர் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நான் உங்களை அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்.

***திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:*** துணைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு நதிகள் ஓடுகின்றன. பவானி தொகுதி அதிலே தீவு மாதிரி இருக்கிறது. எனவே பாதுகாக்கப்பட்ட குடிநீரை கண்டிப்பாக என்னுடைய தொகுதிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மயிலம்பாடி, தளவாய்பேட்டையில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியில் அட்டவணை புதூரில் கடந்த காலத்தில் ஒரு சிறிய அணைக்கட்டு கட்ட திட்டம் போட்டு, அது அங்கே உள்கட்சி பூசலால் நின்று விட்டது. மீண்டும் அதை செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல தளவாய்ப் பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். 20 கி.மீ. தூரத்தில் இருந்து மின்சாரம் வருவதால் எங்கள் பகுதியில் மின்சாரம் கிடைப்பதில்லை. ஆகவே இந்த நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்வது எல்லாம் துணை மின் நிலையம் அமைத்து தர வேண்டும் என்பதுதான்.

யார் என்ன சொன்னாலும், கடந்த கால அரசியலில் இருந்த, முதல்வராக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, யார் யார் எல்லாம் ஊழல் செய்திருக்கிறார்களோ, அதிலே விசாரணை கமிஷன் வைத்து, அதிலே எப்படிப்பட்ட ஊழல் நடந்திருக்கிறது என்று நாம் காண்பிக்கவில்லை என்றால், கடந்த கால முதல்வர் அவர்கள் இன்றைய முதல்வரை விலைக்கு வாங்கி விட்டார்களோ என்று மக்கள் நினைக்கிற அளவுக்கு வந்துவிடும் அப்படி நாம் ஏமாந்து விடக் கூடாது என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அரசியல்வாதிகள் அத்தனைபேரும் அயோக்கியர்கள், சாக்கடையில் இருக்கக்கூடியவர்கள் என்று சமுதாயத்தில் இருக்கக் கூடிய மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிற நிலையில், ஒரு தூய்மையான, நேர்மையான, நல்ல ஆட்சியை தலைவர், கலைஞர், முதல்வர் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று நற்பெயரை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் வருகிற நம்மைப் போன்ற அரசியல்வாதிகள் நேர்மையாக, ஒழுங்காக இருப்பதற்கு இந்த விசாரணைக் கமிஷனை தனித்தனியாக அமைப்பீர்களோ, ஒட்டுமொத்தமாக அமைப்பீர்களோ எனக்குத் தெரியாது; இதில் அத்தனைபேரும் சரியாக செயல்பட வேண்டும் என்று கேட்டு, கடைசியாக ஒரே ஒரு நிமிடம். நிறைய பேச வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் பேச விட மாட்டேன் என்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி எங்களுடைய அன்புத் தலைவர் மூப்பனார் அவர்கள் கடற்கரையில் பேசுகிறபோது ஆளுங்கட்சியினுடைய முதல்வரும் நீங்களே, ஆளுங்கட்சிக்கு எதிர்கட்சியினுடைய தலைவரும் நீங்களே என்று அன்போடு சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்து என்னைப் பொறுத்தவரையில் உங்களுடைய பிள்ளைகள் வேறல்ல, நாங்கள் வேறல்ல, எதிர்க்கட்சியிலே

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1996 மே 28

இருக்கக்கூடியவர்கள் வேறல்ல. உங்களுடைய பிள்ளைகளுக்கு என்னென்ன செய்ய வேண்டும், தொகுதிகளின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதிலே எள்ளளவும் குறையாமல், எல்லாவகையிலும், எங்களையும் உங்களோடு உங்கள் பிள்ளைகளாக சேர்த்து எங்களுடைய தொகுதிகளுடைய வளர்ச்சிக்கு, எங்களுடைய முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் தேவையானதை அளிக்க வேண்டுமென்று கேட்டு, பட்ஜெட் கூட்டத்தில் எனக்கு பேச வாய்ப்பிருந்தால் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, இன்றைக்கு நல்ல வாய்ப்பினைக் கொடுத்து, எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைத் திறப்பதற்கு வருவதாகக் கூறிய எங்களுடைய அன்புத் தமிழக முதல்வர் அவர்களுக்கு என் சார்பாக, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி சார்பாக நன்றி கூறி, இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய அத்தனைபேருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். சிலையைத் திறக்க வருகிறேன் என்று சொன்னது ஒன்றும் ஆச்சரியம் அல்ல. ஏற்கனவே அறந்தாங்கியிலே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் என்னை அழைத்து, எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அப்போது அந்தச் சிலைக்கு இப்படிப்பட்ட ஆபத்து எல்லாம் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆலங்குடி தொகுதி உறுப்பினர் திரு. வெங்கடாசலம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முறைகேடாக நடக்கிறீர்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) பிரச்சினையில் சம்பந்தப்பட்ட உங்கள் கட்சித் தலைவரே அமைதியாக இருக்கும்போது, தலை இருக்கும்போது * வால் ஆடக் கூடாது. (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** யார் வேண்டுமானாலும் சிலையை வைத்துவிடலாமா? முறையாகக் கேட்க வேண்டாமா?(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை எல்லாம் முறைப்படி எழுதிக் கொடுத்துக் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க மாற்றப்பெற்றது.



1996 மே 28]

**திரு. இரா தாமரைக்கனி:** சிலை வைக்க வேண்டும் என்றால் என்ன விதிமுறை? (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நண்பர் தாமரைக்கனி அவர்கள் திருநாவுக்கரசை குற்றம் சாட்டவேண்டும் என்றால், தனியாகக் குற்றம் சாட்டலாம் இப்படி அவையில் குற்றம் சாட்டக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தேசியத் தலைவருக்கு மரியாதை தெரிவிக்க சிலை வைக்க வேண்டும் என்றால், அதற்கு முனிசிபாலிட்டி அனுமதி வேண்டும்; தாசில்தார் அனுமதி வேண்டும்; ஹைவேஸ் அனுமதி வேண்டும்; போலிஸ் அனுமதி வாங்கவேண்டும். எதுவும் இல்லாமல், தேசியத் தலைவரை அவமானப்படுத்துவதைப் போல, எங்கேயாவது சிலையை வைக்கும்போது, அதை எடுத்து விட்டால், எங்கேயாவது அதிகாரிகளோ மற்றவர்களோ எடுத்துவிட்டால், —- உடனே ரெவின்யூ அதிகாரிகளோ மற்றவர்களோ எடுத்துவிட்டால், —- உடனே அரசாங்கத்தின் மீது பழி சொல்வதா? முறைப்படி அனுமதி வாங்க வேண்டும். பொத்தாம் பொதுவிலே கவர்ன்மென்ட் மேலே பழி சொல்வதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதுமா, இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா? (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்படி நீங்கள் அனுமதி கொடுப்பீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மாதிரிப் பேசுவது இந்த அவையின் மரபுக்கு உகந்தது அல்ல. நீங்கள் முறைகேடாக நடக்கிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அனுமதி வாங்க வேண்டுமா, இல்லையா? அண்ணா சிலையை இங்கே வைத்தால் ஒப்புக் கொள்வீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கும்போது உட்கார வேண்டும் என்பது மரபு. உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் மிகுந்த ஆத்திரத்தோடு பேசுகிறார். ஆத்திரத்திற்குக் காரணம் நமக்குப் புரியாமல் இல்லை. ஏன் என்றால், அவருடைய கட்சியின் தலைவர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களாலேயே பதில் சொல்ல முடியாத சில கேள்விகளை அவர்கள்

இங்கே கேட்கிறார்கள். அரசுக்கு அனுமதி கோரி பல முறை விண்ணப்பித்தும் கூட வேண்டுமென்றே, சிலையை வைப்பது திருநாவுக்கரசு அவர்களுடைய கட்சி என்ற காரணத்தால், அந்த அனுமதி கொடுக்கப்படவில்லை. எம்.ஜி. ஆர். அவர்களுடைய சிலையைத் தான் திருநாவுக்கரசு அவர்கள் அங்கே வைக்க முயன்றார்களே தவிர வேறு அல்ல.

அதுமாத்திரம் அல்ல. இப்படிப்பட்ட பல தொல்லைகள் பல தடவைகள் அவர் நடத்திய கூட்டங்களுக்கு, விழாக்களுக்கு அந்தக் காலத்திலே தரப்பட்டு இருக்கின்றன. அவற்றிலே ஒன்றுதான் ஈரோட்டில் எம்.ஜி.ஆர். சிலையை வைக்கிற நேரத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். ஏன் அனுமதி கேட்கவில்லை என்றெல்லாம் தாமரைக்கனி கேட்கிறார். அனுமதியை முறைப்படி பெறுவதற்கு எவ்வளவோ முயற்சித்தும் கூட, கொடுக்கப்படாமல் அந்தச் சிலையை அப்புறப்படுத்திவிட்டு, அதைக் காவல் துறையினுடைய கையிலே ஒப்படைத்துவிட்டு, ஏறத்தாழ சிறை வைப்பதைப் போன்ற ஒரு நிலையை எம்.ஜி.ஆர். சிலைக்கு ஏற்படுத்திவிட்டு இப்போது, அந்த உண்மை அவைக்கு வருகிற நேரத்தில், அம்பலமாகிற நேரத்தில், ஆத்திரப்படுவதால் பயனில்லை. உண்மையை உணர்ந்து திருந்திக் கொள்ளவேண்டுமேயல்லாமல் ஆத்திரப்பட்டு பயனில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பேசுகிற நேரத்தில், தலை இருக்கும்போது ** ஆடக்கூடாது என்று தெரிவித்தேன். அதை, தலையிருக்கும்போது வால் ஆடக்கூடாது என்று திருத்திக் கொள்ளவும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம்.

*திரு. அ. வெங்கடாசலம்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில்-இன்றைக்கு இருக்கக்கூடிய எந்த அரசியல் கட்சித் தலைமையும் சொல்லாமல்-முதலில் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, அழகு பார்த்த பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களுடைய நாமத்தை மட்டும் சொல்லி, இரண்டாவது தடவையாக நான் ஆலங்குடி தொகுதியிலேயிருந்து சுயேட்சை வேட்பாளர் என்று சொல்வதைவிட போட்டி வேட்பாளராகப் போட்டியிட்டு, — இரண்டு தொகுதியில் திருமயத்திலும், ஆலங்குடி தொகுதியிலும் போட்டியிட்டு-திருமயத்தில் எனக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று சொன்னாலும், ஆலங்குடி தொகுதியில் எந்த ஒரு தலைமையும் எனக்கு வாக்கு கேட்காத

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நேரத்தில், அந்தத் தொகுதியில் இரண்டாவது முறையாக எனக்கு வாக்களித்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த வாக்காளப் பெருமக்கள் என்று சொல்வதைவிட, என்னுடைய எஜமானர்களாக இருக்கக்கூடிய அந்தத் தொகுதி மக்களுக்கு நான் இந்த மன்றத்தின் மூலமாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-40

இன்றைக்கு இருக்கக் கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றவர்களுக்கு விழா எடுத்து பாராட்டப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு லட்சோப லட்சம் புரட்சித் தலைவர் தொண்டர்களுடைய உள்ளங்கள் எல்லாம் குளிரக் கூடிய வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள் இன்றைக்கு சென்னையிலே தரமணி திரைப்பட நகருக்கு புரட்சித் தலைவருடைய பெயரைச் சூட்டியிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு புரட்சித் தலைவருடைய தொண்டன் நான் மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக் கூடிய லட்சக்கணக்கான தொண்டர்கள் சார்பாக என்னுடைய பாராட்டையும், நன்றியையும் சொல்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு புரட்சித் தலைவருடைய சிலையை-ஈரோட்டிலே, — உள்ளே இருக்கிற சிலையை வெளியே கொண்டுவந்து விழா எடுப்பேன் என்று சொல்கின்ற போது அந்த உயர்ந்த லட்சியம் படைத்த உள்ளத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் இங்கே வெற்றி பெற்றவர்களுக்கு எல்லாம் கட்சித் தலைமை இருக்கிறது. எனக்கு தொகுதியிலே இருக்கக் கூடிய மக்கள்தான் தலைமை. நிறைய காரியங்கள் இன்றைக்கு நடைபெற இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னை சேர்த்துக் கொள்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய குழுக்களில் என்னைச் சேர்த்துக் கொள்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். யார் முன்மொழிவது, யார் வழிமொழிவது என்ற கேள்வியோடு-இன்றைக்கு நான் சுயேட்சை வேட்பாளர் அல்ல. ஒரு போட்டி வேட்பாளராக நான் வெற்றி பெற்றிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4 குழுக்களுக்குத்தான் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 7 குழுக்களுக்கு பேரவைத் தலைவர்

நியமனம் செய்யலாம். நிச்சயமாக உறுப்பினரை ஏதாவது ஒரு குழுவில் உறுப்பினராக சேர்ப்பேன் என்று உறுதி அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. அ. வெங்கடாசலம்: வாக்குறுதி தந்த பேரவைத் தலைவருக்கு என்னுடைய பாராட்டை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய நிலைமை,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் சொன்னார். ஆனால் யார் குற்றவாளிகள், யார் குற்றத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற வாதத்தை வைப்பதைவிட இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சரியான இடத்தில் நான்காவது தடவையாக தமிழக மக்கள், நீங்கள் நல்ல காரியங்களை ஆற்றுவீர்கள், நேர்மையான ஆட்சியைத் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு, இறைவனுக்குச் சமமாக தமிழக மக்கள் இன்றைக்கு ஒரு மாற்றத்தைத் தந்திருக்கிறார்கள். இறைவனுக்குச் சமமாக இருக்கக் கூடிய நீங்கள், இங்கே தமிழ் மாநில காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பேசியதைப் போல வேறுபாடு பார்க்காமல், மனமாச்சரியம் என்று பார்க்காமல், கருத்து வேறுபாடு என்று பார்க்காமல், இது நல்ல அரசு, தொடர்ந்து நடக்க வேண்டிய அரசு என்று இன்றைக்கு இருக்கக் கூடிய மக்கள் பாராட்டக் கூடிய வகையில் ஆட்சியை நடத்தவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கவர்னர் உரையிலே உள்ள பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தமுடியுமா என்று கூட நான் எண்ணிப் பார்க்கிறபோது, அதைத் தைரியமாக நடைமுறைப்படுத்த முடியும் என்று சவாலாக இன்றைக்கு பல்வேறு திட்டங்களை தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் அப்படி அறிவிக்கப்படுகின்ற திட்டங்கள் முறையாக அந்த மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு நடைபோட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

'வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து'



என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு வறியார்க்கு என்ன கொடுக்கவேண்டுமென்று ஆராய்ந்து, கோட்டையிலே இருக்கக் கூடியவர்கள் குடிசையிலே இருக்கக்கூடிய மக்களை எண்ணிப் பார்த்து, அந்த மக்களுக்கு திட்டங்களைத் தருகிற ஆட்சிதான் தூய்மையான ஆட்சி, நல்லாட்சி என்று புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலங்களில் கோட்டையிலே இருந்து குடிசைக்குத் திட்டங்களைத் தந்த நல்லாட்சியை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த அடிப்படையில்தான், அந்த வழியில்தான் வறியார்க்கு ஒன்று ஈவதே என்ற அடிப்படையில் தல வரியை ரத்து செய்து கோடான கோடி மக்களுடைய வரிச் சுமையை போக்கியிருக்கக் கூடிய உங்களை இன்றைக்கு நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 1989-ல், அறந்தாங்கியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றைத் துவங்குவதற்கு ஆணை பிறப்பித்தீர்கள். விழாவும் எடுத்தீர்கள். அந்த விழா எடுத்ததற்கு பிறகு, மக்கள் பங்கு தொகையான 3 கோடி ரூபாய் வசூல் செய்து கட்டியதற்குப் பிறகு, அரசு ஒதுக்க வேண்டிய அந்த நிதி ஒதுக்கப்படாத காரணத்தால், இடம் ஆய்வு செய்யப்பட்டும் கூட, மக்கள் பங்கு தொகை கட்டி முடித்ததற்குப் பிறகும் கூட, அந்த ஆலை துவங்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடினாலும் கூட, அந்த மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கும். இன்றைக்கு கடுமையான வறட்சி புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது.

எங்கள் மாவட்டத்தில் இருக்கக் கூடிய 2 நூற்பு ஆலைகள் காவிரி — நூற்பு ஆலையும், அறந்தாங்கியில் இருக்கக் கூடிய துரையரசபுரம் நூற்பு ஆலையும், — 7, 8 ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாடி வதங்கி, கட்டுவதற்கே துணி இல்லாத ஒரு துர்பாக்கியமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களால் துவக்கப்பட்ட சர்க்கரை ஆலை மீண்டும் இந்த மாவட்டத்திற்கு வருகிறபோது, உள்ளபடியே அந்த மாவட்டத்து மக்கள், இந்த அரசைப்

பாராட்டுவதற்கும், என்றைக்கும் நன்றியைச் செலுத்துவதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்மைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகக் கடுமையானது. என்னுடைய தொகுதியில் கீரமங்கலம் பேரூராட்சியில், குடிதண்ணீர் கேட்டு 3 மாதத்திற்கு முன்பு மக்கள் போராடினார்கள். போராடி கேட்டார்கள். ஆனால் அந்த மக்கள் மீது, 48 பேர் மீது தடியடி செய்து காவல் துறை வழக்கு பதிவு செய்திருக்கிறது. ஆனால் குடிநீர் சரியாக கிடைக்கவில்லை. இன்றைக்கு நிதித்துறையில் அந்தக் கோப்புகள் தூங்கிக் கிடக்கின்றன. அதைப்போல ஆலங்குடி தொகுதியில் குடிநீருக்காக திட்டப் பணிகள் துவங்கப்பட்டு ஒரு ஆண்டு ஆகியும் கூட, இன்னும் மோட்டார் பொருத்தப்படாத நிலையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆலங்குடி நகரப் பேரூராட்சிக்குக் கிடைக்கவில்லை. கவர்னர் உரையிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். குடிநீர் இல்லை என்ற கிராமமே இல்லை என்ற நிலைக்கு மாற்றி அமைப்போம் என்று சவால் விட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அதை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த முடியும் என்று உங்களுக்குதான் தெரியும். எங்களுக்குத் தெரியாது. ஆனால் எங்களுக்கு பயமாக இருக்கிறது. தொகுதிக்குள் எங்கு பார்த்தாலும் குடிநீர்ப் பிரச்சினையும், தெரு விளக்குகள் இல்லை, சாலைகள் இல்லை என்ற ஆதங்கமும் மக்கள் மத்தியில் இருப்பதைப் பற்றி இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். அப்படி ஒரு நிலை தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு என்னுடைய ஆலங்குடி தொகுதியிலேயும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி மாவட்டம். விவசாயத்தையே நம்பி இருக்கக் கூடிய மாவட்டம். விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இன்றைக்கு சம்சாரம் இல்லை என்று சொன்னாலும் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆலங்குடி தொகுதியில், மரமடக்கி, ஆவணத்தான் கோட்டை பகுதிகளில் மின்சாரமே இல்லை. தெருவிளக்குகள் கூட எரிய முடியவில்லை. மிகக் குறைந்த அழுத்தம் உள்ள மின்சாரம் தொடர்ந்து 6 வருட காலமாக அங்கே இருப்பதால், அந்தப் பகுதி விவசாயிகள் செய்த விவசாயம் பூராவும் பட்டுப்போய் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அதுபோல



கரம்பக்குடி ஒன்றியத்தில், மணமேடை, செங்கமேடு, பத்துதாக்கு போன்ற பகுதிகளிலேயெல்லாம் மின்சாரமே வருவது கிடையாது. திருவாரூரிலேயிருந்து பட்டுக்கோட்டை வந்து ஆலங்குடி போய் செல்லுகிற போது மின்சாரமே வருவதில்லை என்ற குறை அந்த மக்களிடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் மிகவும் குறைந்த அழுத்த மின்சாரம் இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம், நான் சொன்ன பகுதிகளில் எல்லாம், மரமடக்கி செட்டங்காடு, ஆவணத்தான் கோட்டை, கரம்பக்குடி ஒன்றியத்தில் இருக்கக் கூடிய பந்துவகோட்டை, மணமேடை இப்படிப்பட்ட பகுதிகளில் மின்சாரமே வருவதில்லை. அங்கெல்லாம் மின்சார பம்புசெட்டுகள் இயக்கப்படுவதே இல்லை என்ற நிலை இருக்கிறது. இதைப் போக்க துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 1984-85ல் திருமணஞ்சேரி அணைக்கட்டு, ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர் தேக்கக் கூடிய அணைக்கட்டு, ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டது. ஆனால் அந்த திட்ட மதிப்பீடு இன்றைக்கு சென்னை தலைமைச் செயலகத்திலே தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்த திருமணஞ்சேரி அணைக்கட்டு இன்றைக்கு தேக்க நிலையில் இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப் போல இன்றைக்கு அகரான் விடுதிக்கு மலையூரிலிருந்து செல்ல ஒரு பாலம் அக்கினி ஆற்றின் குறுக்கே கட்டாததினால் அந்தக் கிராமத்திற்கு போக்குவரத்தே தடைபட்டிருக்கிறது. அந்தப் பாலம் ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. திருமணம் செய்யக் கூடிய பெண்களைக்கூட நல்ல மாப்பிள்ளைகள் திருமணம் செய்யாமல், பெண்கள் திருமணம் முடித்துக்கொள்ளாத நிலை அந்த அகரான் விடுதி பகுதியிலே இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதேபோல, மகாராஜா காட்டாறின் குறுக்கே கீரத்தூர் என்ற 1-ஆம் நெம்பர் பூத்-அந்தத் தொகுதிக்கு 1-ஆம் நெம்பர் பூத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னாலே இறங்கி நடந்துதான் போக வேண்டும். மகாராஜா காட்டாறின் குறுக்கே பாலம் தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்பட்ட பாலம்; வெள்ளத்தால் அடித்து, அந்தப் பாலம் சரியில்லை என்ற காரணத்தினால் அந்த கீராத்தூர் கிராமத்திற்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இன்றைக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் எங்களுடைய தொகுதியில் மிகவும் பாதித்து இருக்கிறது. ஆகவே, நான் இந்த மன்றத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்வதெல்லாம் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு முன்பு பேசிய பல

நண்பர்கள் சொன்னார்கள். உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்துகிறபோது, பல்வேறு மாற்றங்களைத் தர வேண்டும்; மக்களே நேரடியாக மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுக்கின்ற முறையை...

பிற்பகல் 12-50

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேசி முடிக்க ஒரே ஒரு நிமிடம்தான் கொடுப்பேன்.

*திரு. அ. வெங்கடாசலம்:* தலைவர் அவர்களுடைய கட்டளையை மீற முடியாத நிலையில் இருக்கிறேன். நிரம்ப உறுப்பினர்களுக்கு நிரம்ப நேரம் ஒதுக்கினீர்கள். நான் சுபேட்சை என்பதாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ என்னை ஒதுக்க வேண்டாம். எனக்கு ஒரு 2 நிமிடமாகிலும் கூடத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு, உள்ளாட்சி மன்றத்தில் இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும், ஒன்றியக் குழுவில் இருக்கக்கூடிய ஒன்றியப் பிரதிநிதியாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவராக இருந்தாலும், மாவட்டத் தலைவராக இருந்தாலும் மக்களே நேரடியாக வாக்களிக்கின்ற அந்தத் தேர்தல் சட்டத் திருத்தத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் பணிவோடு இங்கே கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம் உறுப்பினர்களை வைத்து வெற்றி பெற வேண்டும் என்றால், காசு உள்ளவர்கள் விலைக்கு வாங்கி யார் வரக் கூடாதோ அவர்கள் வந்து விடுவார்கள் என்பதற்காக நான் இதைப் பணிவோடு சொல்கிறேன். இன்றைக்கு இந்த கவர்னர் உரையிலே நீங்கள் சொல்லியிருக்கிற காவிரி நீர் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினை. மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற உங்களுடைய எண்ணப்படி மத்தியிலே கூட்டாட்சி அமையவிருப்பதாக இன்றைக்கு எங்களைப் போன்றவர்கள் நம்பிக் கொண்டு இருக்கிறோம். 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். உறவுக்கு மத்தியிலே இன்றைக்குக் கைகொடுங்கள். ஆனால் நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் உங்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இடைநிலை ஆசிரியர் பணி பற்றி பல்வேறு நண்பர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியர் பணி என்பது 1989-லேயே நம்முடைய தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு



மேனிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சியைக் கொண்டு வந்து அன்றைக்கு ஆண்களும் பெண்களுமாக 25 பேர்களுக்கு பயிற்சி அளித்து, 1989-ல் உங்களுடைய ஆட்சி பொறுப்பு ஏற்றபோது....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* 2 நிமிடம் என்று கேட்டார்கள். இப்போது 5 நிமிடம் ஆகி விட்டது. உங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து, பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் மூக்கையா அவர்கள்.

*திரு. எல். மூக்கையா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த பேரவையில் பணியாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பெரியகுளம் சட்டமன்ற தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியினை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். யானை வரும் முன்னே, மணி ஓசை வரும் பின்னே என்பார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் அனைத்து தரப்பட்ட மக்களும் பயன் அடையக்கூடிய ஏராளமான மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதற்காக நம்பிக்கையைத் தெரிவிக்கின்ற வகையில், குறைந்த பக்கத்தில் நிறைந்த திட்டத்துடன் யானையின் மணி ஓசையாக முன்வந்திருப்பது ஆளுநர் உரை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரை பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை புறநகர் மாவட்டத்தில் கழகப் பணி தொய்வின்றி நடைபெறவும், கழகப் பணிகளை விரைவுபடுத்தவும் அன்று மதுரை-புறநகர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, பெரியகுளம், தேனி, போடி, கம்பம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் அடங்கிய பகுதியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று மதுரை வைகை மாவட்டம் என்று பெயர் இட்டிருக்கிறார்கள். இப்போது மக்களின் நன்மைக்காக வசதிக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேனியைத் தலைநகரமாக்கி வைகை மாவட்டம் என்று அறிவிப்பார்கள் என்று அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து தரப்பட்ட மக்களும் அரசியல் விருப்பு வெறுப்பு இல்லாமல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

இன்றையதினம் ஆளுநர் உரையில் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசால் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருப்பதும் அதைப்போல மொழிச் சிறுபான்மையினருக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாமல் பாதுகாப்புத் தரப்படும் என்று தெரிவித்திருப்பதும், உயர் பதவியில் உள்ள அதிகாரிகள் மீதும் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க `ஆம்புட்ஸ்மென்' என்கிற விசாரணை அமைப்பை ஏற்படுத்தியிருப்பதும், அதைப்போல பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிட பழங்குடியினருக்கு 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கிட உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை முனைப்பாக நடத்தி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதும், இந்த முதல் சட்டமன்றக் கூட்டத்திலேயே உள்ளாட்சித் தேர்தல் நாள் அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருப்பதும் கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் முறையாக பணியாற்ற உறுதி செய்யப்படும் என்று தெரிவித்திருப்பதும், மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதங்கள் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதும், ஆசிரியர் நியமனங்கள் மீண்டும் வேலை வாய்ப்பகங்கள் மூலமாக நியமிக்கப்படும் என்று அறிவித்திருப்பதும், மாவட்டத்திற்கு ஆயிரம் பெண்களுக்கு உரிய ஊதியம் வழங்கி மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியிருப்பதுமாகியவை அடங்கிய இந்த ஆளுநர் உரையை தமிழ் மக்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளில் நடைபெறுகின்ற ஊழல் தடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நியாயவிலைக் கடைகளில் ஊழல் என்பது அனைத்து மட்டத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேர்-ஹவுசிலேயிருந்து அவர்கள் மூட்டையை எடை போட்டு அங்கே இருக்கின்ற ரேஷன் கடைக்கு கொடுக்கின்ற நேரத்தில் 100 கிலோ என்று எடை போட்டு அனுப்புகிறார்கள். அதை வெளியில் இருக்கின்ற தராசில் எடை போட்டுப் பார்த்தால் 95 கிலோதான் இருக்கிறது. ரேஷன் கடை ஊழியர்களும் தவறு செய்கிறார்கள். கேட்டால் சொல்கிறார்கள், மாதம் சிவில் சப்ளை தாசில்தாருக்கு 500 ரூபாய் நாங்கள் தருகிறோம்; அதேபோல சிவில் சப்ளை ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு மாதம் 500 ரூபாய் நாங்கள் மாமூல் கொடுக்க வேண்டியிருக்கிறது; இந்தப் பணத்தையெல்லாம் சரிக்கட்டுவதற்கு நாங்கள் தவறு செய்துதான்



தீரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே நியாயவிலைக் கடைகளில் அனைத்து மட்டத்திலும் தவறுகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. இந்தத் தவறுகளை நாம் உடனடியாக தடுக்காவிட்டால் நம்முடைய ஆட்சியின் மீதும் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். 1989 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் இலவச மின்சாரம் தந்தீர்கள். ஆனால் கடந்த 5 ஆண்டுக்காலமாக இந்த இலவச மின்சாரம் எப்பொழுது வரும் என்று விவசாயிகள் மோட்டார் ரூமிலேயே காத்துக்கிடக்க வேண்டிய ஒரு அவல நிலையில் இருந்தார்கள். அதோடுமட்டுமல்லாமல் பகலில் எந்த நேரத்தில் மின்சாரம் கிடைக்கும் இரவில் எந்த நேரத்தில் மின்சாரம் கிடைக்கும் என்று தெரியாமல் காத்துக் கிடக்கின்ற அந்த நிலையில், கிடைக்கின்ற மின்சாரம் குறைந்த அழுத்த மின்சாரமாக கிடைத்த காரணத்தினால் பல காலக்கட்டங்களில் அந்த மோட்டார் பம்ப் செட்டுகள் எல்லாம் வெந்து புகைந்து விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு எல்லாம் ஆளாகியிருக்கிறார்கள். அந்த நிலை எல்லாம் மாறுவதற்கு விவசாயிகளுக்கு உறுதி செய்யப்படும் மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். அந்த உறுதி செய்யப்படுகின்ற மின்சாரம் இரவிலே தராமல் பகலிலே தந்தால் விவசாயிகள் அதை முறையாகப் பயன்படுத்தி பயனடைய முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை உள்பட முக்கிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைத்து போக்குவரத்து நெரிசல் எல்லாம் குறைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். கொடைக்கானல் என்பது சுற்றுலா மையம். கொடைக்கானலுக்கு உலக நாடுகளிலிருந்து எல்லாம் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருகிறார்கள். மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் தான் அங்கே சீசன் என்று சொல்கின்ற நிலை மாறி இன்றையதினம் 12 மாதமும் வருடத்திற்கு 365 நாட்களிலும் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான வாகனங்கள் கொடைக்கானலுக்கு வந்து செல்கின்றன. எனவே அந்த கொடைக்கானலுக்கு இருக்கும் ஒருவழிப் பாதையை இருவழிப்பாதையாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் கொடைக்கானலுக்கு செல்லுகின்ற சாலையை அகலப்படுத்தியாக வேண்டும். ஏராளமான வாகனங்கள் அங்கு சென்று வருகின்ற நேரத்தில் பல காலங்களில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டும்.

அதோடுமட்டுமல்லாமல் கொடைக்கானலிலிருந்து மூணாறு செல்லுகின்ற அந்தச் சாலையை அமைத்துக் கொடுத்தால் மேலும் சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலுக்கு வந்து செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதைப்போல கொடைக்கானலுக்கு வசதி படைத்தவர்கள்தான் சென்று தங்க முடியும் என்ற நிலை இன்றையதினம் இருக்கிறது. எனவே, ஏழை எளிய மக்களும் கொடைக்கானலுக்குச் சென்று தங்கி வருவதற்கு அரசின் மூலமாக குறைந்த வாடகையில் அரசு விடுதி ஒன்று கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் ஒரு சுற்றுலா மையம். உலகத்தில் இருக்கக்கூடிய அனைத்து நாட்டில் இருந்தும் வந்து போகக்கூடியவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆகவே அந்த கொடைக்கானல் நகரத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் மலைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் இன்னும் சாலை வசதி இல்லாத காரணத்தால் பஸ் வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதிகளுக்கு சாலை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கக் கூடும். ஆனால் கொடைக்கானல் மலைப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள் சாலை வசதி இல்லாமல் பல சங்கடங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல கிராமங்கள் 18 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய கிராமங்கள் கொடைக்கானல் மலைப் பகுதியில் இருக்கின்றன. 20 கிலோ மீட்டர் குதிரையில் சென்றுதான் பல கிராமங்களுக்குச் செல்ல முடியும் என்ற நிலை இருக்கிறது. அந்தக் கிராமத்து மக்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டால் அவர்களைத் தொட்டிலில் வைத்து 20 கிலோ மீட்டர் தூரம் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெற வேண்டிய சூழ்நிலைகளை எல்லாம் அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சில நேரங்களில் தாய்மார்கள் பிரசவக் காலங்களில் அவர்களை டோலி கட்டி, தொட்டில் கட்டி தூக்கி வருகின்ற நேரத்தில் இடையிலே பிரசவம் ஆகின்ற அந்த நிகழ்ச்சி எல்லாம் நடந்ததாகச் சொல்லி மிகவும் வேதனைப் படுகிறார்கள். கடந்த 1989-90 ஆம் ஆண்டில் நம்முடைய கழக



ஆட்சியில் அந்தச் சாலைகள் எல்லாம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அன்று ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அந்தச் சாலை வசதி செய்கின்ற அந்தப் பணி எல்லாம் அன்றையதினம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே, மலைவாழ் மக்களுக்கு அந்தப் போக்குவரத்து வசதியை செய்கின்ற வகையில் அந்தக் கொடைக்கானல் மலைப் பகுதியில் இருக்கக்கூடிய சாலை வசதிகளை எல்லாம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியகுளம் என்பது ஒரு காலத்தில் குறு நகரமாக இருந்தது. அந்த பெரியகுளம் நகரத்தில் கடந்த 5 ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 20, 30 தடவை இனக் கலவரம், ஜாதிக் கலவரம் இப்படி பல்வேறு காலக்கட்டங்களில் தொடர்ந்து பெரியகுளம் நகரத்திலும், பெரியகுளத்தை ஒட்டி இருக்கக்கூடிய கிராமங்களிலும் அடிக்கடி ஏறத்தாழ 5 ஆண்டு காலத்தில் 20, 30 தடவை அங்கே இனக் கலவரம், ஜாதிக் கலவரம் நடந்து மக்கள் ஒற்றுமையாக இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை அங்கே இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மக்கள் மன நிம்மதி இல்லாமல் எந்த நேரத்தில் கலவரம் உண்டாகுமோ; எங்கே சமூக விரோதிகள் நுழைந்து கடைகளில் கொள்ளையடிப்பார்களோ என்று பாதுகாப்பற்ற நிலையில், பெரியகுளம் பகுதியில் உள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரியகுளத்தில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்கனவே இருந்தது. அது இப்போது தேனிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மறுபடியும் பெரியகுளத்திற்கே அந்தத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் பெரியகுளம் நகரத்தில் நகர காவல் நிலையமும், அதேபோல் அந்த பெரியகுளம் நகரத்தையொட்டி புறக் காவல்நிலையம் ஒன்றும் அமைத்தால்தான் பெரியகுளத்தில் அடிக்கடி நடைபெறுகின்ற அந்த ஜாதிக் கலவரம், இனக் கலவரத்தைத் தடுக்க ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் பெரியகுளத்தைப் பொறுத்தவரையில் பேரிஜம் ஏரியிலிருந்து போதுமான தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட அந்தத் தரை மட்டத் தொட்டி 10 ஆயிரம் மக்களுக்காகக் கட்டப்பட்டது. இன்றையதினம் 70 ஆயிரம், 80 ஆயிரம் மக்கள் பெரியகுளம் நகரத்தில் வாழ்கிறார்கள். அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே ஒரு மேல்நிலைத் தொட்டிக் கட்டி

முறையாக மேட்டுப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளத்தில் மாவட்ட மருத்துவமனை இருக்கிறது. ஆனால் போதிய பெட் வசதி இல்லை; ஆம்புலன்ஸ் வசதி இல்லை. எனவே, அந்த ஆம்புலன்ஸ் வசதியை அந்த மருத்துவமனைக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளத்தில் தினந்தோறும் இந்த ஐந்து மாதக் காலத்தில் ஆயிரம் டன் மாம்பழம் விளைவிக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு மாம்பழத் தொழிற்சாலை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சோத்துப்பாறை அணைத்திட்டம். மதுரை மாவட்டம், பெரியகுளம் நகருக்கு மேற்கே சுமார் 12 கிலோமீட்டர் தூரத்தில் தென்கரை என்ற கிராமத்தில் சோத்துப்பாறை என்ற நிலத்தில் வராக நதியின் குறுக்கே 2,831 மில்லியன் கன மீட்டர் 100 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்க அணை கட்டப்பட்டு வருகிறது. அந்த அணை 1982-83-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 13 ஆண்டு காலமாக அந்த சோத்துப்பாறை அணையைக் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த 13 ஆண்டுக் காலத்தில் மூன்றில் ஒரு பங்கு வேலைதான் முடிந்திருக்கிறது. இப்படி வேலை நடந்தது என்று சொன்னால் அந்த வேலை முடிவதற்கு இன்னும் 26 ஆண்டுகள் ஆகும். ஏறத்தாழ 39 ஆண்டு காலம் ஆகும் அந்த அணையைக் கட்டி முடிப்பதற்கு. அந்த மூன்றில் ஒரு பங்கு வேலையும் அன்றையதினம் கழக ஆட்சி நேரத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைசர் திரு. துரைமுருகன் அவர்களை அந்த அணையைக் கட்டும் இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டிய காரணத்தால் தான் முடிந்து இருக்கிறது. இன்னும் இரண்டு பங்கு வேலை நடக்க வேண்டும். அந்த இரண்டு பங்கு வேலையும் இப்பொழுது நடப்பதைப்போல நடந்தால்—ஏற்கனவே 13 ஆண்டுகள் ஆகியிருக்கிறது—இன்னும் 26 ஆண்டுகள் ஆகும். இதனுடைய பாசனம் ஏறத்தாழ 2932 ஏக்கர்கள். அந்த விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த அணையை விரைவுப்படுத்தி, விரைவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



பிற்பகல் 1-05

அதோடு மட்டுமல்லாமல், கும்பக்கரைக்கு மேலே அங்கே பாம்பாற்றின் குறுக்கே ஒரு அணைத் திட்டம், கழக ஆட்சியில் ஆய்வு செய்யப்பட்டு திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு, அங்கே கும்பக்கரை அருவிக்கு மேலே பாம்பாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுவதற்குரிய முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, அன்று திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தினால் அந்தப் பணி அப்பொழுது கடந்த கால ஆட்சியால் அப்படியே நிறுத்தப்பட்டு விட்டது. அந்த அணையைக் கட்டுவதற்கு உரிய முயற்சியினை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்து, மயிலாடுதுறைத் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இம்மாமன்றத்தில் நான் பேச அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றிகலந்த வணக்கத்தைக் கூறிக்கொண்டு, நான் பேசும்பொழுது மாண்புமிகு முதல்வரவர்கள் வெளியே எழுந்து சென்று விடுவார்களோ என்ற எண்ணம் என் மனத்திலே ஒரே எண்ணமாக இருந்தது. இருந்தாலும் அவர்கள் கடைசி வரை இருந்து மற்ற முதல்வர்கள் போனதுபோல போகாமல், கடைசி வரை இருந்து எல்லோரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருவாரியான வாக்குகளால் என்னை மீண்டும் இந்த அவைக்குத் தேர்ந்தெடுத்த எனது மயிலாடுதுறை தொகுதி மக்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மயிலாடுதுறை மக்களிடம் ஜாதி மத வேறுபாடுகள் இல்லாமல் எனக்கு இவ்வளவுப் பெரிய புகழைத் தேடித்தந்த மக்கள் தலைவர் ஜி.கே.எம். அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1970 ஆம் ஆண்டு நான் மயிலாடுதுறை நகராட்சியில் தலைவராக இருக்கும்பொழுது அந்த நகரத்திற்குச் செய்ய வேண்டிய வேலை

[திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்] [1996 மே 28

அத்தனையையும், பணியினையும் செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை எந்த நேரமும் எண்ணி எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடையும்; அதன்பொருட்டு ஒவ்வொருநாளும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாகவும் இருக்கிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் நான் நகராட்சி தலைவராக இருக்கும்பொழுதுதான் கலைஞர் முதல்வராக இருந்து மயிலாடுதுறை இரயில்வே மேம்பாலத்தைக் கட்டி முடித்து அதைத் திறந்து வைத்தார்கள்.

காவேரி ஆற்றில் அஞ்சுகத்தம்மாள் பாலத்தைக் கட்டி முடித்து என் தலைமையில் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள்.

26 ஆண்டுகளுக்கு முன்பு 5 இலட்சம் ரூபாய் லோன் அனுமதி பெற்று நகராட்சிக்கு அங்காடி கட்டித் தந்து எனக்கும், எனது தொகுதி மக்களுக்கும் பெருமை தேடித் தந்தவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். தற்போது அதன் மதிப்பு ஒரு கோடி ரூபாய் பெருமதியாக இருக்கின்றது.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், கலைஞர் அவர்களைப் புகழ்வதற்காக அல்ல. நடந்தவைகளைச் சொல்வதற்கு நான் நன்றி உடையவனாக உள்ளேன். எத்தனையோ பொதுக் கூட்டங்களில் நான் நன்றி தெரிவித்தும் கூட, இம்மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

நான் கடந்த சட்டமன்றத்தில், சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், எனக்கு மன நிறைவு இல்லை. நான் பல சட்டமன்ற உறுப்பினர்களிடம் டாக்டர் கலைஞர் இந்த அவையில் இருக்கும்பொழுது நானும் இந்த அவையில் உறுப்பினராக வர வேண்டியவன், ஆனால் இப்பொழுது இந்த அவையில் நான் வந்து சிக்கித் தவிக்கிறேன் என்று கூறுவது உண்டு. நான் எண்ணிய எண்ணப்படி டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இந்த அவையில் இருக்கும்பொழுது நானும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். அதற்காக ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

ஆளுநர் உரையில் பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். ஒரு கிராமத்திற்கு மிகவும் அத்தியாவசியத் தேவைகளான குடிநீர் வசதி, மின்வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, வீட்டு வசதி



1996 மே 28] [திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்]

போன்றவைகளை நிறைவேற்றும் வண்ணம், பல புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பஞ்சாயத்துத் தேர்தல் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்று கூறியிருப்பது கிராம மக்களுக்கு மிக மிக சந்தோஷமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இது மிகவும் பாராட்டுவதற்குரியதாகும்.

தேர்தல் நேரத்தில் சில கிராமங்களில், தேர்தல் புறக்கணிப்பு என்று கூறி ஓட்டுப் போடக் கூட முடியாத அளவுக்கு மக்களைச் சிலர் பயமுறுத்தினார்கள். அவர்களுக்கு பல வாக்குறுதிகளைச் சொல்லி, கலைஞர் எப்படியும் ஆட்சிக்கு வந்துவிடுவார், உங்கள் கோரிக்கைகளை கலைஞரிடத்தில் சொல்லி அவைகளையெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றித்தருவோமென்று உங்களின் சார்பாக நான் அந்த வாக்குறுதிகளை அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அதுபோலவே, சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற கொள்கை உடைய கலைஞர் அவர்களுடைய அரசும் அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றித் தரும், தருவீர்கள் என்ற நம்புகிறேன். அதில் மயிலாடுதுறை ஒன்றியத்தில் வடவஞ்சாறு சாலை, குளிச்சாறு சாலை ஆகியவற்றைச் செப்பனிட்டு தர வேண்டும். சீப்புளிஓடைக்கரையில் சுமார் 20 ஆண்டுகளாக உடைந்து போய் இருக்கும் பாலத்தை உடன் சீரமைத்துத் தர வேண்டும். சேசிங்கில் பாலத்தை அகலப்படுத்தித் தர வேண்டும். சித்தர்காடு பள்ளிக்கூடம் எப்பொழுது இடிந்து விழும் என்ற நிலையில் இருப்பதால் அதனை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி புதிய பள்ளிக் கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறையில் மக்கள் தொகை, போக்குவரத்து அதிகமாகிவிட்டபடியால் காவிரியின் குறுக்கே திருவளந்தூர் பைபாஸ் பாலம் கட்ட தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் 65 இலட்சம் ரூபாய் அனுமதி பெற்று பில்லர்கள் போடப்பட்டு கிட்டத்தட்ட 75 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டன. இன்னும் 25 சதவீதப் பணிகள் மீதமுள்ளன. இந்த நிலையில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் போதிய நிதி வசதி இல்லை; எனவே, அந்தப் பாலத்தை ஹைவேஸில் சேர்த்துக் கொள்ளும்படி எழுதியிருக்கிறார்கள். அதுபோலவே அதை ஹைவேஸ்ஸில் சேர்த்துக் கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள். இந்த 25 சதவீத வேலைகளை முடித்துக் கொடுத்தால், 50 சதவீத போக்குவரத்து முறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியில் இருக்கும் நடிப்பிசைப்புலவர் இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இயங்கிக் கொண்டிருந்தாலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்பை ஆலையில் எடுத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் விவசாயிகள் பலர் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகி அந்தக் கரும்பை அழித்துவிடுகிறார்கள். இந்த அளவுக்கு கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், கரும்பு விவசாயிகளை அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் முதல்வர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

சென்னையிலிருந்து மகாபலிபுரம் வழியாக கிழக்குக் கடற்கரைச் சாலை கடலூர் வரை போடப்படுகிறது. அதைக் கடலூரோடு நிறுத்தி விடாமல் இரேமேஸ்வரம் வரை அதைக் கொண்டு செல்லுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மாமன்றத்தில் என்னையும் இடம் பெறச் செய்து மக்களின் குறைகளை எடுத்துக் கூற வழிவகை செய்த மக்கள் தலைவர் ஜி.கே.எம். அவர்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெற்று, அமர்கிறேன், நன்றி வணக்கம்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரவக்குறிச்சி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது குறள். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு அரவக்குறிச்சித் தொகுதியிலே வெற்றிவாகை சூடி வெற்றிவீரராக இன்று 11-வது சட்டமன்றப்



பேரவையிலே மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு என்னை ஆளாக்கி அரசியலிலே வழிகாட்டி மறைந்த மாமேதை, கண்ணியத்தின் இருப்பிடம்? கவ்மின் தலைவர் காயிதே மில்லத் அவர்களின் பயிற்சிப் பாசறையிலே வளர்ந்து, அவரின் அடிச்சுவற்றைப் பின்பற்றி சற்றும் சறுக்காமல், வழிபிறழாமல், இந்தியத் திருநாட்டின் எழுச்சி மிக்க நாயகனாய், இஸ்லாமிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்ந்து இஸ்லாமிய சமுதாயத்தை வழிநடத்திச் செல்லுகின்ற எனதருமைத் தலைவர் ஷம்ஷிரே மில்லத் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைக்கூறி எனது வார்த்தைகளைத் துவக்குகின்றேன்.

தமிழகத்திலே வாழ்கின்ற இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்கள். ஆனால் என் தலைவர் அன்றும், இன்றும், என்றும், கவ்மின் காவலரும், பெருந்தகை பேரறிஞர் அண்ணாவும் ஏற்படுத்திய உறவின் அடிப்படையில், அண்ணாவிற்குப் பின்னும் இன்று வரை கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடன் தோளோடு தோள் நின்று வெற்றியிலும் தோல்வியிலும் துஞ்சாமல் தளராமல் லட்சியப்பிடிப்போடு, ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் தன்மானத் தலைவர் கலைஞருடன் கைகோர்த்து ஒன்றுபட்டு நின்றுவருபவர்தான் எனதருமைத் தலைவர் ஷம்ஷிரேத் மில்லத் அவர்கள். தோல்வி வருகின்ற நேரத்தில் கட்சி மாறி ஓடி விடுகிறவரல்ல. வெற்றிவாகை சூடும் நிலை வரினும் பதவி கேட்டுப் பகைத்துக் கொள்பவரல்ல . முஸ்லீம் லீக் கட்சி இரண்டாகப் பிரிந்த நேரத்திலும் வெளியில் வந்தபோது கழகத் தலைவர் அன்போடு கொடுத்த நான்கு சீட்டுகளைப் பெற்று வெற்றிவாகை சூடி இஸ்லாமிய மக்களிடம் நீங்காத அன்பைப் பெற்றார். அன்றைய முதல்வராக விளங்கிய மாண்புமிகு கலைஞர் அவர்கள் வக்ப் வாரியத்தைத் தலைவரிடம் ஒப்படைத்தார்கள்.

அதுமட்டுமல்ல. சிறுபான்மை நலக் கமிஷன் என்று ஒரு ஆணையத்தையும் உருவாக்கி எங்களின் பொதுச் செயலாளராக விளங்கிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் வி.எம். அப்துல் ஜப்பார் சாஹிப் அவர்களைத் தலைவராக்கி அந்த ஆணையத்தை அவர்களிடம் ஒப்படைத்தார்கள். தமிழகத்திலே நல்லதொரு ஆட்சி நடத்தி இஸ்லாமிய மக்களின், பிற்படுத்தப்பட்ட மக்களின் பேரன்பையும் ஆதரவையும் பெற்றவர்தான் மாண்புமிகு கலைஞர் அவர்கள்.

இன்றையதினம் இஸ்லாமிய மக்களின் பேரில், சுயநலனுக்காக சமுதாயம் என்ற பெயரைச் சொல்லி அரசியல் நடத்தும் அரசியல் தலைவர்களிடமிருந்து பிரிந்து வந்து இந்திய தேசிய லீக் என்ற பெயரிலே

புதிய கட்சி தொடங்கி இரண்டாண்டுகளாகின்றன. இந்த இரண்டாண்டுகளிலே மாநாடுகளை நடத்தி இஸ்லாமிய மக்களின் எண்ணங்களிலே குடிகொண்டவர்தான் என் தலைவர் ஷம்ஷிரேத் மில்லத் அவர்கள். கழகத்தலைவர் கலைஞரிடத்திலே இம்முறை 5 இடங்களைக் கேட்டுப் பெற்று 5 இடங்களிலும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்திலே வெற்றிவாகை சூடி இன்று 11-வது சட்டமன்றத்திலே அடியெடுத்து வைத்துள்ள ஐவரில் நாங்கள் மூவர் புதியவர்கள். அதில் நான் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்டு, வெற்றிவாகை சூடி, இன்றைய தினம் இந்த அவையின் முன் இந்திய தேசிய லீக் கட்சியின் கொறடாவாகப் பொறுப்பேற்று உரை நிகழ்த்த முன்வந்துள்ளேன்.

உரை நிகழ்த்த வந்துள்ள எனது பேச்சில் குறையிருப்பின் பொறுத்தருள வேண்டுகின்றேன். சட்டமன்றப் பேரவையில் முதல் பேச்சான என்னுடைய கன்னிப்பேச்சை முன்வைத்து உரையைத் துவங்குகின்றேன். அரவக்குறிச்சித் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து என்னை அனுப்பிய என் வணக்கத்திற்கு உரிய தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முற்போக்குக் கூட்டணிக் கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பார்வர்டு ப்ளாக் போன்ற தோழமை அரசியல் கட்சிகளுக்கும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மன்றம் விஜயகாந்த் நற்பணிமன்றம், சரத்குமார் நற்பணி மன்றம் மற்றும் தமிழக வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த, கடந்தகால ஐந்தாண்டுகால ஆட்சி, அராஜக ஆட்சி, ஆணவ ஆட்சி, சர்வாதிகார ஆட்சி என்ற பெயரைப் பெற்ற ஆட்சிக்குத் தமிழக மக்கள் நல்ல பாடத்தினை அளித்தார்கள். அப்படி அவர்களுக்கு பாடம் புகட்டி, தமிழகத்திலே நல்லாட்சி புரிந்திட கழகத் தலைவர் கலைஞர் ஆட்சி அமைத்திட, பட்டிதொட்டி வாழ் பாமர மக்கள் எல்லாம், பழைய ஆட்சியின் மீது மனம் வெறுத்து நமக்கு ஓட்டளித்து ஆட்சி மாற்றம் செய்து இன்று நம்மிடம் ஆட்சிப் பீடத்தையும் ஒப்படைத்துள்ளார்கள்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியிலுள்ள குறைகளை அவையின்முன் எடுத்து வைத்துள்ளார்கள். அதேபோன்று நானும் எனது தொகுதிப் பிரச்சினையை முன்வைக்கிறேன். கடந்த காலத்தில் திருச்சி மாவட்டத்தைப் பிரித்து கரூர்–தீரன் சின்னமலைக்கவுண்டர் மாவட்டம்



என ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கி அறிவித்துள்ளனர். ஆனால் மாவட்டம் துவங்கப்பட்டுள்ளதே தவிர மாவட்டத்திற்குரிய அளவில் அரசு அலுவலகங்களுக்குப் போதிய இடம் தேர்வு செய்யப்படவில்லை. அலுவலகத்திற்குரிய மேசை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்கள்கூட ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் நிலைதடுமாறி சிரமத்தில், பணி செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். போகிறபோக்கில் திட்டங்களை கோடிக்கணக்கில் வாரி இறைத்து சென்றுள்ளனர். ஆகவே, முந்தைய அரசானது ஒவ்வொரு மாவட்டத்திலும் பல கோடி திட்டங்களை வாரி வழங்கியது என்ற செய்தியினை செய்தித் தாள்கள்மூலம் படித்துள்ளேன். ஆகவே, அவ்வாறு அறிவிக்கப்பட்ட கோடிக்கணக்கான திட்டங்கள் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அமலாக்கம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-20*

கரூர்—தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி தொகுதி தாலுக்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் அதே நிலைதான். ஆகவே, தற்போதைய அரசு எனது மாவட்டத்திற்குரிய வசதிகளைச் செய்து கொடுத்திட அன்புடன் வேண்டுகின்றேன். அரவக்குறிச்சியை, பேக்வேட், பின்தங்கிய பகுதி என அரசு அறிவித்துள்ளது. தமிழகத்திலே உள்ள தொகுதிகளிலேயே மிகவும் பெரிய தொகுதியான, மக்கள் தொகை குறைந்திருந்தாலும் ஏராளமான கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 650 கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். மூன்று ஊராட்சி ஒன்றியங்களையும் சுமார் 88 பஞ்சாயத்துக்களையும் கொண்டதாகும்.

இத் தொகுதி வாழ் மக்களுக்குக் குடிதண்ணீர் பஞ்சம் மிகவும் அதிகம். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உடனடியாக எடுத்துச் சொல்லப்பட்டு, நாள்தோறும் கரூரிலிருந்து பள்ளப்பட்டு மாநகருக்கு குடிதண்ணீர் இரண்டு லாரிகளில் தினசரி சப்ளை செய்யப்படுகிறது. அதே போன்று, ஈசனத்தம், ஜமீன்ஆத்தூர் போன்ற பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கும் லாரிமூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பட்டி தொட்டிகளில் கூட ஆடு மாடுகளுக்குக் கூட தண்ணீர் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. பல இடங்களில் போர் வெல், ஆழ்குழாய் போடப்பட்டும், 200 அடி, 300 அடி போட்டும் தண்ணீர் இல்லை. சில இடங்களில் தண்ணீர் கிடைத்தாலும் போர்மூலம் எடுக்க

முடியவில்லை. கலெக்டரிடத்திலே சொல்லி கம்ப்ரசர் பிட் செய்து தண்ணீர் எடுக்க அனுமதி அரசாங்கத்திடம் கேட்டுப் பெற வேண்டியுள்ளது. ஆகவே இக்குறை கடந்த பத்து ஆண்டுகாலமாக தொடர்ந்து இருந்து வருகிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லப்பட்டது. இதனைப் போக்கிட கடந்த காலத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞரது பொற்கால ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களால் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டத்தை தயாரித்து அதற்காக 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு, மாஸ்டர் பிளான் ஒன்றும் தாயரிக்கப்பட்டு உரிய அதிகாரிகளையும் நியமனம் செய்து முறைப்படி அரசு பணிகள் மேறகொள்ளப்பட்டன. உரிய இடங்களையெல்லாம் பார்வையிட்டு சர்வே செய்யப்பட்டு வேலைகள் துவங்கப்பட்ட நேரத்தில்தான் கழக அரசு திடீரென கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குபின் வந்த அரசு அத்திட்டத்தை முடக்கிவிட்டது. கழக அரசால், கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டத்தை அமல் படுத்துவதா என்று ஆணவத்தால் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டது. தொகுதி மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டு, அல்லல்பட்டு அவதியுற்று வருகின்றார்கள். ஆகவே, என் தொகுதியிலுள்ள மக்களுக்கு முதலில் குடிதண்ணீர் வசதிக்காக, காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை மீண்டும் கலைஞரது பொற்கால ஆட்சியில் கொண்டு வருவதே எனது தலையாய கடைமையாகும் என தொகுதி மக்களிடத்திலே வாக்களித்து, வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு வந்துள்ளேன். ஆகவே இத்திட்டம் எந்த அளவில் உள்ளது? ஏன் முடக்கப்பட்டது? இத்திட்டம் வேறு மாவட்டங்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டதா? இதனை அறிந்து கொள்ளவிரும்புகிறேன். அவ்வாறு திட்டம் முடக்கப்பட்டிருந்தாலும், மீண்டும் அருள்கூர்ந்து அத்திட்டத்தை கலைஞரது பொற்கால ஆட்சியிலே என் தொகுதியான அரவக்குறிச்சிக்கு ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டிலே பின் தங்கிய பகுதியான (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள என் தொகுதிக்குத் தண்ணீர் பிரச்சினை தீர்ந்திட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்திக் கொடுத்திட பணிந்து கேட்டுக் கொள்ளுகின்றேன். இதற்குரிய வரைபடம், திட்ட மதிப்பீடு போன்ற சில குறிப்பீடுகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரிடத்திலும், ஒன்றியப் பெருந்தலைவரிடத்திலும் உள்ளன. அதனை தமிழக முதல்வர்



அவர்களிடம் தந்து சந்தித்து விளக்கம் சொல்ல கால அவகாசம் கொடுக்கப்படுமேயானால், நேரிலேயே தங்களிடம் விளக்கங்களை எடுத்துவைக்கக் காத்திருக்கிறேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, உரிய போர்க்கால நடவடிக்கையினை மேற்கொண்டு குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுகிறேன்.

மேதகு ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும், அனைவரும் வாழ்த்தி வரவேற்கின்றனர். ஜாதி மத பாகுபாடின்றி, ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட அனைத்துச் சமுதாய மக்களுக்கும் ஏற்றதொரு நல்ல திட்டங்களாக அவை உள்ளன என்பதை கிராம மக்கள் முதல் அனைவரும் பாராட்டுகின்றனர்; வரவேற்கின்றனர். நானும் எங்களது இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் வாழ்த்தி வரவேற்கின்றேன். தாங்கள் பொற்றுப்பேற்ற உடன் முதலில் அறிவித்த தலவரி ரத்து அனைவரையும் கவர்ந்துள்ளது. அடுத்து, திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரை இட்டதும், போக்குவரத்துக் கழகத்திற்கு ராஜீவ்காந்தியின் பெயரைச் சூட்டியதும் தங்களின் பெருந்தன்மையையும், அரசியல் நாகரீகத்தையும் எடுத்துக் காட்டியுள்ளது.

சென்ற முறை ஆட்சிப் பொறுப்பேற்று புதிய ஆணையம்- சிறுபான்மை நலக் கமிஷன் என்ற ஒரு ஆணையத்தை உருவாக்கியது போல இம்முறை தமிழ்ஆட்சி மொழித் துறை என்று ஒரு அமைச்சகமே உருவாக்கியது எந்த மாநிலத்திலேயும் இல்லாத பெருமை, இது நம் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** ஐயா, தொகுதியினுடைய இரண்டொரு குறைகள் முக்கியமானது, அதையும் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரைக்கும் தொகுதியைப் பற்றித்தானே பேசினீர்கள். அடுத்த முறை பேசும்போது பேசலாமே. சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 1-25

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** என் தொகுதியிலுள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயிகள். பாசனத்தை எதிர்நோக்கியுள்ளவர்கள். நீர்ப்பாசன வசதிகள், அணைக்கட்டுகள் முதலியவை எனது பகுதிக்குத் தேவையுள்ளது. அவைகளை செய்துத் தரவேண்டுமென்று வேண்டிக்

கேட்டுக் கொள்கிறேன். சில கால்வாய்களைத் தூர் எடுத்து சுத்தப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம மக்கள் தறிகளை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களுக்கு அரசு மூலம் கிடைக்க வேண்டிய சலுகைகள், மின்சாரம், மான்ய உதவி, கூட்டுறவு மூலம் நூல் முதலியன கிடைத்திட ஆவன செய்து தர அன்புடன் வேண்டுகிறேன்.

அரவக்குறிச்சி தொகுதியில் ஒரே ஒரு 'ஸ்பின்னிங் மில்' மலைக்கோவிலூர் என்ற இடத்தில் —- கூட்டுறவு நூற்பாலை —- தங்களது ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. 700 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். கடந்த கால அரசு, கவனக் குறைவாக இருந்ததால் தற்போது அந்த ஆலை இழுத்து மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதில் வேலை செய்த 700 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலையில் உள்ளன.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்து, நன்னிலம் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பத்மா.

*டாக்டர் பத்மா:* மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் நன்னிலம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகச் சேர்த்த பெருமை எங்களது மக்கள் தலைவர், தமிழ் மாநில காங்கிரஸின் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தையும், முதலமைச்சர் அவர்களுக்கு அவருடைய மாவட்டத்தினைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் இருப்பதால் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையை ஆரம்பிக்கலாம் என நினைக்கிறேன். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியபோது ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து தெளிவாக எல்லாவற்றையும் எடுத்துரைத்திருக்கின்றார்கள். இருந்தாலும் ஒரு சில கருத்துக்களை சொல்லலாம் என நான் நினைக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரை மிகச் சிறியதாக இருந்தாலும், கடந்த காலத்தில் கவர்னர் அவர்களது மனம் நிறைவில்லாமல் பல பக்கங்கள் கொண்ட உரையைக் கொடுத்ததற்கும், இப்போது கொடுத்துள்ள உரைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. எனவே, இது சிறியதாக இருந்தாலும் பெருமைப்படக்கூடிய உரையாக அமைந்திருக்கின்றது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் கூற விரும்புவது 10 ஆண்டுகளுக்கு முன்னர் கலைக்கப்பட்ட மேலவையை மீண்டும் அமைக்கப்போவதாக ஆளுநர் உரையிலே கூறியுள்ளது பாராட்டத்தக்கது. அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்





கொள்வதுடன், மேலவை வருவதன் காரணமாக அறிஞர்களின் ஆழ்ந்த கருத்துக்களைப் பெறுவதற்கு. ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து மதுவிலக்கு பிரச்சாரத்திற்கு 25,000 மகளிரைத் தேர்ந்தெடுக்கப்போவதாக ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. அவர்களோடு கிராம நிர்வாக அதிகாரிகளையும், காவல் துறை அதிகாரிகளையும் இணைத்து, கட்டுப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பேச வேண்டுமென்றால் நிறைய பேசலாம். பேசுவதற்கு தலைவர் கொடுத்த நேரம் இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. எனவே, என் தொகுதியைப் பற்றி.....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இன்னும் வேண்டுமானால் இரண்டு நிமிடங்கள் அதிகமாகக் கொடுக்கின்றேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

*டாக்டர் பத்மா:* காலம் குறைவாக இருப்பதால் எதைப்பற்றி பேசுவது என்று தெரியவில்லை. 1957-லே இரட்டைத் தொகுதி என்று சொல்லக்கூடிய தொகுதியாக இருந்த என்னுடைய நன்னிலம் தொகுதி தற்போது 40 ஆண்டுகள் ஆகியும் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் குக்கிராமமாகவே இருப்பதை முதல்வர் அவர்கள் நன்றாக அறிவார்கள். நான் விளக்கமாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. 40 ஆண்டுகள் ஆகியும் நன்னிலம் தொகுதி இன்றும் கிராமம் கிராமமாக மிகவும் மோசமாக இருக்கிறது. விளக்கு இல்லாத ஊர்கள் நிறைய இருக்கின்றன. பேருக்காக போஸ்டுகள் இருந்தாலும்கூட விளக்குகள் கிடையாது. பகுதிகளைச் சொல்ல வேண்டுமென்றால் நிறையச் சொல்லலாம். நேரத்தின் அருமை கருதி அடுத்த விஷயத்திற்குச் செல்கிறேன்.

நன்னிலம் தொகுதியைச் சேர்த்து 1991-ல்-அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் என்பார்களே அதுபோல — 1991-ல் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது புதியதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டம் நாகை காயிதே மில்லத் ஆகும். இன்றுவரை சொந்தமாக மாவட்ட ஆட்சியர் கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இதனால் நன்னிலம், திருவாரூர், கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் இருந்து வரும் பணியாளர்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். மயிலாடுதுறைக்கும் வேதாரண்யத்திற்கும் இடையிலுள்ளது திருவாரூர். எனவே, திருவாரூரை அல்லது நன்னிலத்தை

தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

காரணம், திருவாரூரைத் தலைநகர் ஆக்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் ஏற்கெனவே இருந்தபோது, அதற்கு முந்திக்கொண்டு, 1991-லே முதன்முதலாக, பதவி ஏற்றவுடன் உருவாக்கப்பட்ட முதல் மாவட்டம் நாகை-காயிதே மில்லத் மாவட்டமாகும்.

*பிற்பகல் 1-30*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** பேரவையின் அனுமதியோடு இன்றைய அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

***டாக்டர் பத்மா:*** தலைவர் அவர்கள், எங்கு வந்து தன்னுடைய மாவட்டத்தை ஏற்படுத்திவிடப்போகின்றாரோ என்ற ஒரே காரணத்திற்காக முதலில் இருந்த அரசு திருவாரூரைத் தலைநகர் ஆக்கக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்தை ஆரம்பித்து, அது இயங்கிவருகின்றது. இதனால், கடந்த ஐந்தாண்டு காலத்தில் நாங்கள் பட்ட வேதனையைச் சொல்ல முடியாது. ஆகவே, இப்போதாவது திருவாரூரைத் தலைநகராகக் கொண்டோ, அல்லது நன்னிலத்தைத் தலைநகராகக் கொண்டோ தனி மாவட்டம் அமைக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

நன்னிலம் தொகுதிக்கு பனங்குடியில் 'குரோத் சென்டர்' என்று ஒன்று வந்தது. அது உங்கள் காலத்தில்தான் ஏற்பட்டது. அதுவும் இப்போது கிடப்பிலே போடப்பட்டு ஒன்றுமே நடக்காமல் உள்ளது. காரணம் சொல்லவேண்டுமென்றால் பெரிய கதையாக இருக்கும். அதனால், அதையும் உங்கள் கவனத்தில் கொண்டு எங்களுடைய மாவட்டத்திற்கு 'குரோத் சென்டரை' உடனடியாகக் கொண்டு வருவதற்கு உங்களிடம் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

நன்னிலத்திலே தாலுகா அலுவலகம், கோர்ட் எல்லாம் இருக்கின்றன. அரசு மருத்துவமனை இருக்கின்றது. மூன்று பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றிற்கு வீட்டுவசதி, 'குவாட்டர்ஸ்' கட்டித்தரப்படாத நிலையில் இருக்கின்றன. மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் `Industrially most backward area' என்றுதான் சொல்லவேண்டும். தண்ணீரைப் பொறுத்தவரையில், இருந்தால் தண்ணீர், இல்லையென்றால் காய்ந்துவிடும். வருடத்திற்கு ஒரு முறை புயல் அடித்து தண்ணீர் வரும். டிசம்பர் மாதத்தில் புயல் வந்து



தண்ணீர் வந்து பயிரையெல்லாம் அடித்துக் கொண்டு போய்விடும். அடுத்து ஏப்ரல், மே மாதத்தில் தண்ணீர் இல்லை, தண்ணீர் இல்லை என்ற பிரச்சினை. எனவே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கண்டிப்பாக பிற்படுத்தப்பட்ட தொகுதி என்ற முன்னுரிமையைக் கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை உங்கள் முன் வைக்கின்றேன்.

அடுத்து எனது தொகுதியிலுள்ள மருத்துவமனையானது, நான் 10 ஆண்டுகளுக்கு முன் வேலை செய்தபோது இருந்த அதே நிலையில்தான் இப்போதும் இருக்கின்றது. காரணம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம், அந்த பழைய கட்டிடங்கள் அத்தனையும் இடிந்து போகக்கூடிய நிலையில் இருக்கின்றன. அந்த மருத்துவமனைக்கு வேண்டிய புதிய கருவிகள் வந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் புதிய கட்டிடம் இருந்தால், அதனுடைய முக்கியமான கருவிகள் அத்தனையையும் ஏ.சி. ரூமில் வைக்கவேண்டிய காரணத்திற்காக, பழைய கட்டிடங்கள் அத்தனையையும் இடித்துவிட்டு, புதிதாக இரண்டு கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமென்று உங்களிடம் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, திருவாரூரைப் பொறுத்த அளவிற்கு என்னுடைய பழைய தொகுதி என்றாலும்கூட, நான் நிறையப் பேசவேண்டும். நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்த மேம்பாலமானது, பாதியில் நின்று, திருப்பிக் கட்டப்பட்டு, பழனிச்சாமி அவர்களால் உண்டாக்கப்பட்டு பின்பு திறக்கப்பட்டது. அந்த ஒரு வழியைத் தவிர வேறு வழி எங்களுக்குக் கிடையாது. அதை வைத்துக்கொண்டு எங்களுடைய தொகுதியை முன்னேற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கும்போது, நன்னிலத்தைப் பொறுத்த அளவிற்கு வேறு எந்தவொரு வசதியுமே இல்லாமல் இருக்கின்றது. எனவே, நன்னிலத்திற்கு முதல் முன்னுரிமை கொடுத்து முன்னேற்றம் செய்வதற்கு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நிறைய பேசவேண்டியிருக்கின்றது. ஆனால் பட்ஜெட் செக்ஷன் வரும்போது நிறைய பேசுகிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. எஸ். திருநாவுக்கரசு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பிரச்சினை இன்றோடு முடிய வேண்டும் என்ற காரணத்தினாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-உடைய சிலையைப் பொறுத்தவரை, ஒரே ஒரு சிறு விளக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த சிலை திறக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது சரிதான். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:*** இந்தப் பிரச்சினை முடிந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. யார் வேண்டுமானாலும், எந்தப்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1996 மே 28

பிரச்சினையையும், எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்றால் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடு) ஏதாவது ஒரு முறையை வகுங்கள். இது என்ன சட்டசபையா? அல்லது வேறு எதுவுமா? (குறுக்கீடு) இல்லை, தயவு செய்து முதலில் தலைவர் இடத்தில் நான் விளக்கம் கேட்கவிரும்புகிறேன். இந்த அவையை நடத்துவதற்கு ஏதாவது ஒரு முறை இருக்கவேண்டும். சட்டதிட்டங்கள் இருக்கின்றன. ஒரு உறுப்பினர் எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் பேச வேண்டுமென்றால் இந்தச சட்டமன்றததை நடத்த முடியாது. இந்த என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரிலே, தயவுசெய்து தலைவரிடத்திலேயிருந்து நான் பதிலை எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, நீங்கள் முன்னாள் அமைச்சர். முன்னாள் பேரவைத் துணைத் தலைவர். இத்தனையையும் தெரிந்து கொண்டு பேரவை நிகழ்ச்சிகள் முடிகின்ற நேரததில், ஏற்கெனவே ஒரு மணி நேரத்திற்கு முன்னால் உங்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் கருத்துப் பரிமாற்றம் ஆனபிறகும், இப்போது விளக்கம் என்று சொன்னால், அது முறையல்ல. உங்கள் நிறைவுக்கு விளக்கம் வேண்டுமென்றால் முதலமைச்சர் அவர்களைத் தனியாகச் சந்தித்துச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:* தயவுசெய்து இந்த முறைகளைப் பின்பற்றினால், நாளைக்கு எந்த விதிமுறைகளின்படியும் இந்த மன்றத்தை நடத்த முடியாது. நான் கேட்பது இந்த மன்றத்தில் எந்த உறுப்பினரும் எப்பொழுது வேண்டுமானாலும், எதைப்பற்றியும் கேட்கலாமா? பேசலாமா? காலையில் நடந்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது (குறுக்கீடு)

*பிற்பகல் 1-35*

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரம் ஆனால் பரவாயில்லை, ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடு)

*மாண்புமிகு திரு. துரைமுருகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி நடக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவையிலே இருந்தார். அப்போதே எழுந்து சொல்லியிருக்கலாம் அல்லது அடுத்து பேசும்போது சொல்லியிருக்கலாம். இவ்வளவு நேரம் இருந்து விட்டு இப்போது எழுந்து சொல்வது என்றால் முறையா? அதைத்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் கூறுகிறார். (குறுக்கீடு)



1996 மே 28]

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காண்ட்ரோவர்ஷியலாகச் சொல்லவில்லை, ஒரு நிமிடம் (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்லப் போகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு இந்த ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு அனுமதி அளிக்கிற நேரத்தில் இந்தக் கருத்தை மாண்புமிகு முதலமைச்சரிடம் சொல்லலாம்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடு).

** மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நிற்கும்போது திரு. திருநாவுக்கரசு நிற்கவே கூடாது, முதலில் அதை உறுதிப்படுத்துங்கள்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று 5 நிமிடம் ஆகிவிட்டது. அமைதி காக்க வேண்டும். நான் நிற்கும்போது நீங்கள் நிற்கக் கூடாது. அந்த மரபு உங்களுக்குத் தெரியும்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடு)

*மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்புச் சொல்ல வேண்டுகிறேன்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடு).

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நாம் மூன்று பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கக் கூடாது, தயவுசெய்து நீங்கள் அமருங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் வியாழக்கிழமை (30-5-1996) காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

9. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

10. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

21892